
# பூவரசு

*poovarasu*



இனிய தமிழ் ஏடு


தை: 1995

நான்காவது ஆண்டுமலர்.

# SENNTHUTAS

## செந்தூராஸ்

## ASIAN SUPER MARKET




அன்புடன் அன்பர்கள் நண்பர்களுக்கு।
பொன் (BONN) நகரிலும் உங்களுக்காக

**செந்தூராஸ்**

உங்கள் ஆயிரம் வாசல் இதயம் எங்கள் செந்தூராஸ் அங்கு உதயம்
உங்கள் தேவைகள் இங்கு நிறையும் எங்கள் சேவைகள் எங்கும் பெருகும்

***தேவைகளில் என்றும் நிறைவு ☼ விலைகளில் என்றும் மலிவு***



திங்கள் கிழமைதோறும் இலங்கையில் இருந்து தருவிக்கும்
ஈரப்பலாக்காய் முதல் இதமான இளநீர் வரை
பொன்னாங்காணி, வல்லாரை முதல் பொன்னான கீரை வகை
பலா, மா, வாழை முதல் நாவினிக்கும் கனி வகைகள்
ஆர்கலி தந்த அனைத்து மீன் வகைகள்
இவற்றோடு அறுசுவை சேர்த்திட
செந்தூராஸ் தயாரிப்புக்கள், அழகழகாய் ஆடை வகைகள்
பழையதும் புதியதும் திரைப்படங்கள்
லெசர் இசைத்தட்டுக்கள் ஒலி இழைகள் இன்னும்— —
*மழலைகளுக்கு அங்கர், நெஸ்ரோமோல்ட், லக்ஸ்பிறே, நெஸ்பிறே,*
*திருமண பிறந்ததின விழாக்கள் ஏனைய வைபவங்களுக்கு*
*அழைப்பிதழ்கள் வாழ்த்துமடல்கள் தயார் செய்ய*
*சமையல் அடுப்புக்கள் பாத்திரங்கள் வாடகைக்கு*

***உங்கள் தேவைகள் எதுவோ ❦ எங்கள் சேவை அதுவே***

Stadthaus U Bahn Haltestelle இல் ஈருந்து 5 நிமிடமும்
HAUPTBAHNHOF/SRI LANKA EMBASSY இல் இருந்து 10 நிமிடங்களில்
ந நடந்து வரலாம்

பொருட்களை பார்சலில் பெற
விரும்புபவர்களுக்கு
NACHNAME
மூலம் அனுப்பிவைக்கப்படும்

மரக்கறி
1 Kg 6.80 DM
முதல்


கடை திறக்கும் நேரம்
தினம் : 9 – 18. 30
வியாழ : 9 – 20. 30
முதல் சனி: 9 – 18. 30

SENNTHUTAS
AM FRANKENBAD 5,
53111 BONN
Tel: 0228 - 631711

SENNTHUTAS
SCHUTZEN STR. 22
44147 Dortmund
Tel: 0231/ 881337
Fax: 0231/ 8280301

# இந்த மலரில்.


- வீ.ஆர்.வரதராஜா
- இந்துமகேஷ்
- குப்பிளான் வை.யோகேஸ்
- க.ஸ்ரீதாஸ்
- வேலணையூர் பொன்னண்ணா
- புஸ்பராணி ஜோர்ஜ்
- ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்
- கொற்றையூர் வாசன்
- பொ.கருணாஹரமூர்த்தி
- சி.கமலநாதன்
- இ.சம்பந்தன்
- அ.வேணுகோபாலன்
- வரதர்
- இராஜன் முருகவேல்
- கே.என்.குணராஜன்
- சி.சிவதுரை
- புஷ்பா
- என். திலீபன்
- என்.கே.மஹாலிங்கம்
- விக்கினேஸ்வரன்
- மஹாகவி
- கன்னிகா சந்திரபாலன்

# Grußadresse

Lieber Herr Maheswaran,


Zu dem 4-järigen Bestehen Ihres tamilischen Kulturmagazins möchte ich Ihnen herzliche Glückwünche aussprechen. Es ist beeindruckend zu hören, welche große Verbreitung Ihre Zeitschrift findet und daß sich Ihre Leserschaft aus verschiedenen europäischen Ländern zusammensetzt. Ich wünche Ihnen weiterhin viel Erfolg und Freude bei ihrem Engagement, tamilische Kultur und Literatur zu erhalten und zu pflegen.

Die Stadtbibliothek Bremen unterstützt dieses Anliegen, indem wir neben anderen fremdsprachigen Literaturbeständen auch tamilische Literatur anbieten. Tamilische Bücher befinden sich seit einigen Jahren im angebot der Stadtteilbibliothek Osterholz und werden, daß kann ich Ihnen als Mitarbeiterin vor Ort erfreut mitteilen, viel ausgeliehen und gern gelesen.

Ihre *Birthe Rupps*
Stadtteilbibliothek Osterholz.

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.

## அன்புடன்.......



*இதுகாலவரையில்
இருதிங்கள் ஒன்றென மலர்ந்த
உங்கள் இனிய தமிழ் ஏடு
பூவரசு
இந்த இதழ்முதலாக
மாதம் ஒன்றென
மலர்கிறது!*

*என்றும் போல்
உங்கள்
ஆதரவையும்
ஆக்கங்களையும்
பூவரசு
அன்புடன் வரவேற்கிறது!*

பூவரசு

முகவரி
" POOVARASU "
Sinniah Maheswaran,
Otto Brenner Allee 56
28325 Bremen
Germany.

## நான்காவது ஆண்டு மலர்.

# பூவரசு

**தை:1995**

## அன்பு வாசக நெஞ்சங்களுக்கு

*வணக்கம்!*

*இன்று உங்கள் பூவரசுக்கு ஐந்துவயது ஆரம்பமாகிறது.*
*புதியதளிர்கள் எழுவதும், பழுத்த இலைகள்உதிர்வதும்*
*இயற்கையோடிணைந்த காரியங்கள்தாம்.*
*உதிர்ந்த இலைகள் மண்ணோடு கலந்து மறுபடி.*
*துளிர்க்கும் தளிர்களுக்கு உரமாகிப்போகின்றன.*
*ஆக —*
*விழுபவையும் அவைகள்தாம்...*
*எழுபவையும் அவைகள்தாம்.*
*மண்ணில்பிறந்து மண்ணில்உலவி மண்ணில் மறைந்து...!*
*நாங்களும் இப்படித்தான்.*
*இருந்தோம், இருக்கிறோம், இருப்போம்!*
*இதில் உறவு என்பது உறுதியானது.*
*பிரிவு என்பது பொய்யானது.*
*பூவரசு இன்று தன் ஐந்தாண்டுப் பருவத்தில் காலடி*
*எடுத்துவைக்கிறபோது —*
*அருகிலிருந்து அதை அணைத்துக்கொண்டிருந்த சிலர்*
*தூரத்தே நின்று விடை பெறுவதற்காய் கையசைத்துக்*
*கொண்டிருப்பது தெரிகிறது.*

*யாருக்காகவும் யாரும் காத்துக்கொண்டிருக்க நேரமில்லை.*
*வாழ்க்கைப்பயணத்தில் நாங்கள் ஓடிக்கொண்டேயிருக்கவேண்டும்.*
*நமக்கு முன்னாலும் பின்னாலும் பலர் ஓடிக்கொண்டிருக்கும்போது*
*பாதையின் குறுக்கே நின்று பார்த்துக்கொண்டிருக்க நமக்கு*
*அவகாசமில்லை.*
*ஓடித்தானாகவேண்டும்.*
*ஓடுவோம்.*

# இதழ்:25

இனிய தமிழ் ஏடு

புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில் பூவரசு தன்பணியை
எப்போதும்போல் தொடரும்.
இலைகள் உதிர்வதும், பூக்கள் வாடி உதிர்வதும் இயற்கையின்
நியதி என்பதை ஏற்றுக்கொண்டு —
புதிய தளிர்களின் செழிப்பில், புதிய மலர்களின் வனப்பில்,
தன் வாசகர்களை ஈர்த்துக்கொண்டு
வேண்டாதவர்களுக்கும் அவர்களுக்குத்தேவையானபோது நிழல்
தந்து, இலக்கிய வேலிக்கால்களாய் நின்று —
பூவரசு தன்பணியைத்தொடரும்.
மண்ணுக்குள் தம்மை மறைத்துக்கொண்டு மரத்துக்கு
உயிரூட்டும் வேர்களைப்போல்,
பூவரசு இனிய தமிழேட்டின் வளர்ச்சிக்கு
உற்றதுணையாய் — தங்கள் பெயர்களை மறைத்துக்கொண்டு —
வேர்களாய் நிற்கும் வாசகர்களின் ஆதரவு பூவரசை
வளர்த்தெடுக்கும்.
"உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம்சொந்தம்!" என அதன் தாரக மந்திரம்
தமிழ்நெஞ்சமெலாம் எதிரொலிக்கும்.
நமது சந்திப்புக்கள் தொடரும்.

அன்புடன் —
சின்னையா மகேஸ்வரன்
(ஆசிரியர்)

ஆசிரியர்
"பூவரசு"

அன்புடையீர்!

எமது பூவரசு இனிய தமிழ் ஏடு நான்காவது ஆண்டு நிறைவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறது. நம்பமுடியவில்லை! நேற்று ஆரம்பித்ததைப் போலிருக்கின்றது. தமிழ்வளர்க்கும் விடாப்பிடியாளர் நீங்கள். நெருங்கிவந்த இறுக்கமான இடையூறுகளையெல்லாம் களைந்து தொடர்ந்தும் பூவரசை தரமுள்ளதாக வெளியிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் முயற்சிக்கு என் பாராட்டுதல்கள். சஞ்சிகை வெளியிடுவதென்பது சாதாரணமானதல்ல. சோர்ந்து போகக்கூடிய சோதனைகள் பல ஏற்படும். "இப்படியும் ஒரு இலக்கியப்பணி செய்யவேண்டுமா?" என்றோர் அலுப்புத் தோன்றிவிடும். "விட்டுத்தள்ளுங்கள் இந்தத்தொல்லையை!" என உங்கள் மனைவியும் மனமுடைந்து கூறலாம். தோள்கொடுத்த நண்பர்கள்கூட சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக சிலவேளை விலகிநிற்கலாம்.
இப்படிப் பல சூறாவளிகளின் போதும் பூவரசு அசையாது நிற்கிறதென்றால் அதற்கு உங்கள் மன உறுதியே காரணம். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள்மத்தியில் பூவரசு இலக்கியச்சுடராக மின்னுகிறது.
உங்கள் உழைப்பு வீணாய்போகவில்லை.
ஜேர்மனியைப் பொறுத்தவரை நாங்கள் வந்தேறு குடிகள் என்பதை நாம் மறந்துவிடலாகாது.அடிமைப்பட்டுள்ள எமது சொந்தமண்ணை மீட்கும் புனிதப்போர் நடந்துகொண்டிருக்கின்றது.எமது மொழி,கலை,கலாச்சாரங்களை நாம் இங்கேவளர்த்துக்கொள்ளும் அதேவேளையில், சொந்தநாட்டின் விடுதலையிலும் நாம் பங்குதாரர்களாகவேண்டும்.வெறும் பார்வையாளர்களாக இருந்தால் நம்மைநாமே ஏமாற்றிக் கொண்டவர்களாவோம்.
விடுதலைக்கு நிழல்கொடுக்கும் பணியை "பூவரசு" செய்வது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். பூவரசு இம்மாதம்முதல் மாதசஞ்சிகையாக மலர இருக்கும் செய்தி உண்மையில் மிக இனிமையான செய்தியாகும். பூவரசு வாசகர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதன் விற்பனையை அதிகரிக்க சகலவழிகளிலும் ஒத்துழைக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.
பூவரசு நான்காவது ஆண்டு நிறைவுவிழா சகல கலையம்சங்களுடன் சிறப்பாகநடைபெறவும்,உங்கள் இலக்கியப்பணி தங்குதடங்கலின்றிதொடரவும் என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

"வாழ்க தமிழ்!
வளர்க பூவரசு!"

அன்புடன்

வீ.ஆர்.வரதராஜா.

என் இனிய பூவரசே!

நான்காவது ஆண்டைக்கடந்து பெருமையுடன் நிற்கும் நின்பணி தமிழ்உள்ளளவும் சிறந்தோங்கிடவும், உன் உயரியகருத்துக்களும் படைப்புக்களும் பன்னெடுங்காலம் வாழ்ந்து புது உலகைச் சமைக்கட்டும் என அன்புடன் வாழ்த்துகிறேன்.

— ஆன்பிரான்சிஸ்
(ஆசிரியர் பூஞ்சோலை)

அழகுத்தமிழே மலரவிழ்த்து
பழகச் சுவைதரும் பூவரசே!
இதழ் இதழாய் தேனாறு
இதற்கு இணை வேறேது?
முரசியம்பும் பூவரசே!
முழுநிலவென வளர் பேரரசே!
தமிழதன் குழவியுன் எழிலினிலே
தந்தேன் மனத்தினை!
வாழ்த்துகிறேன்!

குப்பிளான் வை.யோகேஸ்.

பூவரசு நான்காவது ஆண்டு நிறைவுவிழாவிற்கு எங்கள் இதயம்கனிந்த வாழ்த்துக்கள்பூவரசைத் தவறாது பெற்று வாசித்து மகிழ்கிறோம். மகிழ்ச்சி. எனக்குமட்டுமல்ல தேடகத்தில் வந்து போகும் அத்தனை வாசகர்களுக்கும். கனேடிய இலக்கிய வானிலும் பூவரசு தடம்பதித்து உயர வேண்டும்என்பதே எனது நீண்டநாள் ஆசை. நிறைவேறும் என்ற நம்பிக்கை நிறைய உண்டு. மலரப் போகும் புதியமலர்களும் வாடாமலர்களாய் மலர்ந்து மணம்பரப்ப வாழ்த்துகிறேன்.

ப.அசோகன்
(கனடா.)

எங்கள் இனிய பூவரசே!
நான்காண்டு கடந்து வந்த
பாதையைப் பார்க்கும்போது
எத்தனை எத்தனை மகிழ்ச்சி!
அத்தனை வெற்றியும்
அயராத உங்கள் உழைப்பு!
ஒத்துழைக்கும் வாசகர்களின்
உற்சாக மனப்பான்மை!
மேன்மேலும் பலபல ஆண்டுகள்
நீடூழி வாழ்க! வாழ்க!

— மாலினி குணராஜன்.

என் இனிய பூவரசே!

இங்கு நீ பிறந்ததை நான் காணவில்லை. ஆனால் எல்லோர் கைகளிலும் தவழ்ந்ததைக்கண்டேன். இன்றுநீ வீறு நடைபோட்டு கம்பீரமாக உலாவருவதை என் கண்குளிரக் காணுகின்றேன். இன்பத்தமிழை நேசிக்கும் எங்கள் மனங்களுக்கு இலக்கிய நிழல் கொடுத்து இன்னும் பல்லாண்டுகள்நீ நீடுவாழ வாழ்த்துகிறேன்.

திருமதி பெனடிக்ரா ஞானச்செல்வம்

ஐந்தாவதாண்டில் கால் பதிக்கும்
எங்கள் இனிய பூவரசின் இலக்கியச்
சேவைதொடரவேண்டும் நிலைக்க
வேண்டும் நீடூழிவாழவேண்டும்
என்றுஇதயபூர்வமாகவாழ்த்துகிறேன்.

க.விக்னேஸ்

பூவரசுக்கு நான்கு வயது
பூத்த பூக்கள்தான் எத்தனையோ
பூரிக்கிறது என்மனம்
பூவரசு நீ வாழியவே!

நாடுவிட்டு நாடுவந்து
நாலுபேரோடு நாமும் சேர்ந்திடுவோம்
நமக்கென்ன என்று இருந்திடாது
நம் கலை கலாச்சாரத்தை வளர்த்திடும்
நம் பூவரசு என்றும் வாழவேண்டும்!

கதைகள் கொண்டு
கவிதைகளும் கொண்டு
கலைஞர்களையும் ஊக்குவித்து
சிறுவர்களை மகிழ்வுகொள்ளச் செய்யும்
பூவரசு நீ வாழ்க... வளர்க!
வாழியவே பல்லாண்டு!

**க.ஸ்ரீதாஸ்.**
(நெதர்லாண்ட்)

# வாழ்த்துகிறோம்!

ஆண்டுகள் நான்கினை நிறைத்து
மகிழ்வுடன் ஐந்தில்
அடிபதிக்கும் பூவரசே!
அன்னைத்தமிழுக்கு
அர்ச்சனை மலரான
எம்பினிய பூவரசே...!

இருதிங்கள் மலராய்
இருந்த நீ எம்மிடத்தில்
ஒரு திங்கள் மலராக
ஓடிவரும் செய்திகண்டும்
இலக்கியத்தின் இலக்கணமாய்
இலங்கிநிற்கும் தம்பி
இந்துமகேஷின் துணிவு கண்டும்
புலம்பெயர்ந்த நாடுகளில்
வாழும் இலக்கியத் தேடல்களில்
புண்பட்ட தமிழர் நெஞ்சின்
புண்ணாற்றும் மருந்தாக நீ
புரிந்துவரும் சேவைகண்டும்
வாழ்த்துகின்றேன் நானும் இன்று!
வாழிய பூவரசு நீடு! என்று.

**வேலணையூர் பொன்னண்ணா**
(டென்மார்க்)

# சாரம்



நான் என்ற சொல் தவிர்த்து
நாம் என்ற பதம் எடுத்து
"உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்!" என
முதல்பதியம் நாட்டி, அத்தோடு —
"படைப்பவர் ஆக்கம் தருக
படிப்பவர் ஊக்கம் தருக!" என
ஆர்வலர்கள் நெஞ்சமதில்
அக்கறையாய் உரமிட்டு
பாதுகாத்து வளர்த்தெடுத்த
"பூவரசு"
நாலுமரங்களிலே ஆறுமொட்டுக்கள்
நாலுடன் இருபது இதழ்களாக
நலமான மங்கல மஞ்சனாக
இந்துமகேஷ் ஆசிரியர் உரைநடையில்
என் வாசகர்களைத்தேடி
பூவரசு வட்டம் கூட்டி — அந்த
பூவரசு நிழலில் புதுப்பாட்டுக் கேட்க
புதுக்கவிஞர் பிறப்பெடுத்து
புதுக்கவிதை மழைபொழிய — என்
வாழ்க்கை ஒரு கவிதையென
தன் வரலாற்றைக் கவிபாடும்
தெள்ளுதமிழ்த் தேன்கவிதை
நாம் கேட்டு மனமயங்க
இளம் தளிர்கள் துளிர்த்துவர
பல அறிவுக் கதைகளுடன்
போட்டிகளும் நடாத்திவைத்து
ஔவையின் ஆத்திசூடி கவிபாடி
பல பெரியாரின் வாழ்க்கைதனை
இளம்சிறார்கள் அறியக்காட்டி
தமிழ்நாட்டைச் சுற்றிவந்து, மற்றும்
பல நாடுகளை நாம் அறிய
அந்நாடுகளில்
நடப்பவைகள் நாம் உணர
நாங்கள் நாலுபேர்கள்
சந்திக்க சிந்திக்க

நமது நாட்டின் கலைஞர்களை
நாம் அறிந்து கொள்ள
அவர்களைப் பேட்டிகண்டு
வாழ்க்கைதனைச் சித்தரிக்க
எங்கள் இளம் பெண்களுக்கென
சமையல் கலை கற்றுத்தந்து
உறங்கிக்கிடக்கும்
நம் தமிழ் அரிச்சுவடிகள்
அறிவகம் அறியச் சொல்லி
அணுவிலிருந்து அத்வைதம்வரை
பிரபஞ்சத்தில் ஓர் அறிமுகம்,
அந்தநாள் ஞாபகம்
பகவத் கீதையும் பரிசுத்த வேதாகமும்
எரிமலைகள்
சைவமும் சர்வமத சமரசமும் என
பல்வகை விடயங்களை நம்
அறிவுக்கு எட்டவைத்து
நெடுங்கதைகள்,தொடர்கதைகள்,
சிறுகதைகள்,கட்டுரைகள் மூலம்
இலக்கிய முத்துக் குளியலில்
இலக்கிய இன்பம் காண
இலக்கிய வண்ணமலர்களாக — அந்த
பூவரசு பூவின் இதழ்கள்
முகையவிழ்ந்து சிரித்துவர
அவ்விதழ்களை ஒவ்வொன்றாக நாம்
நாலாண்டு காலத்தில்
முகர்ந்துணர்ந்தோம்!

*பூவரசு பூத்ததொரு*
*பொங்கல் திருநாளோ!*
*அது வேர்விட்டு ஆண்டுகள்*
*நான்குதான் ஆனதோ!*
*வாசகர்கள் ஆதரவு*
*வான்மழையோ — உனக்கு*
*வருடம் முழுவதுமே*
*வசந்தந்தானோ?*
*வீசவது உன்நிழலில்*
*கலைத்தென்றலோ*
*விளைவது உன் கிளைகளில்*
*செந்தமிழ்த் தேனோ?*
*மலர்வதெல்லாம் உன்னிடத்தில்*
*மணிவாசகங்களோ?*
*தமிழர் எம் மனங்களெல்லாம்*
*உந்தன் ஆட்சியன்றோ!*
*திங்கள்தோறும்*
*இனிநீ இதழ்விரிப்பதென்பது*
*எமக்கு இன்பமன்றோ*
*தீபம்போல் ஒளிவீசி*
*எம் சிந்தைகவர்ந்தாய் — அந்த*
*வானம்போல் வளர்வதற்கென்*
*வாழ்த்துக்கள்!*

— ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்.

நாலு ஆண்டுகள்போல்
என்றும் பல்லாண்டு பூ
நாடுவிட்டுநாடுவந்த நம்
மொழிமறவா நல்லவைகள் நீகா வ
நாலுதிக்கும் நம் தமிழ் நீடுழி வாழ்ந்துவ ர
நடுநிலைமை மாறாத நிறைகொடுக்கும் தரா சு
நல்கும் பல கொடைகளை பூவரசு
நீபடைக்க நாம் நுகர
பதியம் வைத்து உரம் இட்டு
நாட்டிவளர்த்த பூவரசில்
நான்கில் பூத்த வண்ணமலரின்
நாலுடன் இருபது இதழில்
சரம் ஒன்று தொடுத்தெடுத்து
உன்னை வாழ்த்தி
நாலாவது ஆண்டுநிறைவில்
உன் பாதமலர் சாற்றுகின்றோம்!
நீ மேலும் பல மொட்டவிழ்த்து
மலர்ந்துவர வாழ்த்துகின்றோம்!
வாழ்க! வளர்க வளமுடன்!!

**புஸ்பராணி ஜோர்ஜ்.**

நான்காண்டுகளை நிறைவுசெய்து,எங்கள் நெஞ்சங்களில் இடம்பிடித்துஐந்தாவதாண்டில் காலடியெடுத்துவைத்து தமிழ்த் தொண்டாற்றிவரும் பூவரசு இனிய தமிழ் ஏட்டுக்கு புதியவாசகிநான் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.பூவரசின்சேவைதொடர எனது பொன்னான வாழ்த்துக்கள்!

— ஞா.வதனி.

---

நம்நாட்டுப் பூவரசு தைமாதப் பனித்துளியில் நனைந்து தமிழுக்கு எழில்சேர்க்கத் தழைத்ததுவோ ஜேர்மனியில்! இங்கு இந்துமகேஷ் ஆசிரியர் உன்வசம் கொண்டு இதழ்கள் தோறும் இனிய பல அம்சங்களைச் சுமந்துவரும் எங்கள் இனிய தமிழ் ஏடே! இன்னும் எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் என்றும் நாம் உன்வசமே!

— திருமதி ஞானரத்தினம்.

---

காலை வெயிலிலும்
களர்நிலத்தும் உவர்நிலத்தும்
ஆழநீர்க் கரையிலும்
சேறும்சகதியுமாம் சதுப்பிலும்
எத்தனை மண்வளத்தும்
ஏற்றபடி நுகர்ந்து
எங்கும் செழித்துநிற்கும்
ஓரோரம் பூவரசு!
அப்பெயரைத்தாங்கி—
சமுதாயப்
பூமியிலே காணும்
பல்வேறுபாடுடைய
பண்புகள்தரும் உண்மை நீ
வளர்த்து உயர்கின்றாய்!
ஆண்டாண்டுதோறும்
உயர்கின்றாய் பூவரசே!
இனிய தமிழ் ஏடே!
நீ வாழ்க!

-அழலாடி.

கனிமொழி தமிழினை
கதைத்திட முடியாமல்
கண்மணி மழலைகள்
கலங்கிடும் நேரம்

இனி(ய) மொழி இதுவென
ஈன்றவர் கூறிட........
இருதிங்கள் ஒன்றென மலர்ந்து
இன்று ஒரு திங்கள் ஒன்றாய் உயர்ந்திட்ட
இனிய எம் பூவரசே
இனி நீ..... எம்மினத்தின்
பூ.... அரசே.

உலகளா நிகழ்வுகள்
ஓரளவும்
கதையொடு கவிதைகள் கட்டுரையும்
கலைவிழாக் கண்டதன்
சொற்பதமும்
கணிசமாய்த் தந்திடும் பூவரசே

தமிழினைக் கற்றால்
தரம்கெடும் என்றும்
பிறமொழி கற்றால்
புகழ்வரும் என்றும்
புலம்பிடும் பித்தர்களுக்கென
புத்தி புகட்டிட
புறப்பட்ட பூவரசே....
இனி நீ.... எம்மினத்தின்
பூ.... அரசே.

நிலையிலா மனிதரை
நேர் நிறுத்த....
நீ.... தொடும் பணியினை
நிலைநிறுத்தி
நீடுழி வாழ்ந்திட
வாழ்த்துகின்றேன்
நின்பாதம்பணிந்தே
போற்றுகின்றேன்!

கொற்றையூர் வாசன்.

பூவரசு கிடைத்தது
பூரிக்க வைத்தது
தன் வேரோடும் இடமெல்லாம்
பூப்பூத்து நின்றது
பள்ளிசெல்லும் பாப்பாக்கும்
பாடங்கள் தந்தது
பல்கலைக்கழகம்போல்
இலக்கிய முத்துக்குளியலும் தந்தது
இதமாக இந்துமகேஷ் கதைகளும் தந்தது
புதுப்பாட்டுப்பகுதியில் கவித்துவம் நிறைந்தது
புவியில் நிகழ்ந்திடும்
செய்திப் பூக்களும் மலர்ந்தது
அழகான வர்ணமுகப்புகள்
கலைநயம் புரிந்தது
சைவசமயமும்
சர்வமத சமரசமும்
தலைநிமிர்ந்திட வைத்தது
பூவரசே உன் புகழ் வாழ்க
உன் புகழ்பாடி நாம் எல்லாம் ஆட
உன் நான்காவது ஆண்டு நிறைவுவிழா
சிறப்புற நிறைவுபெற
என் இதயம் நிறைந்த
வாழ்த்துக்கள்!
வாழ்த்துக்கள்!

**செ.யோகநாதன்.**

# பெண்.

-க.ஸ்ரீதாஸ்

பெண்களின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக குரல்கள் ஒலிக்கின்றன.
அடக்கு முறைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்யப்படுகின்றன.
ஏட்டிலும் மேடையிலும் பெண் உரிமைகள்பற்றி எடுத்தியம்பவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா.
இருந்தும் என்ன?
பெண்ணின் நிலையில் மாற்றம் தெரியவில்லை!
பெண்களின்வாழ்வில்மட்டும் ஏனிந்த இழிநிலைகள் திணிக்கப்பட வேண்டும்?
நெருப்பிலே சீதையைத் தீக்குளிக்க வைத்தது இராமாயணமாயிற்று.
ஆனால் இன்று எத்தனையோ பெண்களை நோகவைத்து தீக்குளிக்கும் சம்பவங்களும் நடந்து கொண்டுதானே இருக்கின்றன?
இவைகளை எந்தச் சரித்திரத்தில் சேர்த்துக்கொள்வது?
பெண் என்றால் பூவும்பொட்டும்வைத்து அலங்காரம் செய்யப்படும் தங்கப் பதுமை அல்ல. அவளும் ஒரு நடமாடும் ஜீவன்தானே? ஏன் சமுதாய வரம்புகளைப்போட்டு கட்டுப்படுத்தவேண்டும்?
இந்த வரம்புகள் வகுக்கப்பட்டது யாரால்?
சமுதாயமா? மக்களா?
மக்களால்தான் சமுதாயத்தை உருவாக்கமுடியும். அதே மக்கள்தான் சட்டங்களையும் உருவாக்குகிறார்கள். அவைகள் ஏன் நல்ல வழிகளாக இருக்கக்கூடாது? இவைகளைப் பெண்கள்விடயத்தில் மட்டும் சமுதாயம் ஒதுக்கி வைப்பது ஏன்?
ஆரம்பகாலத்திலிருந்தே பலவழிகளிலும் ஆணின் ஆதிக்கமே நிலவிவந்தது. அது தொடர்ந்துவந்ததினால் பெண்ணானவள் ஒதுக்கப்பட்டே வந்தாள். மனிதன் வளர்ச்சியடைந்துவந்தாலும் பரம்பரைவழிமுறைகள் என்று சொல்லி பிற்போக்குத்தனமான எண்ணங்கள்,மதக்கட்டுப்பாடுகள், கலாச்சாரம்,பரம்பரைச் சம்பிரதாயம் போன்றவற்றை ஏற்படுத்தி பெரும்பாலும் பெண்களுக்கே திணித்தனர். இப்படியே ஒதுக்கப்படுகின்ற நிலையில் மௌனங்களையே மொழியாக்கி பெண்கள் பேசத்தெரிந்த ஊமைகளாய் இருந்துவிடுகின்றனர்.
உலகில் பெண்கள் சம உரிமையுள்ளவர்களாக வாழ்கின்றார்கள் என்று பேசப்படுகின்றபோதும்,எமதுநாட்டைப்பொறுத்தவரையில் இப்படியான போலிச் சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள் தலைமுறை தலைமுறையாக நடந்து கொண்டுதான் வருகிறது.
இன்னும் பழமைகளில்ஊறி வேதாந்தம் பேசுபவர்களையும் காணமுடிகின்றது அதற்காகவேண்டி எமதுகலாச்சாரங்களையோ,பண்பாடுகளையோ விட்டுவிடச்

சொல்லவில்லை. பரம்பரைத் தீயவழிமுறைகள் ஒழியவேண்டும்.விழிப்புணர்வு ஒவ்வொருவரிடத்திலும் ஏற்படவேண்டும். பரம்பரைக் கௌரவம் என்று சொல்லி பத்தாம் பசலியாக வாழக்கூடாது. இதேவேளை சில பெண்கள் முன்னுக்கு வராமையாலும் இறைவன்விட்டவழி 'தலைவிதி' என்று பாரங்களை சுமத்தி வாழ்பவர்களும் உண்டு.

மேலும் எமது நாட்டில் சீதனம் என்பது ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. இது ஒரு வழிமுறையாகவும் ஒரு பெண்ணைக் கொடுத்து பல இலட்சங்களையும் கொடுப்பதன்மூலம் சமுதாயத்தில் தம்மைப் பெரியவர்களாகக் காட்டி அதைக் கௌரவமாக எண்ணுபவர்களும் உளர்.



பணத்தால் எவரும் பெரியவராவதில்லை. மனத்தால் பெரியவராக வேண்டும். ஒருவகையில் சீதனம்வாங்குபவர்களைவிட கொடுப்பவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். ஒருபரப்புக் காணிக்காகவும் ஒருபவுண் சங்கிலிக்காகவும் எத்தனையோ திருமணங்கள் நின்றுபோன சம்பவங்களும் உண்டு. சீதனச் சீரழிவுகளால் எத்தனையோ பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

எமது மூதாதையர்கள் நல்லவைகளை விட்டுச்சென்ற சந்தர்ப்பத்தில் கெட்டவைகளையும் விட்டுத்தான் சென்றிருக்கின்றனர். இயற்கையில் இருள் இருக்கின்றது. அதற்காக நாம் வெளிச்சத்தை அமைக்கின்றோம். ஆனால் மனிதமனங்களில் உள்ள இருள்களை எதைக்கொண்டு அகற்றமுடியும்? சீதனச்சீரழிவுகளால்மட்டும் பெண்கள்கலங்கவில்லை. சாதி, மதம், அந்தஸ்து, கௌரவம் என்ற போலிப்பதங்களினாலும்கூட அடக்கப்பட்டு அவர்களின்

வாழ்க்கை திசைதிருப்பப்படுகின்றது.நான்கு சுவர்களுக்குள் பூட்டிவைப்பதால் மட்டும் பெண்ணானவள் என்ன கண்டாள்?
நான்கு விடயங்களை அறிவதின் மூலம்தானே சமுதாயத்தில் வாழமுடியும்!
இன்றும் திருமணமாகி ஓரிருவருடங்கள் ஆனபிற்பாடும் சீதனம்கேட்டு அவளை அடித்துத்துன்புறுத்தி சிலரை வீட்டுக்கே அனுப்பிவிடுவார்கள். கணவன்மாரையும் தட்டிக்கேட்கமாட்டார்கள். பிறகு என்ன? நீதிமன்றம்வரை பெண்ணின் வாழ்வுப்பிரச்சினை செல்லும். முடிவு விவாகரத்து!
கணவனை இழந்தவள் என்று சமுதாயம் ஒதுக்கிவைக்கும். இவைகள் எல்லாம் கற்பனைகளல்ல. நடைமுறைவாழ்க்கையில் காணக்கூடிய கசப்பான நிஜங்கள்.
ஒருபெண் சந்தர்ப்பசூழ்நிலையால் விதவையாக்கப்பட்டால் முற்றாகவே எம்மவர்கள் ஒதுக்கிவைக்கின்றனர். ஒரு நல்லகாரியத்துக்குக்கூட சேர்த்துக் கொள்வதில்லை. இப்படியானவர்களைக்கண்டால் முகம் சுளிப்பவர்களும், சகுனம் சரியில்லை என்றுகூறுவார்கள். அத்தோடு பல பட்டங்களையும்சூட்டி வெள்ளைச்சேலையை உடுத்தி வேடிக்கை பார்க்கின்றனர்.
இந்நிலை எப்போது மாறும்?
இப்படியானவர்களுக்கு மறுவாழ்வு ஏன் இருக்கக்கூடாது? வாழ்வின் பகுதிகளே கொஞ்சம்தானே.... ஏன் இந்த மனிதசமுதாயம் பேதங்களை வளர்க்க வேண்டும்?
முட்கள் நடுவே மலரும் ரோஜாப்பூவை நாம் விரும்புகின்றோம்.
முட்கள் இருக்கின்றதே என்பதற்காக நாம் வெறுக்கின்றோமா? இல்லையே!
அதேபோன்றுதான் சந்தர்ப்பம் என்னும் முள்ளால் சூழப்பட்டாள். அவளை ஒதுக்கவேண்டுமா? பெண்மைமென்மையானதுஎன்றுமலருக்கு ஒப்பிடுவார்கள். ஆனால் அதேபெண்மையை கெட்டவள் என்று ஒதுக்குகிறார்கள்.
வீரம்பேசும் மானிடர்களே! விந்தையான செயல்களைக் களையுங்கள்.
பெண்களின் மறுமலர்ச்சிக்கு வழிகோலுங்கள். இதேசமயம் பெண்களும் அடிமைத் தனங்களுக்கு எதிராகத் தாங்களும் போராடவேண்டும்.
மூடநம்பிக்கையிலே மூழ்காது அவைகளை எதிர்த்துவாழப் பழகிக்கொள்ள வேண்டும்.ஒருசிலர் விரும்பாதவாழ்க்கையைக்கூட விரும்பியேஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவைகளைத் தட்டிக் கேட்கும் மனப்பாங்கு பெண்களுக்கு வரவேண்டும். அப்போதுதான் முற்போக்கான சமுதாயம் ஒன்று உருவாகும்.



**பூவரசு**

## 4வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதை,கவிதை,கட்டுரைப்போட்டி முடிவுகள்.


### சிறுகதை

முதற்பரிசு —
*"நட்பு"*
**மா.தியாகேஸ்வரன்**
(Bochum, Germany)

இரண்டாவது பரிசு —
*"நிலவை விழுங்கிய முகில்கள்"*
**பவன் கணபதிப்பிள்ளை**
(Grigny, France.)

மூன்றாவது பரிசு —
*"காயாத புரட்சி"*
**கே.என்.குணராஜன்**
(Bremen, Germany)

ஆறுதல் பரிசு —
*"மாணிக்கத்தொட்டில்"*
**ஆர்.எஸ்.துரை**
(Seramban, Malaysia)



(அனைத்து வாசகர்களுக்குமான ஆக்கத்தேர்வுப் போட்டி முடிவுகள் 100ம் பக்கத்தில்)

**கவிதை:** *எங்கே நீ வாழ்ந்தாலும் என்ன?*

முதற்பரிசு —
**பொ.கருணாஹரமூர்த்தி**
(Berlin, Germany)

இரண்டாவதுபரிசு —
**எழிலன்**
(Lotte, Germany)

மூன்றாவதுபரிசு —
**ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்**
(Völklingen, Germany)

ஆறுதல்பரிசு —
**ஜெரின் எம்.ஜோர்ஜ்**
(Fyllingsdalen, Norge)

**கட்டுரை:** *நாளைக்கு நாங்கள்*

முதற்பரிசு —
**அ.வேணுகோபாலன்**
(Malsch, Germany)


இரண்டாவதுபரிசு —
**சஞ்சயன்**
(Darmstadt, Germany)

மூன்றாவதுபரிசு —
**முஹம்மத் எஸ்.ஆர். நிஸ்த்தார்**
(Rinteln, Germany)

ஆறுதல்பரிசு —
**ஜெயசித்ரா ஜெயகுமார்**
(Zurich, Switzerland)

# அவன்!

ஏதோ ஒரு நோய்
என்னில் தொற்றிக்கொண்டது
இரவுத் தூக்கம்
விடைபெற்றுச் சென்றது.
இதயத்துடிப்பு
ஏற்றம் பெற்றது
அழுகையும்
சிரிப்பும்
அர்த்தமின்றிப்பிறந்தது
உணவும்
கனியும்
உண்ணப்புளித்தது
தனிமை மட்டும்
மனதுக்கு இனித்தது
தையலும்
சமையலும்
தாறுமாறானது
என்
தாய்க்கு என்னால்
தலைவலித்தது
ஏழெட்டு வைத்தியரிடம்
காட்டிவிட்டாள்
என் நோயினை
அவன் மட்டும்
தான் அறிவான்
வாங்கிவைத்தாள்
என் தாய்
வகைவகையாய்
மருந்துகளை
அவன்
வரவு பார்த்த பின்பே
என்
நிலையில் குணம் தோன்றும்
இரண்டு
வார்த்தை கேட்டபின்பே
என்
வாழ்க்கை
அர்த்தமாகும்
உறுதியோடிருப்பேன்
அவன்
உரிமையென்று
வருவான்



என்
விழிகள் பூப்பதற்குள்
விடுதலை
செய்ப்பான்
சுகம் அளிக்கும்
எனக்கு
அவன்
சுதந்திரம் அளிப்பான்.

ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்.

செட்டிநாட்டிலே கோட்டையூரிலேயுள்ள முன்னணி வணிகர்களிலே சிவசங்கர செட்டியாரும் ஒருவர்.முதுசமாகவுள்ள நன்செய், புன்செய் நிலங்கள் ஏராளம். அவரும் தஞ்சாவூரிலே பல ஏக்கர் நன்செய்நிலம் வாங்கிப்போட்டிருந்தார். விடாமுயற்சியுள்ள மனிதர்.
கோட்டையூரிலேநெல்லு, ஓடுகள், அஸ்பெஸ்டாஸ், இரும்புச்சாமான்கள், திண்டுக்கல் இரும்புப்பெட்டியிலிருந்து வைக்கோல்,விறகு,மிளகாய், மளிகைச் சாமான்கள்வரை மொத்தவியாபாரம், கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்தார்.
சீசனுக்கு என்ன சரக்கு மலிவாகக்கிடைக்கிறதோ அதைவாங்கித் தன் கிட்டங்கிகளை நிரப்பிவிடுவார். பின் அச் சரக்குகளுக்கு ஒறுப்பு ஏற்படும்போது அவற்றைச் சந்தைப்படுத்திப் போட்டபணத்தைச் சல்லீசாக இரட்டிப்பாக்கும் சாமர்த்தியசாலி.
வியாபாரத்தில் எவ்வளவுதான் கில்லாடியாக இருந்தென்ன?
மச்சுவீடு, கார், தோப்பு என்று வசதிகள் கூடி என்ன?
அவர்மனைவி சந்தானலக்ஷ்மி திருமணமாகி ஒன்பது வருஷமாகி 'எனக்கும் வயசு முப்பதாச்சுதே, தனது பெயருக்கேற்ப ஒரு குழந்தைச் செல்வமாவது கிடைக்கக்காணமே' என்று வீட்டில் அரற்றிக் கொண்டிருந்தாள். அவர்களுடைய வசதிக்கும் வாழ்வுக்கும் ஜில்லாவில் பார்க்காத டாக்டர்களில்லை. செய்விக்காத வைத்தியமில்லை.
இவர்களின் மனக்குறையை நன்கு அறிந்த அவர்களின் வியாபார முகாமையாளர் சுவாமிநாதன் கணவன் மனைவி இருவரின் சமூகத்திலும் ஒருநாள் சொன்னார். —
'மேற்கே மலையாளத்தையொட்டிய இரத்தினபுரத்தில் சந்திரசேகர சுந்தர ஸ்வாமிகள் என்று ஒரு ஸ்வாமிகள் ஒருவீரபத்திரகாளி கோயிலைச் சேர்ந்தாற்போல் ஆச்சிரமம் அமைத்திருந்து அருள் பாலிப்பதாயும், அவரைப்போய்த் தரிசித்து ஆசிபெற்ற பலருக்குக் குழந்தைப்பாக்கியம் கிடைப்பதாகவும்' தான் கேள்விப்படுவதாகச் சொன்னார்.
தம்பதிகள் சரி அவரையுந்தான் போய்ப்பார்த்துவிடுவோமேயென்று ஒருநாள் பெரிய தாம்பாளத்தில் பழங்கள், மலர்கள், புத்தாடை, பணம், நெய் என்பன நிரப்பிக் காணிக்கையாக எடுத்துக்கொண்டுபோய் ஸ்வாமிகளின் பாதாரவிந்தங்களில் அர்ப்பணித்துவிட்டுத் தமது குறையை இயம்பிநின்றனர்.
ஸ்வாமிகள் அருள்வாக்கு அருளினார்கள்.
"கவலைவிடும் பிள்ளாய்.... நீங்கள் இருவரும் ஸ்ரீ சடாட்சரமந்திரம் எழுதப்பட்ட இந்த அட்சரக் கூட்டினை அரையிலே தரித்துக்கொண்டு இன்றிலிருந்து ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் ஜெகத்பாந்தவி ஜெகதீஸ்வரியை நினைத்து விரதமிருந்து அந்நாட்கள்தவிர்ந்த நல்லோரை சேரும் பூர்வபக்க சுபநாட்களில் சம்போகம் செய்துவருவீர்களாயின் இருபத்தியொரு வாரத்தினுள் நல்லசேதிவரும்... கவலைவிடுத்துச் சென்று வாருங்கள்!"

**பொ.கருணாஹரமூர்த்தி**

# சந்திர சேகர சுந்தர ஸ்வாமிகள்.



தம்பதியர் தமக்கு நல்லகாலம்பிறந்துவிட்டதாக எண்ணி ஸ்வாமிகளின் பாதங்களை மீண்டும் வணங்கித்திரும்பினர்.

சிவசங்கரன்செட்டியார் தம்பதியின் பென்ஸ்காரையும், உடை, நடை, பாவனைகளையும், ஆடையாபரணங்களையும், ஆளணி அம்பாரத்தையும் நோக்கி அவர்களின்செல்வநிலையை உய்த்து அறிந்துகொண்ட ஸ்வாமிகள் இனிமேல் இவர்களின் யாகங்களிலும், சேவித கிரியைகள், கடமைகளிலும் தனது வண்டி ஓடும் என்று கணக்குப் போட்டுக்கொண்டார்.

மூன்றுமாதங்கள் சென்றன. ஒருநாள் வீட்டிலே சோபா, மேடா, மற்றும் திண்டுகளை தாளந்தூரிகை ஒன்றினால் தூசு தட்டிக்கொண்டிருந்த சந்தானலக்ஷ்மிக்கு தலையைச்சுற்றிக்கொண்டு மயக்கமாகவந்தது. டாக்டர் அழைத்துவரப்பட்டார்.எல்லோரும் ஆச்சர்யப்பட அவர், அவள் கர்ப்பமாக இருக்கும் விஷயத்தை உறுதியாகச் சொன்னார். சந்தோஷமுகில்கள் பல பதிந்து வந்தன.

சந்தானலக்ஷ்மியின் மாமியார் ஒருசிப்பம் மிளகாய்கொண்டுவந்து அவருக்குத் திருஷ்டிசுற்றி எரித்தார்கள். எங்கும் சங்கீதம் பூசியதுபோலிருந்தது. அனைவரும் குதூகலித்தனர்.

செட்டியார் மீண்டும் ஏராளம் காணிக்கைகளுடன் ஸ்வாமிகளிடம் போய் நன்றிநவின்று வந்தார்.

நிஷ்டைகலைந்த ஸ்வாமியார் திருவாய் மலர்ந்தார்.

"எல்லாம் அகிலாண்ட நாயகி... பரமானந்தன்தேவி சித்தம். உனக்காக அவள் சிலதிருவாக்குகள் நம்மிடந்தந்துள்ளாள். நின்மனைவி பிரசவித்ததும் மூன்று

நாளைக்குள் வந்து மீண்டும் என்னைப்பார்....!"
புறங்கையால் அவரைப்போகும்படி சைகை காட்டிவிட்டு மீண்டும் தபஸிலாழ்ந்தார் ஸ்வாமிகள்.
தேவியின்வாக்கு என்னவாயிருக்கும் என்றஆவலிலும் மனக் குறுகுறுப்பிலும் ஒன்பது மாதங்கள் கழிந்தன.
சந்தானலக்ஷ்மி சூரியன் குஞ்சென ஆண்குழந்தை ஒன்றைப்பிரசவித்தாள்.
வீடே ஆரவாரப்பட்டது. வந்த, கண்ட, நின்ற எல்லோருக்கும் பழங்களும், கற்கண்டும், இதரபட்சணங்களும் பொட்டலங்களில்நிரப்பி விநியோகித்து மகிழ்ந்தனர்.
சிவசங்கரன்செட்டியார் யாருமறியாது ஓடோடிப்போய் ஸ்வாமிகளைப்பார்த்தார். ஸ்வாமிகள் மீண்டும் புறங்கையை உயர்த்தியதும் சிஷ்யர்கள் விலகிக் கொண்டனர். செட்டியாரைக் கண்ஜாடையால் அருகில் அழைத்தார்.
"குழந்தாய்! இவ்வையத்தில் அனைத்து உயிர்களினதும் பிறப்பும் வாழ்வும் இறப்பும் அதனதன் கன்மாவின்படியே அமையும் என்பதனை நீ அறிகுவை!"
செட்டியார் பவ்வியத்துடன் ஆமென்று தலையை ஆட்டினார்.
"....எம்பெருமாட்டி ஸ்ரீதாட்சாயிணியின் திருவாக்குப்படி நீ உனது முற்பிறவியிலும் ஒரு செட்டியாராகவே அவதரித்து பெரும் செல்வம் தேடி ராஜவாழ்க்கை வாழ்ந்துள்ளாய்... வடக்கே கோசலநாட்டின் கங்கைகொண்ட புரத்திலிருந்து உம்முடன் வாணிபம்செய்த நீலமாணிக்கம் செட்டியாருக்கு நீ நெல்லு கொள்வனவுசெய்தவகையில் பத்துக்கிட்டங்கி நெல்லின் பணப்பாக்கி நிலுவையாக உள்ளபோது அவன் இறந்துபோனதால் பின்னாளில் அதை அவர் குடும்பத்திற்கேனும் செலுத்தவேயில்லை. இவ்வகையில் நீ என்றும் நீலமாணிக்கம் செட்டியாருக்குக் கடனாளியே! இப்போது அந்த நீலமாணிக்கம்செட்டியே தனது கடனைத்தீர்த்துக்கொள்ள உன்குடியில்வந்து அவதரித்துள்ளான். இவன் வளர்ந்து ஆளாகித் தன்கடன் தீர்க்கும்வகையில் உன்சொத்துக்களையெல்லாம் அழித்து உன் குடும்பத்தைக் கஞ்சிக்கலையம் சுமக்கவைத்துவிட்டுத் தானும் சாராயம் கஞ்சா என்ற எல்லாப் போதைவஸ்த்துக்களுக்கும் அடிமைப்பட்டுப் போய் அரைவாசி ஆயுளுக்குமுதலே இறந்துபடுவான். இதுவிதி!"
சிவசங்கரன்செட்டியார் ஸ்வாமியின் வார்த்தைகள்கேட்டு கொஞ்சம்கொஞ்சமாய் உறைந்துபோனார். ஸ்வாமிகள் பேசிமுடித்ததும் அதிக பிரயாசைப்பட்டு வாயைத் திறந்து கேட்டார்.
"இதற்கு ஸ்வாமிகள் பிராயச்சித்தம் ஏதாவது பண்ணக்கூடாதா?"
கண்களைமூடித் தபஸில் இருப்பதுபோல் மௌனமாகவிருந்த ஸ்வாமிகள் மேலும் மூன்றுநிமிடங்கள்கழித்து தலையை மேலும்கீழும் பக்கவாட்டிலுமாக அசைத்துவிட்டுக் கண்களைத்திறந்து சுற்றுமுற்றும் பார்த்தார். அருகில் யாருமில்லையென்பதை ஊர்ஜிதம் செய்துகொண்டு மீண்டும் கண்களை மூடிக்கொண்டு செப்பலானார். —
"ஒரேயொரு வழிதானுண்டு. மனதைத் திடம்செய்துகொண்டு ஐந்தாறு நெல்மணியை எடுத்து அதன் வாயில்போட்டு விஷயத்தை முடித்துவிடு!"
செட்டியார் அதிர்ச்சியால் 'ஆ'என்றவர் பின்பு ஆழ்ந்து சிந்தித்தார்.
"அரைவாசி ஆயுளிலே முடியப்போகிறவன். என்னைவேறு பக்கிரியாக்கி

விடுவானாமே! இவ்வளவு சொத்துசுகம் இருந்தும் உள்மனது இதெல்லாம் காணாது என்பதுபோலத் தவித்துக்கொண்டிருக்கு. நாளைக்குத் திருவோடு சுமக்கும் நிலையை எப்படித்தாங்குவேன்...? ஸ்வாமிகள்... அந்த மகான் தெரியாமலா சொல்கிறார்? கொடுத்தவனே எடுத்துக்கொள்கிறான்... இதிலே என்ன தப்பிருக்கு?"

ஒரு முடிவுக்கு வந்தவராகிச் ஸ்வாமிகளிடம் விடைபெறுகையிலே அபயம் அளிப்பதுபோல வலதுகரத்தை வைத்துக் கொண்டு சொன்னார்.—

"எல்லாம்முடிந்து ஆசௌஷம் கழிந்தபின்னர் ஒரு யாகம் செய்யவேண்டியிருக்கும்... போய்வா!"

இரண்டுநாட்கள் கழித்து மனைவி குளித்துக்கொண்டிருக்கும் நேரம் இறைவன்மேல் பாரத்தைப் போட்டுக்கொண்டு குழந்தையின் வாயிலுள் நெல்லைப் போட்டுவிட்டார் செட்டியார்.

மூச்சுத்திணறிக் குழந்தை இறந்தது.

'என்ன இவ்வளவு நாழி தூங்கிறானே மகன்' என்று வந்து தூளியைப் பார்த்த சந்தானலக்ஷ்மி தரையில் புரண்டு கதறினாள்.

யாரால் அவளுக்கு ஆறுதல் சொல்லிவிடமுடியும்?

அந்த மனையில் பரவியிருந்த குதூகலமும் ஆனந்தமும் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது.

பலநாட்கள் யாருடனுமே பேசாமல் விட்டத்தைப்பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஸ்வாமிகள்ஆக்ஞைப்படி தங்கச்சங்கிலி, 10001 ரூபா பணம், பசுமாடு, பீதாம்பரம் வேஷ்டி, குடம்குடமாய் நெய் என்பன வைத்து பாரிய யாகம் நடாத்தப்பட்டது.

மறு ஆண்டு சந்தோஷம் சற்றே அவர்கள்வாழ்வில் தலைகாட்டியது.

சந்தானலக்ஷ்மி மீண்டும் கர்ப்பவதியானாள்.

ஸ்வாமியாரால் சிவசங்கரன்செட்டியாரின் யாகத்தையும் காணிக்கைகளையும் மறக்கமுடியுமா என்ன?

மறுபடியும் செட்டியாரைத் தனிமையில் அழைத்தார்.

'மறுபடி என்ன சொல்லப்போகிறாரோ?' என்று பயந்த செட்டியார் தயங்கித் தயங்கி இதயம் அடிப்பது காதுக்குக்கேட்க சேவித்தபடி ஸ்வாமியார் அருகில் போனார்.

"குழந்தாய்...!விதி வலியது என்பது நீ அறியாததல்ல. உன்மனைவிக்கு ஒரு பெண்குழந்தை ஜனிப்பாள். ஆனால் உனது கன்மம் நீ புத்திர பாக்கியத்தை அனுபவிக்க முடியாதபடிசெய்யும் கொடுமையுடையதாகவுள்ளது. உன் விடலைப்பருவத்தில் எப்படி ஒழுக்கமானவனாக இருந்தாய்? உன் வெளியூர்ப்பயணங்களின்போது எத்தனை இரவுகளை உல்லாசவிடுதிகளில் கழித்தாய்.. எத்தனைபெண்களைச்சுவைத்தாய் என்பதை நீயே அறிவாய்!

இவை நீ அறிந்து செய்த பாவங்கள். ஆனால் நீ முன்பிறப்பில் செய்து இப்போது அறியாது இருக்கும் வேறுசிலவற்றையும் தேவி என் தரிசனத்தில் தேவவாக்காக அருளியுள்ளாள். கேள்...! அன்றும் நீ புலன் வழி செல்லும் காமுகனாகவே கழித்திருக்கிறாய்! உன்வாழ்க்கை வசதிகளும் உனக்குத் தவறுகளிழைப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துவிட்டன.

உன்கால் கர்ப்பிணியாகக் கைவிடப்பட்டோர் தொகை. அதிலும் சித்திராங்கி என்ற உங்கள்வீட்டு வேலைக்காரப்பெண்ணை இரவில் மனைவியைப்போல

மஞ்சத்திற்கழைத்துச் ஸரஸங்கள்பண்ணி வாழ்ந்திருக்கிறாய். உன் உறவால் அவள் கர்ப்பிணியானபோது நாட்டுவைத்தியரைக் கூப்பிட்டுக் கருக்கலைப்புச் செய்வித்ததில் அவள் இறந்துபோனாள். இப்போது உன் மனைவிவயிற்றில் கருக்கொண்டிருப்பவள் அதே சித்திராங்கிதான்!"

ஸ்வாமிகள் சிறிது நிறுத்தியதும் செட்டியார், "என்ரை பரமசிவனே! அவ்வளவு பாவியா நான்?" என்றபடி தன் முகத்தைப் பொத்தினார்.

ஸ்வாமிகள் தொடர்ந்தார்.—

"உன் விதியை நான் சொன்னேன். கலங்குவதால் பயனில்லை. மேலே கேள்! இவள் வளர்ந்து பருவமெய்தியதும் ஒழுக்கம்தவறிய பாதையிலேயே நடப்பாள். உன் கண்முன்னாலேயே சோரம்போய் உன் கௌரவம் செல்வாக்கிற்கு அடுக்காதவகையில் உன் அந்தஸ்திற்குக் குறைவான இளைஞர்களுக்கெல்லாம் ஆசைநாயகியாவாள்.பலமைனர்கள் உன் வீட்டைச் சுற்றிக் காத்துக்கிடப்பர். நீ யாருக்காவது அவளைத் திருமணம் செய்து வைத்தாலும் அடங்காத காமம்கொண்டு பல புருஷர்களை நாடி ஓடும் ஓடுகாலியாகவேயிருப்பாள். கண்ட நிண்டவனெல்லாம் உன்னை மாமா என்று அழைப்பான். இவளால் உனக்குத்தலைக்குனிவுண்டாகும்.!"

'மாமா...மாமா...மாமா...மாமா...!!!!'

காதினுள் சமுத்திர இரைச்சல்போல் கேட்டது.

"இந்த அவமானத்தினின்றும் தப்பிக்கும் மார்க்கந்தான் என்ன?"

"தேவிமேல் பாரத்தைப்போடு...மனத்தை மீண்டும் கல்லாக்கிடு...சிறிது தூள் பாஷாணந்தான் வழி...பின்பொரு யாகம் செய்திட்டால் சரி!

இரண்டாவது சுடரையும் சிவசங்கரன்செட்டியார் ஊதியணைத்தார்.

பெற்றவள், "என்னதோஷமோ...என்ன பாவமோ?" என்று தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு அரற்றியதைப்பார்த்து ஊரே கலங்கியது.

மீண்டும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது.

வருஷம் ஒன்று ஓடிமறைந்தது.

சிவசங்கரன் செட்டியார்வீட்டுச் சந்தோஷச் செடிகள்சில மீண்டும் முகிழ்த்தன.

சந்தானலக்ஷ்மி மீண்டும் கற்பம் தரித்தாள்.

இந்தச்சிசுவுக்கும் இறைவன் என்ன எழுதியிருக்கிறானோ என்பதையிட்டு மிகவும் பயந்தாள்.

'இந்தச்செல்வத்தையும் இழக்கநேர்ந்தால் மனைவியை உயிருடன் பார்க்கவே முடியாதென்பதைச் செட்டியாரும் நன்கு அறிவார்.

குழந்தை பிறந்தது.

குழந்தையைப்பராமரிக்க அனுபவமுள்ள விஷேஷ தாதியை நியமித்தாள் சந்தானலக்ஷ்மி.

'எது நேரினும் நேரட்டும். இனிமேல் போய்ச்சாமியாரைப் பார்ப்பதேயில்லை!' என்ற உறுதியுடன் இருந்தார் செட்டியார்.

மாதங்கள் பலவாகியும் செட்டியார் தன்னைவந்துபாராதது ஸ்வாமிகளின் உடலில் நமைச்சலை உண்டுபண்ண —

செட்டிநாட்டிலிருந்து தன்னிடம்வந்த சிலரை உசாவி சிவசங்கரன்செட்டியார் தம்பதியினருக்குக் குழந்தைபிறந்ததை அறிந்துகொண்டார். செட்டியாரைத் தன்னைவந்து பார்க்கும்படி ஆளனுப்பினார்.

செட்டியார் அசைவதாயில்லை. மேலும் சிலமாதங்கள் பொறுத்துப் பார்த்தார். ஊஹூம்! ஒன்றும் நடக்கவில்லை!
தாங்காத ரௌத்ரத்துடன் தானே நேரில்சென்று பார்த்துவிடுவதென்று தீர்மானித்து ஒருநாள் காலையில் செட்டியார்வீட்டிற்கே எழுந்தருள் விஜயம் செய்தார்.
சந்தானலக்ஷ்மி வீட்டின் பின்தளத்தில் தாதியுடன் சேர்ந்து குழந்தைக்கு குளிக்கவார்த்துக்கொண்டிருந்தாள். கூடத்தில் கணவனுடன் யாரோ உரக்கப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுக் குழந்தையைத் தாதியிடம்கொடுத்து விட்டு வந்து கதவிடுக்கினூடு பார்த்தாள்.
அவளுக்கு சாந்தரூபியான சந்திரசேகர சுந்தரஸ்வாமிகள் கோபமாகத் தன் கணவனின் முகத்துநேரே கையைநீட்டி ஆட்டிஆட்டிப் பேசிக் கொண்டிருந்ததுகண்டு பெருவியப்பு.
'அப்படி என்னதான் பேசிக்கொள்கிறார்கள்?' என்பதைக்கேட்கக் காதைக் கூராக்கினாள்.
"ஏலே...மின்ன தங்கள் கடனை, பழியைத் தீர்க்கவென்று பிறந்த ரெண்டு பிள்ளைகளையும் கொண்டாயில்ல... அந்தப்பாவங்களைக் கழுவிக்கத்தான் இந்தப்பிள்ளையும் வந்து ஜனிச்சிருக்குகாணும். ஆத்தாவந்து வாக்குச் சொன்னா... உனக்கு மங்குதிசை ஆரம்பிச்சிருக்கிறதைச் சொல்லத்தான் ஆளனுப்பிச்சேன்...அல்ல...எனக்கென்ன தலைவிதியா ஓய்! உன்கிட்ட ஜதையைத் தேய்ச்சுக்கிட்டு ஓடியாற...?"
ஸ்வாமிகள் பேச்சு வழமையிலிருந்து மாறுபாடாயிருக்க...இவர் ஏதாவது 'லாகிரி வஸ்து' பாவித்துவிட்டாரோ? எனச் செட்டியார் எண்ண ஸ்வாமிகள் தொடர்ந்தார்.—
"இவன் வளர்ந்து குடிகாரப்பயலாவான். சூதாடிப்பயலாயிருப்பான், உன் செல்வமெல்லாம் தம்பிடியில்லாமல் கரைத்துத் தட்டுவாணிப் பயலாய் வேறு இருப்பான். சரியான கூத்திக் கள்ளன். ஒன் முகத்திலை கரி பூசவென்னே ஜனிச்சிருக்கான்ஓய்... உன்னையே எட்டி உதைக்கப்போறான் பார். உங்கதையே அவன் கையிலைதான் முடியப் போகுதுவே!"
"அவன் எது வேணுமென்றாலும் பண்ணட்டும்.. நான் ஏற்கனவே செய்த பழிகளுக்கு என் பிள்ளை கையாலே இறந்துபடுவதுதான் தெய்வ சித்தமென்றால் அப்படியே இறந்து போகிறேன்...ஆனா...என்ரை இன்னொரு செல்வத்தையும் அழிக்கிற திராணி என்கிட்ட இல்லை! ஸ்வாமிகள் என்ன பிராயச் சித்தம் வேணுமின்னாலும் சொல்லுங்கோ!..கொலைபாதகம் மட்டும் வேணாம்!"
செட்டியார் கண்கள் நீரைச்சொரிய உடல் விதிர்விதிர்த்து ஸ்வாமிகளின் கால்களைக் கட்டிக் கொண்டு கெஞ்சினார்.
"உன்னால முடியலேன்னா சித்த உன் மனைவியை ஏதாவது சாக்குச் சொல்லி வெளியே அனுப்பிச்சுடு... நானே உனக்காக காரியத்தை முடிச்சிடறேன்.. அதுக்கோசரம் பத்தாயிரத்தியொரு ரூபாய் தெட்ஷிணை வைக்கணும்... அதொருமுறை..."
"டாய் சண்டாளா...நீதானா இத்தனைக்கும் சூத்திரதாரி?" என்றபடி கதவை நெட்டித்தள்ளிக் கொண்டு ரௌத்திரரூபிணி பத்திரகாளியாகச் சீறியபடி ஒரு வெட்டரிவாளுடன் வெளிப்பட்டாள் சந்தானலக்ஷ்மி.

"அற்பநாயே!...உனக்குப் பொன்னும் பணமும்தான் வேணுமென்றால் தவித்துவிட்டிருப்பேனே... முத்துமுத்தாய் என் செல்வங்களை ஒன்றுமில்லாமல் பண்ணிவிட்டியேடீ பாவி!" வெட்டரிவாள் உயர்ந்து பதிய ஸ்வாமிகள் சிரம் அறுந்து முற்றத்திற்கு உருண்டது.

சந்திரசேகரசுந்தரஸ்வாமிமேல்,வீரபத்திரகாளிவந்து அவரையே தற்கொடையாக எடுத்துக் கொண்டாள் என்று பின்னர் ஊரில் பேசிக்கொண்டார்கள்.

---


உங்களுக்குத்தேவையான

**இலங்கை-இந்திய எழுத்தாளர்களது நாவல்கள்,**

இராமாயணம், மகாபாரதம்,
பாரதியாரின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள்
பாரதிதாசனின் கதைகள்,
கவிஞர் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்(10 பாகங்களும்)
கண்ணதாசனின் கதைகள்,கட்டுரைகள்,திரைப்படப்பாடல்கள்,
உட்பட தமிழகத்தின் தலைசிறந்த நாவலாசிரியர்களான அகிலன்,
பார்த்தசாரதி, லஷ்மி, சிவசங்கரி ஆகியோரது நாவல்கள் —

திருமுருக கிருபானந்த வாரியார், கண்ணதாசன்,
புலவர் கீரன், பாலகிருஷ்ண சாஸ்திரிகள் ஆகியோரின் சொற்பொழிவுகள்,
பட்டிமன்றம், வழக்காடுமன்றம் அடங்கிய

**ஒலிப்பதிவு நாடாக்கள்**

என்பனவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்!

பக்திமணம் கமழும் —

திருமுருக கிருபானந்தவாரியாரின்
இராமாயணம் (முழுவதும்) 8 கசற்றுகள்
மகாபாரதம் (முழுவதும்) 10 கசற்றுகள்
திருப்புகழ் பாடல்கள் 5 கசற்றுகள்
திருப்புகழ் விரிவுரை 5 கசற்றுகள்
தர்மபுரம் சுவாமிநாதனின் திருவிசைப்பா,திருப்பள்ளியெழுச்சி,தேவாரம்,
திருவெம்பாவை, பெரிய புராணப்பாடல்கள்
என்பனவும் கிடைக்கும்.

தொடர்பு முகவரி —
Mr.S.Kandasamy, Langlütjensand 2, 28259 Bremen, Germany.
Tel:- 04 21/ 58 50 42.

பழமையில் புதுமை காணவிழையும்

# நடன ஆசிரியை யாழரசி!

பரதக்கலையின் பழமையும் பெருமையும் உலகப்புகழ்பெற்றது. ஆனால் பரதநாட்டியம் நடைபெறும்போது அதை வெளிநாட்டினர் ரசிக்கும் அளவுக்கு நம்மவர் ரசிப்பது கிடையாது. அங்கே மேடையில் நடனம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இங்கே பார்வையாளர்கள் குடும்பக் கதைகளை கதைப்பதும் உண்டு.

இந்தநிலையை மாற்ற சில நடனஆசிரியர்கள் சில உத்திகளைக் கையாள்கின்றனர். நடன மாணவிகள்தாங்கள்கற்ற நடனமுத்திரைகளின் மூலம் ஒரு கருத்தை வெளிப்படுத்தலாம் இதனால் நடனத்தை இரசிக்கும் ஆர்வம் பார்வையாளர்கள் மத்தியில் அதிகரிக்கின்றது. தமிழீழத்தில்நடைபெறும் போர்க்காலச்சூழலை பரதநாட்டியத்தின்மூலம் மக்களுக்குத் தெளிவு படுத்தும்முறை அங்கும்வெற்றிகண்டுள்ளது. வெளிநாடுகளிலும்நல்லபலனை அளித்துள்ளது. பரதக்கலையின் தனித்துவம் பாதிக்கப்படாத வகையில் பல புதிய முத்திரைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஜேர்மனி தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் இவ்வாறான புரட்சி நடனங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது. அவை நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளன. இளைய தலைமுறை நடன ஆசிரியர்களில் ஒருவரான செல்வி. யாழரசி சந்திரபால் பழமையிலும் புதுமைகாண விழைகிறார். பரதநாட்டியத்தில் பரதக்கலையரசி பட்டம் பெற்றுள்ள இவர் பிறேமன். பிறேமவேட தமிழாலயங்களில் நடன ஆசிரியையாகப் பொறுப்பேற்றுள்ளார்.பரதம்பயிலும்மாணவர்கள் நடனத்துடன் எழுத்துப்பயிற்சிகளையும் கற்க வேண்டும்என்பதில் செல்வியாழரசி ஆர்வமாக இருக்கிறார்.

பரதத்தில் ஒவ்வொருஅசைவுக்கும் அர்த்தம் உண்டு. அதனை வெளிநாடுகளில் பரதம் பயிலும் பல மாணவர்கள் எழுத்துப் பயிற்சி மூலம் அறிவதில் ஆர்வம் காட்டுவதில்லை.



அடையாறு லக்ஸ்மணனின் மாணவியான நிருத்தசொரூபியின் மாணவி செல்வி. யாழரசி சந்திரபால் 1993ம் ஆண்டில் கொழும்பு கதிரேசன்மண்டபத்தில் தமது அரங்கேற்றத்தை நடாத்தினார். இவர் ஜேர்மனி கலை பண்பாட்டுக் கழகத்திலும், ஜேர்மனி தமிழ் மாணவர்அமைப்பிலும் உறுப்பினராகவுள்ளார். தமிழ்மக்களின் துயர்துடைக்கும் விடுதலைப் போராட்டத்தில் கலைத்தொண்டு புரிவதும் இவரின் முக்கியநோக்கங்களில் ஒன்றாகும்.

— வீ.ஆர்.

# வள்ளுவன்காட்டும் வாழ்க்கைத்துணைநலம்.

தமிழர்கள் என்று சொல்லிக்கொள்வதிலே நாங்கள் பெருமைப் படுகிறோம்.
ஏனென்றால் எங்கள்மொழி.உலகில்சிறந்த கலைவளம்,காவிய வளம், எதையும் தன்னுள் அடக்கும் சொல்வளம்கொண்டதும் வாழ்வின் உறுதிப்பொருள் நான்கின் இறுதிப்பொருளுரைத்த புலமைகொண்டதுமாகும் என்பதால்.
ஆனால் சிரிப்புக்கிடமான ஒரு உண்மை யாதெனில் தமிழைப்பற்றி தமிழன் உணர்ந்து கொண்டது ஒருசிறிதுதான்.
வியப்பாகவில்லையா?
ஒருசிறிது உணர்ந்தே பெருமைகொள்ளின் முழுதுணர்ந்தால் தமிழைப்பற்றி அது எத்தகைப் பேரின்பம்!
தமிழன் தமிழைப்பற்றி ஏன் முழுதுணராமல் போனான்? அவன் உணர்ந்து கொள்ளாமல் மாயைகளினால் — போலிகளினால் — பொய்களினால் தடுக்கப்பட்டிருந்தான்.
இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடந்த இரண்டுவருடங்களுக்கு முன்புவரை தமிழைப்பேசியதால் தமிழன் ஆனவனும், ஆரியனைப் பணிந்து அவன்மனம்குளிரவைத்து வயிறுகழுவத்தோன்றியதமிழறிஞர்களும், தமிழைத் தமிழால் — தமிழர்பண்பாட்டால்சிந்தியாமல் வடமொழியூடாக,வேதங்களினூடாக, சாணக்கியம் அர்த்தசாத்திரம் மனுநீதியூடாக தமிழைப்பற்றிச் சிந்தித்தும் தமிழால்சிந்திக்கமுற்பட்டவனையும் தடுக்கிவிழுத்திவந்தமையும்தான் தமிழன் தமிழை உணரமுடியாமல் போனமைக்குக் காரணங்கள்.
வடமொழி, வைதீகமதம்தொடங்கி இன்றைய ஆங்கிலம் கிறீத்தவம் இந்திவரை அன்னியனை அடிபணிந்து — அவனைப்பணிந்து, தமிழின்

---

வாழ்க்கைத்துணைநலம் அதிகாரத்திலே 5வது குறள் —

தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

— இந்தக்குறளுக்கு இன்றுவரை பொருளுரைத்த அறிஞர்கள் "கற்புக்குப் பங்கம் வந்துவிடுமென்பதால் தெய்வத்தையே தொழாமல் கணவனைத் தெய்வமாக வழிபடும்பெண், பெய்யென்று சொன்னால் உடனே மழைபொழியும்!" எனப் பொருளுரைத்தனர்.
பெண்ணடிமைப்பண்பை முதன்மையாகக்கொண்ட ஆரியச்சதியால் உரைக்கப்பட்டஇந்த உரையைப்போற்றி ஆகா கற்புநெறியின் சிறப்பே சிறப்பு என்று போற்றிய சிந்தனைமடம் கொண்ட தமிழினமே! —
அறம்,பொருள்,இன்பம்,வீடு இவற்றின் இறுதிநிலையை — பயனை இனியொரு முடிவிற்கிடமில்லை என்னும்படி உரைத்த மாப்புலமைவள்ளுவன் இப்படி

பெருமையை மறைத்து தான்வயிறுகழுவிய தரம்கெட்ட தமிழறிஞர்கள்தான் இந்தநிலைக்குக் காரணமாயிருந்தார்கள்.

இந்தநிலையில் இருந்து மீளவும்முடியாமல், முனையாமல், அந்தச் சமூக விபச்சாரிகள்உரைத்த பொய்மயக்குரைகளின் வழியே தமிழிலக்கியங்களையும், தமிழ் அறிவியலையும் — தமிழ்ப்புலமையையும்பற்றிச் சிந்தித்து,பொய்யாமொழி தெய்வப்புலமை எனப்பட்ட குறளில் கூடப்பிழைகாணப்பட்டது. இன்றைய தமிழர்களால். என்னே பரிதாபம்!

கடந்த இரண்டாண்டுகளுக்குமுன்னர் ஐரோப்பாவிலே கிளர்ந்த எழுத்தாளர்களிடையே 'வள்ளுவனும் பெண்களை வஞ்சித்தானா?' என்றொரு கருத்து விவாதிக்கப்பட்டு பரவியது.

அந்தவிவாதத்திலே வாழ்க்கைத்துணைநலம் — பெண்வழிச்சேரல் என்னுமிரு அதிகாரங்களில் வள்ளுவன்பாடியது சரியாபிழையா? என்று விவாதிக்கப்பட்டதே தவிர வள்ளுவன் இன்றுவரை உரையாசிரியர்கள் உரைத்த கருத்தைத்தான் பாடியிருப்பானா? அல்லது வேறு கருத்துக்கள் மறைந்துள்ளனவா? என்று ஆராயப்படவில்லை. இதுவும் தமிழறிஞர்கள் என்பவர்களின் மடமைதான்.

இந்நிலையைக்கண்டு பொறுக்கமுடியாமல்,ஆரியச்சதியால் உண்மைப்பொருள் மறைக்கப்பட்டு, வள்ளுவன்புலமையும் திராவிடப்பண்பும் சிதைக்கப்பட்டதை உலகுக்குக்காட்ட எண்ணி தமிழின் இலக்கியப்பண்பும் இலக்கணமுறையும் வழுவாமல் பெண்கள் சம்பந்தப்பட்டசில குறள்களுக்குப் புதிய உரையை எழுதினேன். அதில் ஒரு பகுதியை பூவரசு மூலம் வாசகர்களுக்கு வழங்க விரும்புகின்றேன்.

— சி.கமலநாதன்

---

ஒரு நடைமுறைச்சாத்தியமற்ற குறளைப்பாடியிருப்பானாஎன்று சிந்தித்தாயா? தமிழ்சாதியிலே இருக்கக்கூடிய 3கோடிப் பெண்களிலே எந்தவொரு பெண்ணாலும் இவ்விதம் மழையைப் பெய்விக்கமுடியுமா? முடியாது! ஆகவே தமிழினத்திலேயே கற்புள்ள பெண்கள் இல்லையென்பதா வள்ளுவன் முடிவு?

இந்த முடிவை மனதில் கொண்டு, என் மனைவி கற்புள்ளவளா என்றறிய ஒவ்வொரு கணவனும் முற்பட்டு தன் மனைவியிடம் ஒருக்கால் மழை பெய்யப்பண்ணு என்று கேட்பானாகில் என்னநடக்கும்? தமிழினத்தின் குடும்ப அமைப்பே சிதறுண்டு போகாதா?

இப்படிப்பட்ட கருத்தைத்தரும் குறளை வள்ளுவன் பாடியிருப்பானா? சிந்திக்க வேண்டாமா?

உரையாசிரியர்கள் சிந்திக்க விரும்பவில்லை. படித்தவர்கள் ஏன் சிந்திக்கவில்லை? எனவே நாங்கள் சிந்திப்போம்!

இக்குறளின் உண்மை உரை என்ன?
தமிழர் பண்பாட்டையும்,தமிழ் இலக்கணத்தையும்துணைகொண்டாய்வோம்!
தெய்வந்தொழாள் — தெய்வத்தைத்தொழமாட்டாள்,ஆனால் வணங்குவாள்.
தொழுதல் என்றால் தன்னை முற்றாக இன்னொன்றிடத்தில், அல்லது இன்னொருவரிடத்தில் இழந்துநிற்கும் அடிமைநிலை.
எனவே இறைவனிடம் தன்னையிழந்து நிற்கமாட்டாள்.
ஏனென்றால்,அவளுடைய தேவைகள் அவளால் ஆக்கப்படும்,பட வேண்டும்.
எனவே தன்னையிழந்து ஆண்டவனை மன்றாடி நிற்கவேண்டியவளில்லை.
எனவே தெய்வத்தைத் தொழமாட்டாள்.
கொழுநன் — கணவன்,ஆதரவு நல்கி,அணைத்துத் தாங்கி நிற்பவன்.
அதாவது பெண்மையின் மெல்லியல்பையுணர்ந்து அந்தமென்மையிலிருந்து அந்தமென்மையிலிருந்து பிறக்கும் ஆண்மையின் இலக்கணத்தினுள் அடங்காததான அன்பினை ஏற்று, அவ்வன்பைத்தாங்கும் தன்மையனான கணவன் —
ஒரு மலர்க்கொடி மென்மையானது. அம்மலர்க்கொடி பற்றிப்படர அதைத் தாங்கிநிற்கும் கொம்பை கொழுகொம்பு என்கிறதுதமிழ்.
செழிப்புற நிற்பவன் கொழுநன்.
தொழுதெழுவாள் — தொழு என்கிற சொல்லானது வணங்கி நிற்றலை மட்டுமல்லாது கூடிநிற்றல், இணைந்து நிற்றல், இல்வாழ்க்கை என்னும் பொருள்களையும் தருகிறது தமிழ்.
எனவே தொழுதெழுவாள் — தொழுது — எழுவாள் —
இல்வாழ்வில் இணைந்து இல்வாழ்க்கைக்கான காரியங்கள் அனைத்திலும் ஒன்றுபட்டுழைத்து அவ்விதம் ஒன்றுபட்ட உழைப்பினால் அனைத்து நலன்களும் பெற்று (காதலொருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுத்து) எழுவாள்.
எழுதல் — உயர்வடைதல்.
எனவே உயர்வடைவாள்.
வள்ளுவர் வேறோரிடத்தில் கூறியவாறு —
தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்.
ஒன்றுபட்டஉழைப்பால் கூலியெனும்பயனைப் பெற்று நிறைவும் அமைதியும் இன்பமும் பெறுவாள். இவ்விதம் பெறுபவள் பெய்யெனப் பெய்யும் மழை— அதாவது பெய்யெனப் பெய்யும் மழையாவாள். பெய்யென்று சொன்னவுடன் பெய்துதவும் மழையைப் போன்றவள்.
நீண்டநாட்களாக மழையின்றி பயிர்கள் வாடி,வான்மழை பார்த்து நிற்கின்றன. நிலம் களரோடிவெடித்து, கானல்தெறித்து, பயிர்பச்சைகருகி, வறுமைநிலை கொண்டு வெந்து சீரழிந்து எல்லாமே அழிந்துபோகும் நிலையில்,மழையே ஒருக்கால் பெய்து உதவ மாட்டாயா?என்று வேண்டியவுடன் நல்ல மழைபொழிந்து உதவுமானால் எத்தனைநலம் விளையும். எத்தகை இன்பம். துன்பமேயில்லை. அவ்விதமாக வேண்டியவர்க்கு வேண்டியவாறு பெய்யும் மழையைப் போன்றவள்.
முயற்சி திருவினையாக்கும். ஆதலால் இல்லறம்சிறக்க இறைவனை வேண்டாது, கொண்டவனுடன் காரியங்களில் இணைந்துநின்று இல்லறம்

சிறக்கும்படி வாழ்பவள் பெய்யென்று கேட்டவுடன் பெய்யும் மழையைப் போன்றவள் என்பதே வள்ளுவன் கூறிய உண்மைப்பொருளாகும். அறிவு பூர்வமாகவும், நிகழக்கூடிய தன்மையாலும் இக்கருத்தே குறள்போன்ற அறிவுக்களஞ்சியம் தரும் கருத்தாகும்.

வள்ளுவன் பாயிரத்தைப் பாடத் தொடங்கும்போது இறைவனுக்கு அடுத்து வான் சிறப்புஎன்னும் அதிகாரம் மூலம் மழையே உயர்வானது என்று கூறியதையும் நாம் இங்கு நோக்குதல் வேண்டும்.

இவ்வுலக வாழ்வின் இன்பமும் இயக்கமும் இல்லறத்தின்கண் இருப்பதால், இல்லறத்தை நெறிப்படுத்தி நல்வழிப்படுத்துதலை பெண்ணே புரிவதால் நற்குணங்கள் மனைமாட்சிகொண்ட பெண் மழைக்குஒப்பானவள் என்னும் வள்ளுவன் கருத்து மறுப்பதற்கில்லை.

இதே அதிகாரத்தில் 4வது குறள் —

பெண்ணிற்பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண்டாகப்பெறின்.

இவ்வுலகத்தில் கற்பெனப்படுவது ஆண் பெண் இருபாலார்க்கும் உரியதே. பெண்ணுக்குமட்டும்தான்எனப்பொருள்பட உரையாசிரியர்கள் உரைத்திருப்பது போல் வள்ளுவன் கூறியிருக்கவேமாட்டான்.

இவ்விடத்திலே உங்களின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டு வருகின்றேன். குறள்பாக்கள் முழுவதும் ஆணைநோக்கிக் கூறப்படுவது போலவே அமைந்துள்ளதை அவதானிக்கவேண்டும். அதன்படி பொருள் கொண்டால் வள்ளுவன் ஒரு கணவனைநோக்கிக் கூறுகின்றான்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள —

இவ்வுலகத்துச்செல்வங்களில்பெண்ணைப்போல் உயர்ந்தபொருளொன்றில்லை.

யாவுள? என்ற வினாவின் மூலம் கேள்வியெழுப்புகிறார்.

உண்டா? என ஆணைநோக்கி.

இதன்பொருள் மறைபொருள் "இல்லை" என்கிற விடயமாகும்.

எப்போது (உன்னிடத்திலே)கற்பென்னும் திண்மையுண்டாகப்பெறின் —

திண்மை — உறுதி — வலிமைஎனப்பலபொருள்படும்.

அதாவது கணவனிடத்திலே கற்பு என்று சொல்லப்படுகின்ற,பிறர்மனை விழையாமை என்கின்ற திண்மை — சபலமின்மை — மனவலிமை — பரத்தையர் ஒழுக்கமின்மை இருக்குமானால், அந்த உன்நற்குணங்களின்பாற்பட்டு மனைவி, ஆதரவும் பற்றும்கொண்டு மனவேறுபாடின்றி சஞ்சலங்களின்றி ஒன்றிநின்று இல்லறம் சிறக்கப்பாடுபடுவாள்.

இவ்விடத்தில் பெண்ணின்சிறப்பு வெளிப்பட்டு இல்லறம் சிறக்கும். கணவனிடம் கற்பெனும் திண்மையின்றேல் இல்லறம் நரகமாகி அழிவில் சென்று முடிகிறது.

இதுவே தமிழ்ப்பெருங்காப்பியம் சிலம்புங்கூறும் — பிறப்பாலும் பண்புகளாலும் உயர்ந்தவளாகக் கண்ணகி யிருந்தும் கோவலனிடம் கற்பென்னும் திண்மை அற்றுப்போனதால் அவர்களுடைய உயரிய இல்லறம் அழிந்து கோவலனும் கொலைக்களப்பட்டான்.கண்ணகியுடன்இணைந்தவாழ்வில் பெண்மையெனும் பெரும் பொருளையடைந்தும் வாழ்வின் பயனடைய முடியாமல்போயிற்று.

எனவே இக்குறளின்பொருள், கணவனிடத்திலே கற்பெனப்படுகின்ற மனந்திறம்பாமை இருக்குமானால், மனைவியானவள் உலகச்செல்வங்கள் அனைத்திலும் உயர்ந்த பொருளாவாள் என்பதாகும். இவ்வுயர்பொருளை மறைத்து வடவரின் பதிபக்தி என்னும் புராணப்பண்பை அடிப்படையாகக் கொண்டு கற்பென்றால் பெண் கணவனிடம் அடிமைப்பட்டுக்கிடப்பதேஎன்று கொண்டால் பெண்கள் அனைவருமே உறுதியற்ற சபலங்கொண்டவர்கள் என்ற கருத்துத் தொனிக்கிறது. இன்றுவரை இக்கருத்தை நாம் ஏற்றுக்கொண்டிருந்தது எத்தனை மடமை.

இதே அதிகாரத்தில் 9வது குறளையும் சிறிது நோக்குவோம்.

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

இக்குறளுக்கு, கற்பின்வழிப்பட்டு, பிற ஆடவரைக் கண்ணெடுத்தும் பார்க்காமல் வாழ்கின்ற கற்புக்கரசியான மனைவியை இல்லாதவர்கள் பழித்துரைப்பவர்களின்முன் ஏறுபோல் நிமிர்ந்து நடந்துசெல்லமுடியாது. தலைகுனிந்துதான் நடக்கவேண்டும் என்று இதுவரை கூறியபொருளை ஏற்றுக் கொள்ளுதல் எவ்வளவு தவறு.

புகழ் எனப்படுவது யாது?

உலகோரால் போற்றப்படுவது. கணவனும் மனைவியும் ஈருடல் ஓருயிராகி ஒன்றுபட்டு இன்புற்றுவாழ்தல் புகழ்புரிதல் என்று கொள்வது பொருந்தாது. ஏனெனில் வள்ளுவன் வேறோரிடத்தில் தோன்றிற் புகழொடு தோன்றுக எனப் புகழின் பொருள் தெரியக்கூறியுள்ளான். அதுமட்டுமல்லாமல் கற்பு என்னும் சொல் பிற ஆடவரைப் பெண்கள் நயத்தல் எனத் தோன்றப்பொருள் உரைக்கப்பட்டுள்ளமை பெண்கள்காமத்தால் — விரகதாபத்தால் அலைபவர்கள் என்பதுபோலக் காட்டுகிறது. பெண்வழிச்சேரல் என்னும் அதிகாரமும் இவ்வகைச் சிந்தனையோடு பொருளுரைக்கப்பட்டு பெண்களை இழித்துரைப்பதுபோல் காட்சி தருகிறது.

எத்தகைய தவறான கருத்துக்கள்.

உண்மை யாது?

எழுசீர்களினால் குறுக்கப்பட்டுள்ள குறள் 'அணுவைத்துளைத்தேழ் கடலைப் புகுத்திய'துபோல — விரிப்பின் பொருள்விரிவு தரும் எனப் புகழ்ந்து உரைக்கப்பட்டுள்ளது.எனவே அந்த எழுசீர்களின்மீது தோன்றும் பொருளின் பின்னால் மறைபொருளாகப் பெரும் பொருள் கொண்டதே குறள். அம் மறைபொருளை அறிவின் துணைகொண்டு ஆய்ந்து தருவதே உரை.

மேல்தந்த குறளுக்கு இதுவரை உரை தந்தவர்களின் கருத்து எவ்வளவு தவறானது என்பதைக் கவனியுங்கள்.

ஒரு மனைவி கற்புத்தவறாதவளாக இருக்கின்றாள்.

படிதாண்டாதபத்தினி. மாமன்மாமியை கண்ணேபோல்காப்பவள். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பவள்.

இக்காரியங்கள் இவளுக்கு எப்படிப்புகழ் சேர்க்கும்?

விருந்தோம்புபவள் எல்லாம் சிறந்த பெண்மைநலங்கனிந்தவள் என்று சொல்ல முடியாது.

அல்லாமலும் பரதேசிகளின் பசிதீர்வதால் உலகப்புகழ் சேரும் என்றுமில்லை.

நான்குசுவர்களுக்குள் நடக்கும்காரியங்களின்சிறப்புப்பற்றி கணவன் சந்திக்குச் சந்தி நின்று மனைவியைப்பற்றி உயர்த்திப் புகழ்சேர்ப்பானா? இல்லை.
எனவே அவ்வழியும் புகழ்சேரஇடமில்லை.அல்லாமலும் கணவன் அறியாமல் களவொழுக்கமுடையவளாக ஒரு மனைவி இருக்கமுடியும்.
'கைப்பிடி நாயகன் தூங்கையிலே அவன் கையையகற்றி அப்புறம் சென்று' என்று பட்டினத்தார் பாடுகிறாரே. கற்புத்தவறாத பெண் மழையைப் பெய்விப்பவளாய் இருந்தாலும் பரவாயில்லை.
அதுவும் முடியாது.
எனவே எப்படிப் புகழ்புரியலாம். புகழ் சேரும்?
எனவே ஒருபெண் உலகம் அறியும்படியாக உலகம்போற்றும் காரியத்தைப் புரிந்திருக்க வேண்டும். அத்தகைச் செயல் ஊரோடும் சமூகத்தோடும் தொடர்புடையதாகவே இருக்கமுடியும்.
இதிலிருந்த உலகம் பயன்பெறும் சமூகக்கடமைகளில் — பொதுவாழ்வில் பங்குகொண்டு சிறந்த சேவையாற்றியே ஒருபெண் புகழடைய முடியுமென்று தெரிகிறது.
அப்படிப் புகழ்பெறும் ஒருபெண்ணின் கணவன் சபைநடுவே ஏறுபோல் இறுமாந்த நடை நடந்து செல்லமுடியும்.
தன் இல்லக் கடமைகளோடு உலகோர் போற்றும் உயர்ந்த சமூகத் தொண்டினைச்செய்த புகழப்படுகிற மனைவியையுடைய கணவன் பெருமிதத்தோடு தலைநிமிர்ந்து நடக்கமுடியும்.
அவனுடையசிறப்புக்கு அளவேயில்லை என்று கூறுவதன் மூலம் கணவனுக்கு வள்ளுவன் கூறும் மறைபொருள் —
பெண் சாதுர்யமிக்கவள், செயற்றிறன் படைத்தவள்.அவளுடைய செயற்றிறன் உலகுக்குப் பயன்படும்படி அவளைச் சுதந்திரமாகச் சேவையாற்ற — இயங்க அனுமதிக்க வேண்டும்.வீட்டுக்குள் பூட்டிவைக்காதே என்பதாகும். இன்னும் விளக்கினால் உன்மனைவியை அடிமைப்படுத்தாதே.அவள் சுதந்திரமாக வாழ்ந்து செயலாற்றினால் நீ பெருமையுடன் தலைநிமிர்ந்துநடந்துசெல்ல முடியும். அவள் பொதுவாழ்வில் ஈடுபட்டு அரிய பெரிய பணிகளை ஆற்றி உனக்குப் புகழ் சேர்ப்பாள் என்பது வள்ளுவரின் அறிவுரை.
இவ்விதமாகப் பெண்மை நலத்தையும் பெண்மையின் உயர்வையும் உள்ளவாறு வள்ளுவர் உரைத்திருப்ப உயரிய சமூகவியல் பண்புகளைக் குறள் கொண்டிருப்ப,தமிழனின் பெருமையை மறைக்க அவனுடைய இலக்கியங்களில் உள்ள உயர்வுகளை மறைப்பது திரிப்பது ஒரு சிறந்த சதியாகக்கொண்டு இலக்கியங்கள் பலவற்றுக்குப் பொருள் விரிக்கப்பட்டு இருப்பதையும் அவ்வழி குறளின் பொருளும் மறைத்துத் திரிக்கப்பட்டு இருப்பதையும் விமர்சகர்களும் கற்றவர்களும் புரிந்து கொண்டு எதிர்காலத் தமிழினத்திற்கு உண்மையையுரைக்கவும் — உள்ளபடி குறளையும் தமிழ் இலக்கியங்களையும் வழங்கவும் பாடுபட வேண்டுமென வேண்டுகிறேன்.
முதலில் குறளுக்குப் புதிய உரைவேண்டும். தமிழன் புலமையின் சிகரம் எதுவென உலகம் உணர வைக்கவேண்டும்.
பூவரசின் இடநெருக்கடி கருதி நீட்டி ஆராய முடியவில்லை.
எனவே தமிழறிஞர்களை சிந்திக்கும்படி மன்றாடுகின்றேன்.

# அனுபவப் பூக்கள்

கடன் —

இது பலவகைகளைச் சாரும். பெற்றோரிடம்படுவது ஈன்றகடன், வளர்த்தகடன். ஆசிரியரிடம்படுவது அறிவுக்கடன். மனைவியிடம்கணவனும் கணவனிடம்மனைவியும்படுவது ஆயுள் கடன். இவ்வகை இயற்கையான கடன்களே. இதைத்தவிர படும் கடன்கள் நம்மைத் தேடிவந்து, மனதைக்கவர்ந்து, ஆசை,கவர்ச்சி,பொறாமை போன்றவற்றால் மூடி பசுத்தோல்போர்த்திய புலிபோல் அது நம்மை படுகுழியில்விழச்செய்யும். கடனில் மிச்சம்வைப்பது நெருப்பில் மிச்சத்தை வைப்பதுபோன்றது. அது மீண்டும் சந்ததியையே அழித்துவிடும் தன்மை கொண்டது.

வாழ்க்கை —

வாழ்க்கைஇரண்டுவகை. நமக்காக வாழுதல், பிறர்க்காக வாழுதல். ஆனால்தற்போது உலகத்தில் சிலத மக்கள் பிறர்க்காக வாழ்வதைப் போல தோற்றமளித்தாலும் அதிலும் சுயநலம் தென்படுகிறது. எனவே தற்போதுள்ளவர்களின் வாழ்க்கை ஒருவகையை சார்ந்ததாகவே உள்ளது.அந்த வாழ்க்கையிலேயும் ஒருபகுதி பிள்ளைபாசமாகவும் மறுபகுதி பிற்காலத்தை நோக்கி சேமிப்புபோன்ற ஏக்கத்திலும் கடைசிப்பகுதி வீணாகசெலவழித்த நேரத்தை வருந்துவதிலும் தான் கழிகிறது. வாழ்க்கை என்பது வருத்தம்தானா? வாழ்க்கைஎன்பது ஒருமதுமயக்கத்தில் இருப்பவனின் தலையை ஒத்ததே அது. இன்பம் கலைந்தபின்பும் தலைவலி இருக்கத்தானே செய்யும்?

மத ஒற்றுமை —

சகலமதங்களுக்கும் உள்ள ஒரே ஒரு ஒற்றுமை என்னவெனில் தமக்கு தமக்கு என்று ஒவ்வொரு ஆலயங்களை நிறுவி ஒரு தினத்திலாவது இறைவனை மனதார ஒரு கணமேனும் வணங்குகின்றனர்.

பணம் —

பணம் என்றால் பிணமும் எழும் என்பது போல அதுவே வாழ்வின் இலட்சியமாக கொண்டால், அதை தேடுவதற்கு பல வழிகள் உண்டு. ஆனால் இலகுவில் தேட நாம் தீயவராகிறோம். அதனால்தான் பணம் உள்ளவன் தீயவன் என்ற பெயர் பெறுகிறான். அதை செலவு செய்யவும்நேரம்எடுக்கும். தேடவும் செலவுசெய்யவும், செலவு செய்யும் நேரமே வாழ்க்கையின் ஆதி அந்தமாகும்.

உறவு —

உறவு என்பது.அன்பைப் போலவே எந்தஒரு ஆயுதத்தாலும் அறுத்து விட முடியாது. ஆனால் அது நெருங்கியிருக்க ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது. நெருங்கி இருப்பதால் எப்போதும் தீய விளைவுகளையே தரும்.

உதாரணம் — பஞ்சதந்திரம்

நெருங்கிய உறவு இருப்பதற்காக சத்துருக்களுடன் நேசமாக இருக்கக்கூடாது. நீர் எவ்வளவு சூடாக இருந்தாலும் நெருப்பை அணைத்து விடும்.

எதிரி —

நல்லாக காய்க்கிற மரத்திற்குத்தான் கல்லெறி.அதிகம் என்பர். அதுபோலவே. நாம் எவ்வளவு நன்றாக இருக்கிறோமோ, அதற்கேற்றபடிதான் நமக்கு எதிரிகள் அதிகரிப்பர். எனவே எம்மைச்சுற்றி எவ்வளவுஎதிர்ப்புகள் வந்தாலும் தளர்ந்து விடக் கூடாது. அதற்கு அர்த்தம் நாம் விரைவாக முன்னேறிக் கொண்டிருப்பது தான். உண்மையிலேயே நாம்தான் நமக்கு எதிரி. எம் எதிரிகள் பக்கம் சாய்ந்து எம்மையே சாய்த்து விடுகிறோம். ஆனால் உழைப்பு என்பது மனிதன் விலங்காக இருந்தபோது தோன்றியது. தளரவிடாது முன்னேறினால் அதுவே எமது ஆயுதமாகவும் அச்சாணியாகவும் தெய்வ நிலைக்கு உயர்த்தும்.

தொகுப்பு —
விக்கினேஸ்.

## குடிசைகள்

கடலலைகள் தாலாட்டும்
கவின் நிறை தீவினிலே
கடற்கரையோரமதில்
கலைவடிவின் தோற்றமதில்
அடுக்கடுக்காய் அமைந்துவிட்ட
குடிசைகளவை!

வாடைக்காற்றுப் பருவத்தில்
வாடி வீடமைத்து
மீன்பிடித்தொழில்புரியும்
மீனவக்குடும்பங்கள்!

குடிசைகளின் முன்னும்பின்னும்
சின்னக்குழந்தைகள்
சிரித்துவிளையாடி
மணல்வீடுகட்டி மகிழ்வார்
வெய்யிலென்ன மழையென்ன
விளையாட்டுத்தானேயவர்க்கு
குடிசைகளின் கூரையிலே
வெள்ளை நைலோன் வலைகள்
வெய்யிலிலே காயும்
வெள்ளை மணல் மேட்டில்
ஓட்டி ஓரா மணலை பதனிட்டு
பகல் வெய்யிலிலே கருவாடாய்க்காயும்.
கடலைநம்பியவர்கள் வாழ்வு தொடரும்
கட்டுமரம் பாய்விரித்துக்
கடல்நடுவே செல்லும்
கணவன் வீடு வரும்வரை
விழித்திருப்பாள் மனைவி
கடுங்காற்றுப் புயல்வந்துவிட்டால்
துடித்திருப்பாள் துணைவி
மீன்பிடித்தவர்கள் வந்தால்
வீட்டிலடுப்பெரியும்
மீன்களின்றி யவர்கள் வந்தால்
வயிறுபட்டும் எரியும்






வரிசையாய்க்காணும்
குடிசைகளிலோர்குடிசை
குடிசையினுள்ளே
குழந்தையின் முனகலொலி
குழந்தையின் முனகலொலி கேட்டுக்
கண்ணீர் வடித்திடும்தாய்
அவள் பெற்றபிள்ளை குளிர்சுரத்தில்!
குளிர்சுரம் தீர்க்கும் மருந்திற்கோ பணமில்லை
பணமுள்ள மனிதருக்கோ
கொடுக்க நல்ல மனமில்லை
கணவனோ கைபிசைந்தான் கவலையில்
கடைசியில் வள்ளமெடுத்து வலைவீசி
கடல் நடுவே செல்கின்றான்
அலைபோலவன் நெஞ்சும் அடிக்கிறது!
அலைகடலோ ஆர்ப்பரித்தெழுகிறது!
மாடிவீடு, மதிற்சுவர்கள்,மாந்தோப்பு
கோடியிலே தோட்டம் கூலியாட்களென
பட்டணத்திலே வசதியாய்
வாழ்ந்த குடும்பமவர்கள்!
போராட்ட காலமதில் பொம்பரது
யாரைத்தான் தாக்கவில்லை?
பொம்பரின் தாக்குதலில் பொசுங்கியது
வீடுமட்டுமல்ல
அவளைப் பெற்றவர்கள்!
அவள்பெற்றெடுத்த ஓர்பிள்ளை
மற்றைய பிள்ளை,கணவன் துணையுடனே
கடைத்தெருப்பக்கம்
காரிகை சென்றிருந்த படியால்
மிஞ்சியதவர்களுயிர்மட்டுமே!

நேரமோ நடுநிசி!
நீள்கடல் சென்றுவிட்ட
நாதனையோ காணவில்லை!
நீண்ட பெருமூச்சு

அவள் குடிசையை நோக்கிக்
காலடி யோசைகள்!
"யாராகவிருக்கும் இவ்வேளையிலே?"
அவள் சிந்தனையைக் கலைத்தங்கே
சீருடையில் பலவிளைஞர்
ஆயுதந்தரித்தவர்கள்
அவசரமாய் வருகின்றார்!
வீரம் விளைகின்ற பூமியிலே
விளைந்த முத்துக்களவர்!
விடுதலை நாட்டின்
விலைமதிப்பில்லா சொத்துக்களவர்!
வேகம் நிறைந்த அவர்களின் முகங்களிலே
சோகம் நிறைந்து காணப்படுவதேன்?
கடல் நடுவே சென்றுவிட்டவள் கணவன்
கடற்படையினரின் கடும் செல்லடியால்
இறந்துவிட்டான் என்ற சேதி
எப்படித்தான் கூறுவார்கள்?
ஏழ்மையில் வாடும் அவளுக்கு
இனியார் துணை?
நோயுறு பிள்ளைக்குத்தீருமா?
தாயவள் நெஞ்சுதான் ஆறுமா?
நாட்டின் விடுதலைக்காய்
காட்டிலும் மேட்டிலும்
கண்ணுறக்கமின்றி வாழுமவர்
நாதியற்று வாழுமவளை
நட்டாற்றில் விடுவார்களோ!
விசைப்படகிலேறி விரைந்துசெல்கின்றார்
விடுதலை வான் நோக்கிப்
பறந்து செல்கின்றார்

**இ.சம்பந்தன்**





## இதயத்தில் எழுதிய

# இலக்கியவரிகள்.

துள்ளித்திரிந்த பள்ளி நாட்கள்...
துன்பமென்றால் இன்னதென்று அறியாத இளமைப்பருவம்...
கல்வியோடு கண்ணும் கருத்துமாய்க் கலந்திருந்தாலும்,
சிறுவயதுத் தோழிகளுக்கிடையேயான சீண்டல்கள்,குறும்புகளோடு சிரித்துக் களித்த நிகழ்வுகளும் சேர்ந்தே இருந்தன...
எவை இலக்கியம் என்று அப்போது நாங்கள் உணராதநேரம்...
ஆனால் பலசம்பவங்களில் இலக்கியமும் பரிணமித்தே இருந்திருக்க வேண்டும் என்று இப்போது தோன்றுகிறது.
கற்ற தமிழைக் கற்பனையோடு கலந்து நாங்கள் உரையாடி மகிழ்ந்திருப்பதை எண்ணும்போது மனதில் மகிழ்ச்சி கரைபுரண்டோடுகிறது.
உதாரணத்துக்கு ஒரு நிகழ்வை உங்கள்முன் வைக்கிறேன்.

வகுப்பறை...
தமிழாசிரியர் இன்னும் வரவில்லை...
தோழிகள் வளவளத்துக் கொண்டிருக்கிறார்கள்...
என்னருகிருந்த தோழி புவனேஸ்வரிக்குக் கவிதைகளில் பிரியம். எனக்கும் அப்படித்தான்.
"பக்கத்திருந்து கதையளக்கும் நம்தோழிகளைப்பற்றி கவியாரம் தொடுக்கலாமா?" என்றேன் நான்.
"ம்!" என்றாள் புவனேஸ்வரி உற்சாகமாக.

"முதலில் நான் சரோஜாவைப்பற்றிச் சொல்கிறேன்!"
"நான் சாரதாவைப்பற்றிச்சொல்கிறேன்."
புவனேஸ்வரி தொடங்கினாள் —
*"சுருட்டைமயிர் அழகினொடு தோன்றி இங்கு*
*மருட்டுகின்ற மான் — சரோஜா எனும் மங்கையே!"*
புவனேஸ்வரி பாட்டைமுடிக்க நான் சாரதாவைப்பார்த்தேன்.
*"வெள்ளைமேனி மென்சிரிப்பு மேவுகின்ற சாரதா*
*உள்ளமொன்றி எங்களோடு ஒன்றிவிட்ட தோழியே!"*
என்றேன்.
"என்னை ஏன் பாடுறீங்கள்? கணக்கிலே புலி கமலா. அவளைப்பாடலாமே!"
என்றாள் சாரதா.
*"கணிதத்திலே திறமைகாட்டி கல்விச்சாலை சேர்ந்திடும்*
*கன்னி இந்தக் கமலாதேவி எங்களருந் தோழியே!"*
என்றாள் புவனேஸ்வரி.
இப்படியே அடுத்திருந்த தோழிகள் மீதும் வரிசையாய்க்
கவிதைகள் புனையப்பட்டன.
நினைவில் நிற்பவைகளில் இன்னும் சில —
*"சித்திரங்கள் பலவரைந்து சிந்தனையைத்தூண்டிடும்*
*சிவானந்த லோசனிநம் சீரான தோழியே!"*
இந்த வரிசையில் புவனேஸ்வரி என்னையும் மிச்சம் வைக்கவில்லை
*"கூந்தலோடு புத்தகங்கள் கூடுமழகு சொல்லிடும்*
*ஏந்திழை கனகேஸ்வரியை நாங்களும் பின்பற்றுவோம்!"*
இரண்டறக் மனங்களோடு எங்கள் முன்பதாக வருடங்களுக்கு இருபது
கலந்துவிட்ட அந்தவரிகள் இன்னும் எங்கள் கடந்தகாலங்களின் சிலபக்கங்களை
மனத்திரையில் வண்ணப்படமாக்கி விட்டிருக்கின்றன.

— கன்னிகா சந்திரபாலன்

*(இதுபோல் உங்கள்வாழ்விலும் இடம்பெற்றிருக்கக்கூடிய இலக்கிய நிகழ்வுகளை பூவரசு வாசகர்களோடு பகிர்ந்துகொண்டால் என்ன?)*

---

*பூவரசு இனிய தமிழேட்டில் இடம்பெறும்*
*கதைகள் யாவும் கற்பனையே!*
*கட்டுரை, கவிதைகளில் இடம்பெறும்*
*கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே*
*பொறுப்பாவார்கள்!*

*— ஆசிரியர்.*

---



'சுதந்திர தரிசனம்'

# மனங்களில் நிலைத்த மாவீரர்நாள் !

மகரதோரணங்கள், அலங்கார வளைவுகளுடன் வீர எழுச்சி மிகு தினமாக ஜேர்மனியில் மாவீரர்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது. 26.11.94 அன்று Krefeldநகர மாவீரர்நாள்மண்டபத்திற்கு ஜேர்மனியின் பலபாகங்களிலிருந்தும் ஆறாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் வந்து கலந்துகொண்டனர்.
"உங்களைத்தான்! விடுதலைக்காய் போராடுவோம் வாருங்கள்!" என்ற அறைகூவல்தாங்கிய போராளியின்சித்திரமொன்று மண்டபத்தின் முன்வாயிலில் அனைவரையும் வரவேற்றது.
மண்டப நுழைவாயிலில் உலகத்தமிழர் இயக்கம் ஏற்பாடுசெய்திருந்த தமிழீழத்தின் நிலைபற்றியகண்காட்சியையடுத்து, நிகழ்ச்சிக்குவருகைதந்த மக்களனைவரையும் தமிழ்மாணவர் அமைப்பினர் வரவேற்றனர்.
தமிழீழத்தேசியக்கொடியை ஜேர்மனி தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் திரு இ.சிவனேசன் அவர்கள் ஏற்றிவைத்தார். மௌன அஞ்சலியையடுத்து மாவீரருக்கான தீபாராதனையும் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிகளில் முதலில் இடம்பெற்ற சிறுவர்களின் பேச்சும், கவிதையும் அனைவரையும் பெரிதும் கவர்ந்தன.
ரேகாயோகலிங்கம், நிலாந்தினிவிக்கினேஸ்வரன், கிருஷ்ணவேணி பாலசந்திர சர்மா, சீலன் செந்தூரான், அனந்திகை சிவகுமாரன் ஆகியோரின் கவிதையும், 'பிஞ்சு மிளகாய்'உமா விக்கினேஸ்வரன்,இரத்தினசிங்கம் சுகிர்தன்,ஸ்டெவ்வான் வலன்ரைன்,வித்தியா விக்கினேஸ்வரன்,'குட்டிப்பண்டிதர்' அசோக் குலதாசன், ஆகியோரின் பேச்சும் இடம்பெற்றன.
மாவீரர்களைப்பற்றி தொகுப்புரைநிகழ்த்திய ஜேர்மனி தமிழர்கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு.கா.சிவநாதன், "நீங்கள் வாழ்கிறீர்கள்!வாழ்வீர்கள்! உங்கள் இலட்சியத்தை நாம் நிறைவேற்றுவோம்! இது உறுதி!" என்று குறிப்பிட்டார்.
விடுதலைப்பாடல்களுக்கு உயிரூட்டும் விதத்தில்'வெட்டி வீழ்த்துவோம்' என்ற இசை நடனம் அமைந்தது. இதில் திருமதி வானதி தேசிங்குராஜா, திருமதி சாவித்திரி இம்மானுவேல் ஆகிய நடன ஆசிரியர்களின் மாணவிகளும், நடனஆசிரியை செல்வி சுகன்யாவும் அவரின் மாணவிகளும் பங்குபற்றினர். வீர உணர்வுமிக்க எழுச்சிக் கவியரங்கில் திரு புவனேந்திரன், திரு தேவகுமார், திரு எலியாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். "எண்ணிடின் நெஞ்சம் சிலிர்க்கும்" என்ற இக்கவியரங்கின் கவிதைகளை திரு கா.சிவநாதன் தொகுத்துவழங்கினார்.
மாவீரர்தின நிகழ்ச்சியில் தலைமை உரை நிகழ்த்திய ஜேர்மனி தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் திரு இ.சிவனேசனின் தலைமையுரையை அடுத்து, தமிழீழம் இசைக்குழுவின்மெல்லிசை பார்வையாளரின் பாராட்டைப் பெற்றது. புதிய விடுதலைப்பாடல்களுக்கு புதிதாக இசையமைத்திருந்தனர்.
மாவீரர்தினநிகழ்ச்சிகளின் உச்சக்கட்டமாக தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தின் தயாரிப்பான"சுதந்திரதரிசனம்"என்ற நாட்டியநாடகம் நடைபெற்றது. தமிழர்களின் சுதந்திர உணர்வை தட்டியெழுப்பக்கூடியதாக இந்த நாட்டிய நாடகம் அமைந்திருந்தது.
நிகழ்ச்சிக்குவந்திருந்த அனைவரின் ஏகோபித்த ஆதரவைத் தட்டிக் கொண்டது இந்நாடகம்.
நடன ஆசிரியர்களான தேனுகா கந்தராசா, பவித்திரா செல்வகாந்தன், யாமினி சர்வானந்தன், யாழரசி சந்திரபால் ஆகியோர் தமது குழுவினருடன் இதில் பங்குபற்றினர்.
தளபதி கிட்டுவைப்பற்றிய'ஒருகாலத்தின்பதிவு'என்ற புத்தகமும், கஸ்தூரியின் படைப்புக்களடங்கிய புத்தகமும், விடுதலைப்பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழை நாடாவும், இந்நிகழ்ச்சியின்போதுவெளியிடப்பட்டன. இறுதியில் தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் இ.ஆனந்தராஜா தமிழீழத் தேசியக்கொடியை இறக்கி வைத்ததுடன் நிகழ்ச்சிகள் இனிதே முடிவுற்றன.

*— வீ.ஆர்.வரதராஜா.*

# வரங்கள் அருள்வாய்!



குழந்தை யேசுவே
குவலயம் எழுகவே
குழந்தை யேசுவே
குவலயம் எழுகவே
அற்புதமான கரங்களால் உந்தன்
அருளைப் பொழியவே
வருவாய் தருவாய்
வரங்கள் அருள்வாய்!

அன்னை மரியின் கரத்தினிலே
அவனியில் வளர்ந்த ஆரமுதே
அண்டி வந்தோர்க்கு அடைக்கலமே
அஞ்சிவாழ்வோர்க்கு படைக்கலனே
அரவணைத்திடுவாய் ஆறுதல்தருவாய்
ஆனந்தம்பொங்கிட வரமருள்வாய்!

வானோர் வாழ்த்தும் பாக்களிலே
வாழ்ந்திடும் எங்கள் குலக்கொழுந்தே
ஏங்கித்தவிப்போர்க்கு விடிவெள்ளியே
ஏக்கம்போக்கும் எங்கள் ஒளிவிளக்கே
வான்மழை பொழிவாய் வசந்தங்கள் அருள்வாய்
வாடிடும் வறியவர் துயர்துடைப்பாய்!

(நத்தார்தினப்பாடல்களிலிருந்து)

# அன்புச் செல்வங்களே!

எங்கள் பூவரசு இனிய தமிழ் ஏடு இந்த இதழிலிருந்து மாதாமாதம் வெளிவரப்போகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நீங்கள் அறிவீர்கள்.

எங்கள் இளந்தளிர்களான உங்களுக்கென இன்னும் சிலபக்கங்களைக் கூட்டி உங்களுக்குப் பயன்தரத்தக்க பல ஆக்கங்களைத் தரும்படி நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். உங்கள் வேண்டுகோளை ஏற்றிருக்கிறோம்.


நீங்களும் இந்த இளந்தளிர்கள் பகுதிக்கு ஆக்கங்கள் அனுப்பலாம். அவைகளும் பிரசுரமாகும்.

பூவரசு 4வது ஆண்டுநிறைவையொட்டி உங்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் மிக அதிக அளவில் நீங்கள் பங்குகொண்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது.


பங்குபற்றிய எல்லோருக்கும் எங்கள் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பரிசு பெற்றவர்களின்பெயர்கள் அடுத்த இதழில் வெளியாகும்.


— ஆசிரியர்.


எங்கள் இளந்தளிர்கள்

## மொழிப்பற்று!



தான் வளர்த்த குஞ்சை ஒரு காகம் கொத்திக்கொத்திக் கலைத்தது. இதைக்கண்ட புறா வேதனை கொண்டு,"காக்கையாரே!காக்கையாரே இந்தச் சின்னஞ்சிறு குஞ்சைக் கொத்திக் கொத்தித் துரத்துகிறாயே இது நியாயமா?"எனக் கேட்டது.




காகம் சொன்னது —
"என் தாய்மொழி 'கா...கா'. ஆனால் இந்தக்குஞ்சோ 'கூ...கூ' என்கிறதே!" என்றது. வேதனைகொண்ட புறா மரக்கிளைக்குள் மறைந்திருந்த குயிலை நெருங்கிச் சென்று —



"குயிலே..குயிலே! அந்தக்குஞ்சு உன்னுடையது. 'கூ...கூ' என்று சொல்லாமல் 'கா...கா' என்று கத்தச் சொல்லு!" என்றது.


குயில் சொன்னது —
"புறாவாரே!ஆண்டவன் படைப்பால் எங்கள் ஆரம்பவாழ்க்கை அயல் கூடான காக்கையின் கூடாகப் போயிற்று. என்றாலும் எனது தாய்மொழி 'கூ...கூ'. அதை எப்படி நான் மாற்றுவேன்?"என்றது.





வேதனைகொண்ட புறா எப்படியாவது சமாதானம் செய்து வைக்க வேண்டுமென எண்ணி ஒரு வீட்டு ஜன்னலில் உட்கார்ந்து யோசித்தது.
வீட்டுக்குள்ளே ஒரு கணவனும் மனைவியும் உரையாடியதுபுறாவின் காதுகளில் விழுந்தது.

"எங்கள்பிள்ளைகள் தாய்மொழியான தமிழை மறந்து டொச்சில் பேசுகிறார்களே. இது எனக்கு நியாயமாகப்படவில்லை!" என்றார் கணவன்.
மனைவி கோபத்துடன்கத்தினாள் — "நீங்கள் வாயை மூடிக் கொண்டிருங்கோ. எங்கள் பிள்ளைகளுக்குத் தாய்மொழி தேவையில்லை. டொச்சிலேயே கதைக்கட்டும்! அதுதான் அழகு!"



"பகுத்தறிவில்லாத காகமும் குயிலும் தாய்மொழியிலேயே தன் பிள்ளை பேசவேண்டுமென எண்ண,ஆறறிவு உள்ள மனிதனோ தாய்மொழியை மாற்றுகின்றானே. இந்த நிலையில் எனது சமாதான முன்னெடுப்பு எப்படிச் சரிவரும்?" என்று கவலைப்பட்ட புறா யாருமில்லா ஊரில் தவம் இருக்கப் பறந்து சென்றது.



குப்பிளான் வை.யோகேஸ்.

# தமிழே தமிழே!

தமிழே தமிழே தாயவளே–இந்தத்
தரணியில் எமதுயிரானவளே

புதிதே புதிதே நீ புதிதே–என்றும்
பொருள்சுவை அழகினில் நீ புதிதே

மனமே மனமே கேள்மனமே–எங்கள்
வளர்தமிழ்க் கவியினைக்கேள் மனமே

நிலமே நிலமே வாழ்நிலமே–உந்தன்
முதல்மொழி தமிழெனச் சொல்மனமே!

இனமே இனமே தமிழ் இனமே–எங்கள்
இன்மொழி காத்திடு நீ தினமே


உணர்வே உணர்வே தமிழ் உணர்வே–எங்கள்
உயிரொடு கலந்தது தமிழ் உணர்வே


மொழியே மொழியே அயல்மொழியே–எங்கள்
அருந்தமிழ்ப் பொருளினைக் கேள்மொழியே

சுவையே சுவையே தமிழ்ச்சுவையே–எந்தச்
சுவையிலும் இனியது தமிழ்ச்சுவையே!

– இந்திமகேஷ் –

சுமைதூக்கும் கழுதையாக இருந்தாலும் நான் இசைக்கருவிகளைச்சுமக்கும் கழுதை என்பதில் எனக்குப் பெருமைதான். ஏனெனில் என் எஜமான் ஒரு பாட்டுக்காரன்.இளமையில் சுமைதூக்கும் வேலை எனக்கு இலகுவாக இருந்தது.ஆனால் வயதுபோனபின்போ என் எஜமான் என்னை வதைத்துத்தான் வேலை வாங்கினான். என் இயலாமையை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவனது அடிதாளாமல் ஒருநாள் அவனைவிட்டு ஓடி வந்தேன்.அப்போதும் என் முதுகில் இசைக் கருவிகள் இருந்தன.எங்காவதுபோய்ப் பாடிப் பிழைத்துக் கொள்ளலாம்என்று நினைத்தபடி நடந்தேன்.





வழியில் ஒரு வேட்டைநாயைக் கண்டேன். வீட்டைக்காத்துதன்எஜமானுக்குவிசுவாசமாக நடந்த நாயாருக்கும் வீட்டில் இடமில்லை. வயதுபோய்விட்டதுதான் காரணமாம்! தான் பட்ட வேதனைகளைச்சொல்லி அழுதார். "என்னோடுவா! நாங்கள் பாடிப்பிழைக்கலாம்!" என்றேன். சம்மதித்து என்னுடன் வந்தார்.


# நகரத்துப் பாடகர்கள்.


நாங்கள் நடந்தோம்.

வழியில் ஒரு பூனையார் சோகத்துடன் இருந்தார்.என்னநடந்தது என்று விசாரித்தால் அவரும் எங்களைப்போல் ஒரு சோகக் கதையைச் சொன்னார்.

"என் எஜமானி எலிகளைப் பிடிப்பதற்கென்றே என்னை வளர்த்தாள். வயது போனதால் எலி பிடிக்கமுடியவில்லை.எலிகள் என்னைக்கண்டு பயந்தகாலம்போய் அவைகள்என்மீது துள்ளி விளையாடும் நிலைமை. பொறுப்பாளா எஜமானி? அடிபோட்டுத் துரத்திவிட்டாள்."

"சரி.நீயும்எங்களுடன்வா!"என்றுபூனையையும் சேர்த்துக்கொண்டோம்.





வரும் வழியில் சேவல் ஒன்று

"என்னைச் சின்னஞ்சிறு வயதுமுதல் செல்லமாய் வளர்த்தவர்கள் தங்கள் விருந்தினர்களுக்கு என்னை விருந்தாக்க வளர்த்தார்கள் என்பது எனக்கு விளங்காமல்போய்விட்டது.விபரம் தெரிந்ததும் விலகி ஓடி வந்துவிட்டேன்.!" என்றது. எங்களைப்போல் கழுதைக்கும் நாய்க்கும் முதுமை துன்பம். சேவலுக்கோஇளமை துன்பம்."சரி!நாங்கள் உலகப்புகழ்பெறும் பாடகர்களாகப் போகிறோம். நீயும் வா எங்களுடன்!" என்றோம்.



நடந்தோம். ஏதோ ஒரு நகரத்தை வந்தடைந்தோம். பொழுது சாய்ந்து இருள்சூழ்ந்துவிட்டது. எமக்குப் பசியெடுக்க ஆரம்பித்தது. நெடுந்தூரம் நடந்த களைவேறு.அப்போது தூரத்தே ஒரு வெளிச்சம் தோன்றிற்று. தனியாய் ஒரு வீடு.




என்சுமைகளைக் கீழே இறக்கிவிட்டு என் முதுகில் நாயார், அவர் முதுகில் பூனையார், அவர்முதுகில் சேவலார் என உட்கார்ந்து அந்த வீட்டின் யன்னலால் எட்டிப்பார்த்தோம்.

உள்ளே இரண்டுபேர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பேச்சிலிருந்து அவர்கள் திருடர்கள் என்பது தெரிந்தது. கொள்ளையடித்து வந்த பணத்தை அவர்கள் மேசைமீது வைத்திருந்தார்கள். எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று.



நானும் நாயாரும் பூனையாரும் சேவலாரும் ஒரே நேரத்தில் சத்தமாய்பாடத்தொடங்கினோம். அவ்வளவுதான்! திருடர்கள் பயந்துஒரேஓட்டமாய்ஓடினார்கள் மறுபடியும் அவர்கள் திரும்பி வரவில்லை.



பிறகென்ன, நாங்கள் உள்ளே நுழைந்து நன்றாகச்சாப்பிட்டு உற்சாகமாய்ப் பாடி மகிழ்ந்தோம். நீங்கள் பிறேமன் நகருக்கு வரும்போதெல்லாம் எங்களைச் சந்திக்கத்தக்கதாய் நகரின் மத்தியில் எங்களுக்குச் சிலை எழுப்பியிருக்கிறார்கள். நீங்கள் கவனிக்கவில்லையா?

சித்திரம்— பிரசன்னா



## சுவாமி ஞானப்பிரகாசர்.

ஈழத்திருநாட்டின் சிகரமென விளங்கும் யாழ்குடாநாட்டில் மாணிப்பாய்என்றொரு அழகியகிராமம். கல்வியாலும் செல்வத்தாலும் பெருமைபேசும் நிலம் அது. அங்கேதான் ஞானப்பிரகாசர் பிறந்தார். அது 1986ம் ஆண்டு. இந்துசமயத் தம்பதிகளான சுவாமிநாதர் என்பவருக்கும் தங்கமுத்துப்பிள்ளைக்கும் மகனாகப் பிறந்த ஞானப்பிரகாசருக்கு பெற்றோர் இட்ட இயற்பெயர் வைத்திலிங்கம். மாணிப்பாயிலுள்ள இந்துசமயப் பாடசாலையொன்றில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார் வைத்திலிங்கம்.

இவர் சிறுபிள்ளையாக இருந்தபோது தந்தையார் இறந்துபோனார். இந்துக்கள்மத்தியில் இந்துசமயச் சூழலில் வாழ்ந்த அந்தக் காலகட்டத்தில்இவரதுதாயார் தங்கமுத்துப்பிள்ளை வேதாகமத்தில் பற்றும் அதை அறிவதில் ஆர்வமும் கொண்டார்.

சிறுவனான வைத்திலிங்கத்துக்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டிருந்த வேளை தன் மகனைச் சுகம்பெறச் செய்தால் தானும் தன் மகனும் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்துகொள்வதுமட்டுமல்ல தன் மகனை இறைபணிக்கு அனுப்புவேன் என்றும் தாயார் தங்கமுத்து இறைவனிடம் வேண்டிக்கொண்டார்.

மாணிப்பாய் போன்று அச்சுவேலியும் பெரும்புகழும் பெற்ற வளம் நிறைந்த கிராமம்.

இங்கு தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் ஒரு செல்வந்தர்மட்டுமின்றி ஒரு அண்ணாவியுமாவார். அவர் தங்கமுத்துப்பிள்ளையை திருமணம் செய்ய விரும்பினார். தம்பிமுத்தர் கத்தோலிக்கர். அதனால்தங்கமுத்துவையும் அவரதுமகன் வைத்திலிங்கத்தையும் திருமுழுக்குப் பெறும்படி செய்தார்.அக்காலத்தில் ஞானஸ்நானம் என்றுதான் இந்தச்சடங்கைச் சொல்வார்கள்.திருமுழுக்கின் மூலம் வைத்திலிங்கம் ஞானப்பிரகாசர் எனப் பெயர் மாற்றம்பெற்றார்.

ஒருகாலத்தில் ஞானத்தில் பிரகாசிப்பார் என்று ஆருடம் தெரிந்துதான் இந்தப்பெயரை இட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஞானப்பிரகாசர் பிறந்தது மாணிப்பாய் என்றாலும் அவர் வளர்ந்தது அச்சுவேலியில்தான். அவரது வளர்ப்புத்தந்தையான தம்பிமுத்தர் அச்சுவேலியில் தன்வீட்டுக்கு அருகாமையில் ஒரு அச்சுக்கூடம் அமைத்து நடாத்தி வந்தார்.

ஞானப்பிரகாசர் யாழ்நகரின் சம்பத்திரிசியார் கல்லூரியில் தன் படிப்பைத் தொடர்ந்தார்.
தன் ஓய்வுநேரங்களைத் தந்தையாரின் அச்சுக்கூடத்தில் வேலை செய்து தந்தைக்கு உதவியாக இருந்தார்.
தனது 18வது வயதில் எழுதுவினைஞர் பரீட்சையில் சித்திபெற்று புகையிரத இலாகாவில் உத்தியோகத்தில் சேர்ந்துகொண்டார்.
தொழிலில் ஈடுபட்டதைவிட அவர்மனம் சமயத்திலும் பக்தி மார்க்கத்திலும் கூடுதலாக ஈடுபட்டது.
தன்வேலையை இராஜினாமாச்செய்துவிட்டு அச்சுவேலிக்கு வந்து தன் தாயாரிடம் தான் இறைபணிக்காக குருமடத்தில் சேரப்போகும் செய்தியைக் கூறினார்.தாயாரால் ஏற்றுக் கொள்ள முடிந்தது.சிறிய தந்தையாரால் தன் சொந்தமகனாகவே வளர்க்கப்பட்டுவிட்ட தனயனின் செயலை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சீற்றம் கொண்டார். எனினும் ஞானப்பிரகாசரின் பிடிவாதம் வென்றது.
குருமடத்தில் சேர்ந்துகொண்டார். 1901ம் ஆண்டு மார்கழித்திங்கள் 2ம் நாள் அமலமரித்தியாகிகள் சபைக் குரவராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
அவர் குருமடத்தில் சேருமுன்பே குருத்துவப்பணியின் ஒரு பகுதியை அச்சுவேலியில் ஆரம்பித்திருந்தார். படிக்கும்பருவத்தில் ஊர்மக்களை ஒன்று சேர்த்து ஞானஒடுக்கம் செய்யவும் திருகாலச் செபமும் மூன்றுவேளை மணிஓசை ஒலிக்கவும் இன்னோரன்ன பணிகளைச் செய்தார்.
குரவர் ஆணயின் சுவாமி அவர்கள் போதகர், எழுத்தாளர், மொழிவல்லுனர், வரலாற்றாசிரியர், மறைப்பணியாளர் என்று பல்வேறு துறைகளிலும் திறன்பெற்று விளங்கினார்.
அவரது ஆய்வுகள் —
'தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்
'யாழ்ப்பாண அரசர்கள்'
'இந்தியாவின் புராதன வரலாறும் காலநிருபணமும்
'தமிழர் மத்தியில் சாதியின் பிறப்பு'.
'யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் 25ஆண்டு கத்தோலிக்க வளர்ச்சி
இவை யாவும் அவரின் ஆராய்ச்சிக்கட்டுரைகள்.
சுவாமி ஞானப்பிரகாசர் எந்நிலையிலும் தன் மறைப்பணிக்கே முக்கியத்துவம்கொடுத்தார்.1914ல் நல்லூர்ப்பங்கைப்பொறுப்பேற்றார். இப்பங்கு பங்கு வன்மைக்குமாறாக கத்தோலிக்கரல்லாத மக்களைக் மக்களைக் கொண்டதாக அமைந்தது.அங்கு ஒரு குருமனையும்

ஒருகூடமும் அமைத்துக்கொண்டார். அக்கூடமே அறிவின் கூடமாகப் பரிணமித்தது. அங்கிருந்து அவர் தம் மறைபரப்பும் பணியை ஆற்றிவந்தார். கல்லிலும் முள்ளிலும் நடந்து பின்தங்கிய கிராமங்களிலும் புகுந்து 37 சிறிய ஆலயங்களை உருவாக்கினார். இவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்றே அழைக்கப்பட்டார். இன்றும் மானிப்பாய் அந்தோனியார் கோவில், அச்சுவேலி தீற்றம்மா கோவில் இவைபோன்றவை அவரின் அரும்பணியை எடுத்தியம்புகின்றன.

சுவாமி அவர்கள் மிகுந்த தாய் மொழிப்பற்றுக்கொண்டவர். யாரும்இதுவரைசெய்யாத கோட்பாடொன்றைத் தன்தாய்மொழிக்குச் சேவையாகச் செய்தார்.

'தமிழ்மொழியின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி' என்னும் நூல் பிரமாண்டமானது. இதன் முதற்பிரிவின் 6வதுபிரதியை அவர் தன் மரணப்படுக்கையில் அச்சேற்றச்செய்தார். மிகுதி யாவும் வையெழுத்துப் பிரதியிலேயே இருந்தது.

இதுவரை யாரும் அதைத்தொடர முயற்சிக்கவில்லை.

இவர் எழுதிய சிறிய நூல்கள் —

இராசபாதை, ஆத்துமம், சற்குரு, கிறீஸ்துவின் கடவுட் தன்மை, சமயஆராய்ச்சி, பிள்ளையார் சரித்திரம், தீர்ப்பு, மனச்சான்று, பிரிவினைச் சபையார் என்பனவாகும்.

பன்மொழி வல்லுனராக விளங்கி ஆங்கிலம், தமிழ், சிங்களம், சமஸ்கிருதம், இப்படியாக 18 மொழிகளில் நூல்களை எழுதினார். 1946ம் ஆண்டு பொய்யுடம்பை நீத்து புகழுடம்பை எய்தினார். 1981ம் ஆண்டு அவருக்கு நினைவுமுத்திரை வெளியிடப்பட்டது.

*செந்தமிழ் மொழியே செக மொழிக்குயிரென*
*விளக்கப்புகுந்த வித்தகர் செம்மல்*
*சிறுமை அடியான் சீரிய நண்பன்*
*எம்மதத்திற்கும் சம்மதமாகும்*
*அன்பு வழியே ஆருயிர் வழியெனக்*
*கண்டு நடந்த கனியிளம் சொல்லான்*
*பைந்தமிழ் வளர்த்த பன்மொழிப்புலவன்*
*ஐந்தமிழ் வல்லோன் அறிவுப்பொலிவோன்*
*மலையுடதேசமே கலையெனக்கொண்ட*
*ஞானப்பிரகாச நாவலன் எங்கே*
*பொய்யுடல் நீத்துப் புகழுடல் கொண்டான்.*

என்று சுவாமி ஞானப்பிரகாசர்பற்றி சுத்தானந்தபாரதியார் குறிப்பிடுகின்றார்.

# ஓநாயின் மூளை!

ஒருநாள் சிங்கம் ஓநாய் நரி ஆகிய
மூன்றும் சேர்ந்து காட்டுக்கு
வேட்டையாடப் போயின.
கழுதை, ஆடு, முயல் என்பவற்றை
வேட்டையாடிக் கொன்றன.
வீடுதிரும்பும் வழியில் சிங்கம்
ஓநாயைப் பார்த்துக் கேட்டது —
"எப்படி இவைகளைப் பகிர்ந்து
உண்பது?" என்று.
அதற்கு ஓநாய் சொன்னது —
"கழுதையை நீர் சாப்பிடலாம்.
ஆட்டை நான்சாப்பிடுவேன்.முயலை
நரிக்குக் கொடுப்போம்!"
இதைக்கேட்டதும் சிங்கத்திற்குக்
கோபம் வந்தது.
கோபம்வந்த சிங்கம் ஓநாயைக்
கொன்றுவிட்டது. கொன்றதும்
நரியைப் பார்த்துக் கேட்டது.—
"நீ என்ன மாதிரி நினைக்கிறாய்?"
நரி சொன்னது —
"காலைச்சாப்பாட்டுக்கு கழுதையைச்
சாப்பிடு. மத்தியானச் சாப்பாட்டுக்கு
ஆட்டைச்சாப்பிடு.இரவுக்குமுயலைச்
சாப்பிடு!"
நரி இப்படிச் சொன்னதும்
சிங்கத்துக்கு ஆனந்தம் வந்தது.
ஆனந்தம்கொண்டசிங்கம்கேட்டது
"இப்படி மூளை உனக்கு எப்படி
வந்தது?"
அதற்கு நரி சொல்லிற்று —
"இது ஓநாயின் கற்பனை!"

— ஞா.ஜெயதீபன்.



# வளர்க சமாதானம்!

— அ.வேணுகோபாலன்.

உலகத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்துமே இயற்கையின் கட்டுப்பாடுகளுக்குள்ளும் தம்முடைய எல்லைகளுக்குள்ளேயும் தம்மைத்தாமே மட்டுப்படுத்தி வாழப் பழகிக்கொள்கின்றன.
இவ் ஜீவராசிகள் யாவும் தம்முடைய பழக்கவழக்கங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் ஏதோ ஒருவகையில் காலநிலைகளைப் புரிந்து கொண்டும் அவ்விசைபாக்கங்களுக்கு ஏற்றவாறு தம்மையும் தம் சுற்றுவட்டத்தையும் கட்டுப்படுத்திக்கொள்கின்றன.
ஆனால் இவ் ஜீவராசிகளுடன் ஒப்பிட்டுநோக்குமிடத்து மனிதனே மேலான சிறப்புடைய படைப்பாகக்கருதப்படுகின்றான். இவனிடம்தான் அனுபவரீதியாக அறிவியல் வாழ்க்கையானது வளர்ச்சியடைந்திருந்தது. ஆதிகாலத்தில் இருந்து அறிவியல்வாழ்வின் ஆராய்ச்சிப்படிகளை ஊடுருவிய அவனது திறமை படிப்படியாக முன்னேற்றமடைந்து விஞ்ஞான யுகத்தில் புகுந்து கொண்டது. மேலும் பல நாகரீகபரிமாணங்களை ஆராய்ந்தவன், உலகத்தின் எல்லைகளையும் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம்என்ற வரைபுகளின்மேலாக பறந்தமனிதன் விண்வெளியில் பரவிக்கிடக்கும் அண்டங்களின் காலநிலை மாற்றங்களையும் அவற்றின் இயக்கப்பாடுகளைக் கண்டறியும் ஆவலினால் கோள்களில் தாவிக்கொண்டான்.
அவற்றுக்குச்சமமான இயக்கப்பாடுகளமைந்த உபகோள்கருவிகளையும் உருவாக்கி அங்கு நிலவுகின்ற பௌதீக இரசாயன இயல்புகளுக்கும் அவற்றின் செயற்பாடுகளுக்கும் எதிரான அல்லது ஏற்றதுமான தோற்றப்பாடுகளைக் கிரகித்து அவற்றின் முழு அளவிலான இயக்கங்களையும் விசைகளையும் செய்திப்படமாக ஒலிப்படமாக பூமிக்குக் கொண்டுவரும் எண்ணற்ற இயந்திர அசைவாற்றல் சக்திகளையும் அவற்றை அழிக்கும் வழியையும் வியாபித்துக்கொண்ட மனிதன் மேன்மேலும் இவற்றில் சிறப்படைந்து கோள்களின் மேலே அண்டவெளிகளில் சஞ்சரித்துக் கொள்ளப்போவதும் சந்தேகத்துக்கில்லை. அறிவியல் அணு ஆக்க இயந்திரத்தின் உச்சியில் உட்கார்ந்துகொண்ட மனிதன் ஒற்றுமை என்ற பதத்தைமட்டும் அவனால் ஆழமாக ஆராய்ச்சி செய்ய முடியவில்லை.
உலகநாடுகளில் பலதரப்பட்ட காரணங்களால் எங்கும் ஒரே யுத்தமயமாகவும் பொருளாதாரம் பட்டினிச்சாவு உள்நாட்டு வெளிநாட்டு கலவரங்களால் மாட்சிமைபொருந்திய இம் மனித உயிர்கள் மடிந்துபோவதையிட்டு வேதனைப்படாமல் இருக்கமுடியாது. இந்த இருபத்தொராம் நூற்றாண்டுக் காலகட்டத்திலும் மானிடவர்க்கமானது மனிதனைமனிதன் ஆட்டிப்படைக்கும் வஞ்சகமனப்பாங்கை ஒருகணம்மறப்பானா? இயற்கையின் சமாதானத்துக்கும் ஒருங்கமைப்புக்கும் ஒத்து வாழ்ந்துகொண்டிருக்கும் ஐந்தறிவு படைத்த உயிரினங்களைவிட மனிதனானவன் எவ்வளவு கீழ்த்தரமான செய்கைகளால்

மீண்டும்மீண்டும் பல்லாயிரக்கணக்கான பாவங்களை அடுக்கிக்கொண்டே போவதினால் மனிதம்தழைத்தோங்க வழிகிடைக்காமல்போகின்றது. சிந்திக்கும் ஆற்றல்பெற்ற இவனால் ஒற்றுமை,சமாதானம் என்பன தழைக்கவும் வழியுண்டா? என பலவாறு தன்னைத்தானே கேட்டுக்கொண்டும் விடைகாணமுடியாமல் வெறுப்படைந்துவிட்டான்.
விஞ்ஞான இயந்திர தொழில்நுட்பக்கருவிகளினால் தன்னைவிட இயக்கத்தில் சாதுர்யம்படைத்துவிட்ட மனிதன் மனிதநேய உணர்வுகளுக்கும் இறைவனின் இவ் உயரிய படைப்புக்கும் பணியும்பாங்கற்றவனாக அணு ஆயுத வல்லாதிக்க கோட்பாடுகளையும் யுத்தவர்மங்களையும் எதிர்நோக்கி தன் பிறப்பின் உரிமையையும் மாட்சியையும் மறந்து சர்வாதிகார வியூகங்களுக்கு தன்னை ஆவாக்கிக்கொண்டு வீறுநடைபோடுகின்ற வேகம் மனிதகுலத்தை என்றோ ஒருநாள் ஆட்டிப்படைக்கும் என்பதில் ஐயமில்லை.
அறிவியல் வல்லாதிக்க ஆயுத சக்திகளின் தோற்றப்பாடுகளினால் அகிலத்தை அடிமையாக்கநினைக்கும் பாங்கு மனிதனை மனிதன்மட்டுமே அழிக்கப் பயன்படுகின்ற ஆயுதமாக அமையுமேதவிர உலக ஜீவ காருண்யத்தைப்பாதுகாக்கவல்ல என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.
விஞ்ஞான நாகரீக வளர்ச்சியானது மனிதனின் கடின வாழ்க்கையை இலகுவானதாக்கிக்கொள்ளப் பயன்படுத்திய ஒரு செயற்பாடேயாகும். ஆனால் எல்லா வல்லமையும்பொருந்திய இறைவியல் கோட்பாடுகளின் உண்மையான சக்தியினைஇவர்களால்இன்னமும் கணக்கிட்டுக்கொள்ளமுடியாமையினாலேயோ அல்லதுஅவ்வழிகளை அடக்கத்துடன் கடைப்பிடிக்கமுடியாமையினாலேயோ மாயையின் சக்திக்குட்பட்டவனாகி சர்வத்தையும் மறந்தவனாய் மறுப்பவனாய் வாழ்வதும் வாழநினைப்பதும் இயலாதகாரியமாக உருவெடுத்துள்ளது.
மனிதனானவன் தனக்காகத் தானே தோற்றிக்கொண்ட இனங்காணமுடியாத தத்துவத்தின் கொள்கைகள் என வர்ணித்தாலும் உலக அளவில் இறைவனின் அருட்சக்தி வியாபித்துள்ளமையை அறுதியாக யாராலும் மறுத்துரைக்கப்படவில்லை. ஆனால் இந்த உயர்ந்த மனிதகுலத்தின் பாவங்களுக்காக அறிவியல் தத்துவ ஞான மார்க்கத்தின் தெளிவுக்காக ஓர் பரந்துபட்ட சமயப்பற்றின் வெளிப்பாட்டுக்காக மனித குலம் சமாதானமும் அமைதியும் தெளிவும் பெற்று வாழவேண்டும் என்று உலகளாவிய ரீதியில் ஒரு புதிய இலட்சியத்தை ஏற்றுக்கொண்டு நாமும் வாழ்வோமாக!
வாழ்க மனிதம்! வளர்க சமாதானம்!

□ □ □

தாயகத்தில் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் மூத்த எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெற்று வெளியிடும் விருப்பம் பூவரசுக்கு மிக உண்டு. எனினும் படைப்பிலக்கியங்களைப் பெறுவதில் ஏற்படக்கூடிய சிரமங்கள் இந்த விருப்பத்துக்குத் தடையாக அமைந்துவிடுகின்றன. எழுத்தாளனாகவும், இதயம் இலக்கிய மாதஇதழின் ஆசிரியனாகவும் என்னை நான் அடையாளம் காட்டத்தொடங்கியபோது மூத்த எழுத்தாளர்களுடனான நேரடித்தொடர்புகள் எனக்கு மிகக்குறைவாகவேகிட்டின.'இதயம்' மாத இதழுக்கென்று அப்போது ஆக்கங்களை அனுப்பிக்கொண்டிருந்த அப்போதைய இளம் எழுத்தாளர்கள் பலரையும்கூட நான் கடிதமூலமாகவே சந்தித்துக்கொண்டிருந்தேன்.

மூத்த எழுத்தாளர்கள் வரிசையில் என்னால் இன்றும் நேசிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சிலரில், வரதர் என்று எழுத்துலகம் நன்கறிந்துள்ள திரு தி.ச.வரதராஜன் அவர்கள்குறிப்பிடத்தக்கவர்.

அவரது 'மறுமலர்ச்சியும் நானும்' என்னும் கட்டுரையை பூவரசு இதழில் மறுபிரசுரம் செய்வதில் அவரோடு உரையாடுவதுபோன்ற உணர்வை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

— இந்துமகேஷ்.

## "மறுமலர்ச்சியும் நானும்"

**- வரதர்.**

நான் ஒரு பிறவி எழுத்துப் பைத்தியம். பிறவி என்ற சொல்லை, என்னுடைய நினைவுதெரிந்த நாளிலிருந்து என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

சமூகசேவா இளைஞர் சங்க வெளியீடான 'கல்வி அனுபந்தம்' சஞ்சிகையில் என்னுடைய முதல்எழுத்து வெளியாயிற்று. அப்போது எனக்கு பதினைந்து வயதிருக்கலாம்.அதற்கு முன்பே நான் சில கையெழுத்து பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறேன். எங்கள் பொன்னாலைக் கிராமத்தில் 'சமூகத் தொண்டுச் சங்கம்' என்ற ஒரு சங்கம் அப்போது இருந்தது. அந்த சங்கத்தின் 'சமூகத் தொண்டன்' என்ற கையெழுத்துப் பத்திரிகைக்கு நான்தான் பத்திராதிபர். நான்படித்த மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் மாணவர் தேர்ச்சிச் சங்கக் கையெழுத்துப்பத்திரிகைக்கும் நானே பத்திராதிபர்.

'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' 1943 ஜுன் மாதத்தில் இளம் எழுத்தாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட போது 'மறுமலர்ச்சி' என்ற பெயரில் ஒரு சஞ்சிகை வெளியிடுவதென்று தீர்மானமாயிற்று. ஆரம்பத்தில் மறுமலர்ச்சி கையெழுத்துப் பத்திரிகையாக அமைந்தது. அதற்கும் நான்தான் ஆசிரியர். சிறு வயதிலிருந்தே, எழுதுவதைப்போல, ஓவியம் வரைவதிலும் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. நான் பத்திராதிபராக இருந்த கையெழுத்துப் பத்திரிகைகளில் என்னுடைய ஓவியத் திறமையையும் காட்டியதாக நினைவு. மறுமலர்ச்சியைப்பற்றி எழுதாமல் என்னைப்பற்றியே எழுதிக்கொண்டிருப்பதாக வாசகர்கள் நினைக்கக்கூடும். நான் இல்லாமல் மறுமலர்ச்சி இல்லை என்பதை இவ்வாறு சற்றுத் தலைக்கனத்துடன் சொல்லிக் கொள்கிறேன். அதனால்தான் மறுமலர்ச்சியைப் பற்றி எழுதும்போது நான் அவசியமாகிறது.

ஈழகேசரி பத்திரிகைக் குழு 'இளைஞர் சங்கம்' என்ற ஒரு அமைப்பை நடத்தியது. அதில் உறுப்பினர்களாக சேர்ந்தவர்கள் 'கல்வி அனுபந்தம்' சஞ்சிகைக்கு விஷயதானம் செய்யலாம். இந்தச் சங்கம் ஒருமுறை யாழ்–வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் ஒரு பேச்சுப்போட்டி நடத்தியதும், அதில் நானும் பங்குபற்றி பேசியதும் நினைவுவருகிறது. (நான் இப்போதுதான் 'மௌனி' அப்போது பேச்சாளன்.)

இந்த ஈழகேசரி இளைஞர் சங்கத்தில் என்னை தவிர, கனக.செந்தில்நாதன், அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, மஹாகவி, ச. பஞ்சாட்சர சர்மா, நாவற்குழியூர் நடராசன் மற்றும் பலரும் உறுப்பினர்களாக இருந்தார்கள். எப்படியோ எனக்கும் அளவெட்டி இளைஞர்களான அ.செ.மு., அ.ந.க., உருத்திரமூர்த்தி(மகாகவி) முதலியோருக்கும் சற்றே நெருக்கமான பழக்கம் ஏற்பட்டது. இடையில் ஒருவிஷயம் நினைவுவருகிறது. ஈழகேசரி இளைஞர் சங்கத்திடமிருந்து எனக்கு ஒருமுறை ஒரு பாராட்டு கடிதமும், இரண்டுநூல்களும் பரிசாகக்கிடைத்தது. ஒன்று 'பொம்மையா? மனைவியா?' என்ற நாடகநூல். இப்சன் எழுதிய நாடகத்தை க.நா.சு மொழி பெயர்த்தது. மற்றது புதுமைப்பித்தன் கதைகள். நாடகநூல் என்னை அப்போது அவ்வளவாக கவரவில்லை.ஆனால் புதுமைப்பித்தன் ஒரேயடியாக என்னைப் பிடித்துக்கொண்டார். நான் புதுமைப்பித்தன் 'விசிறி'யாகமாறியிருந்தேன். இது இருக்க எழுத்தாளர்கள், இலக்கிய ரசிகர்களை ஒன்று சேர்த்து ஒரு சங்கம் அமைக்கவேண்டும் என்ற பெருவிருப்பம் என்மனத்தில் முளைகொண்டது. எனக்குள்ளே இப்படி ஏதாவது முளைகொண்டுவிட்டால் அதை ஒருகை பார்க்காமல் அப்போதும் எனக்குத் தூக்கம்வராது. சங்கத்தைப் பற்றியே சிந்திக்கத்தொடங்கி அதற்கான பெயரையும் தீர்மானித்து விட்டேன். "புதுமைப்பித்தர்கள் சங்கம்!" ஆகா, ஓகோ என்று என்னை நானே முதுகில் தட்டிக் கொண்டு செயல்பட்டேன்.

அளவெட்டி நண்பர்களுக்கும், வேறு சிலருக்கும் அழைப்புகள் அனுப்பி, ஈழகேசரியில் ஒரு அறிவித்தலும் வெளியிட்டு, 13.06.1943ல் ஒரு கூட்டத்தை கூட்டினோம், இடம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள ஒரு வீட்டு

விறாந்தை. பெரிய விறாந்தை. அந்த வீடு ரேவதி குப்புசாமி என்ற சிற்பக் கலைஞருக்கு சொந்தமானது. அவரும் ஒரு இலக்கியரசிகர். சுமார் பதினைந்து பேர்கள்வரை கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அன்றைய கூட்டத்தில் சங்கத்திற்கு பெயர்சூட்டும் தீர்மானம் வந்தபோது, நான் ஏற்கனவே உருப்போட்டு வைத்திருந்த "புதுமைப்பித்தர்கள் சங்கம்" என்ற பெயரைச் சொன்னேன். மிகக்கடுமையான எதிர்ப்பு! புதுமைப் பித்தர்கள் தொடங்கியிருந்த கூட்டத்திலே அவர்களிலும் தொகையில் கூடிய, வாய் வல்லமை மிக்க பல 'கட்டுப்பெட்டிகளும்' வந்து விட்டார்கள்! காரசாரமான விவாதம் நடந்தது.

இதென்ன பெயர்? நாளைக்கு றோட்டால் போகும்போது இதோ ஒரு பித்தன் போகிறான் என்று மக்கள் பகிடிபண்ணுவார்கள், என்று சொன்னார்கள். வாக்கெடுப்பு நடந்தது. 'புதுமைப்பித்தர்கள் சங்கம்' போயே போய்விட்டது. 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' என்ற கற்புள்ள பெயர் சூட்டப்பட்டது. என்னுடைய கோட்டை சரிந்துவிட்ட நிலையிலும் நான் விலகி ஓடிவிடவில்லை. 'மறுமலர்ச்சி' என்ற சங்கத்தின் பத்திரிகைக்கு நான் ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டேன்.

"மறுமலர்ச்சி" கையெழுத்துப்பத்திரிகை மாறிமாறி ஆர்வமுள்ளஇளைஞர்களால் படிக்கப்பட்டது. அது கையெழுத்துப் பத்திரிகையாக எத்தனை இதழ்கள் வந்ததென்பது நினைவில்லை. என்னுடைய பத்திரிகைவெறி கையெழுத்துப் பத்திரிகையோடு அடங்கி விடுவதாக இல்லை.

தமிழ் நாட்டிலிருந்து வரும் சஞ்சிகைகளைப் பார்க்கும்போதெல்லாம், யாழ்ப்பாணத்தில் இருந்து அப்படி ஒரு சஞ்சிகையை வெளியிடவேண்டும் என்று கனவுகாணத் தொடங்கினேன்.மறுமலர்ச்சியை அச்சுப் பத்திரிகையாக்க வேண்டும் என்பது என்னுடைய பெருந்தாகமாயிற்று. அச்சுப் பத்திரிகை என்பது பணத்தோடு சம்பந்தப்பட்ட விஷயம். நாங்களெல்லாம் சாதாரண குடும்பங்களிலிருந்து வந்த வேலைவெட்டி இல்லாத இளைஞர்கள். பத்திரிகையை அச்சில்போடுவதற்குப் பணத்திற்கு எங்கே போவது? ஆனாலும் நான் இரவுபகலாக சிந்தித்தேன். "மனம் உண்டானால் மார்க்கம் உண்டு" என்று சும்மாவா சொன்னார்கள்? ஒரு மார்க்கத்தை கண்டு பிடித்தேன்.

ஐந்து பேர் சேருவது. ஆளுக்கு ஐம்பது ரூபா(அடேயப்பா ஐம்பது ரூபா) போடுவது. அந்தப் பணத்தைக் கொண்டு பத்திரிகையைத் தொடங்க வேண்டியது. பத்திரிகையை தொடங்கிவிட்டால், பிறகென்ன — அந்த இதழ் விற்ற பணத்தைக்கொண்டு அடுத்த இதழை அச்சிட்டு விடலாம்! சரிதான். ஆனால் அந்த ஐந்து முதலாளிகளை எங்கே தேடிப்பிடிப்பது? — அவர்களையும் ஒரு மாதிரி கண்டு பிடித்தேன்.

ஒன்று. — நான் (எப்படியோ கடனோ உடனோ பட்டு ஐம்பது ரூபா கட்ட வேண்டியது தான்!)

இரண்டு. — தமிழாசிரியராக இருந்த எனது ஊர் நண்பர் திரு க.சா.மதியாபரணம்,
மூன்று. — நாவற்குழியூர் நடராசன்,
நான்கு. — பண்டிதர் ச.பஞ்சாட்சர சர்மா,
ஐந்து. — திரு க.இ.குமாரசாமி (கவிஞர் சாரதா — க.இ.சரவணமுத்துவின் தமையனார்) இவரும் ஒரு தமிழாசிரியர்.

இந்த ஐந்துபேரும் ஆளுக்கு ஐம்பதுரூபா முதல் போட்டு பங்கு வியாபாரத்தை ஆரம்பித்தோம். நடைமுறை விதிகளைப்பற்றியெல்லாம் தீர ஆலோசித்து,விவாதித்துதீர்மானித்துக்கொண்டோம்.நான்தான்எல்லாவற்றுக்கும் பொறுப்பு. நாங்கள் எல்லோரும் நகரத்திற்குப் புதியவர்கள், விபரம் தெரியாதவர்கள். எல்லாவற்றையும் கற்பனையில் உருவாக்கிப் பெரிய பெரிய கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்தவர்கள். நாவற்குழியூர் நடராசன் அப்போது இந்துசாதனம் இதழில் துணையாசிரியராக இருந்தார். அவர்தான் இந்த நடைமுறை விஷயங்களில் எங்களுக்குச் சற்றே உதவியாக இருந்தார் என்று சொல்ல வேண்டும்.

மறுமலர்ச்சியை அச்சிடுவதற்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில், ஆஸ்பத்திரிக்கு முன்பாக இருந்த ஸ்ரீ பார்வதி அச்சகத்தை தெரிவுசெய்தோம். (அந்த அச்சகம் இப்போதும் அதேயிடத்தில் இருக்கிறது.) அதன் முதலாளி திரு. சிவஞானபோதம் என்பவர் நல்லமனிதர். அந்த அச்சகத்தில் மூன்றுபேர் வேலை செய்தார்கள். அவசியமெனில் முதலாளியும் வேலைசெய்வார். திரு. இராஜகோபால் என்ற ஒரு நல்ல தொழில்விற்பனரும் அவர்களுள் இருந்தார்.

மறுமலர்ச்சியில் முதல் இதழ் 500 பிரதி அச்சிடப்பட்டதென்றும், அதற்கான செலவு 125 ரூபா என்றும் ஒரு நினைவு. நிச்சயமாக சொல்வதற்கில்லை. மறுமலர்ச்சியின் மேலட்டை கவர்ச்சிகரமாக இருக்கவேண்டும் என்று விரும்பினேன். டிசைன் வரைவிப்பது புளொக் செய்விப்பது எல்லாம் தெரியாதவித்தைகள். நாவற்குழியூர் நடராசன் திரு. துரையப்பா என்ற கலைஞரை அறிமுகப்படுத்தினார். துரையப்பா ஒரு பிறவிக் கலைஞர். ஏதாவது ஒரு படத்தை கொடுத்து அதை புளொக் செய்து தரும்படி கேட்டால், ஈயத்தில் தகடு வார்த்து, அந்த தகட்டில் படத்தை காபன் பிரதி செய்து, பின்னர் சிறு சிறு ஆயுதங்களின் உதவியோடு அருமையாகப் புளொக் செய்துவிடுவார்.சில நுட்பமான ரேகைகள் கொண்ட படத்தைக்கூட அவர் அச்சொட்டாக புளொக்செய்துதந்தது நினைவு இருக்கிறது. புளொக் செலவு பெரும்பாலும் அதன் அளவைப் பொறுத்தது. இரண்டு ரூபாவிலிருந்து மிஞ்சியது பத்துப்பதினைந்து ரூபாவுக்குள்தான் வரும். மறுமலர்ச்சியில் வந்த போட்டோ புளொக்குகள் தவிர்ந்த லைன் புளொக்குகள் எல்லாவற்றையும் திரு. துரையப்பாவே செய்து தந்தவர்.

மறுமலர்ச்சி முதல் இதழ் அச்சாகி முடிந்த சமயத்தில் ஒரு திடுக்கிடும் சம்பவம் நிகழ்ந்தது. தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி சங்கத்துக்குள்ளே இரண்டு நகரத்து நண்பர்கள் இருந்தார்கள். 'மறுமலர்ச்சி' சஞ்சிகை

சங்கத்திற்கே உரியதென்றும், தனிப்பட்ட ஐந்து பேர் கூடி அந்தப் பெரில் சஞ்சிகையை அச்சிடுவது சட்ட விரோதமென்றும் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடர்ந்து ஒரு தடை உத்தரவும் பெற்று விட்டார்கள். அச்சிட்டு முடிந்த பிரதிகள் யாவும் அச்சகத்திலிருந்து நீதிமன்றத்திற்கு போய்விட்டன. எனக்குத் தலையும் தெரியவில்லை வாலும் தெரியவில்லை. நீதிமன்றம், வழக்கு, சட்டத்தரணி — இவையெல்லாம் எனக்குச் சற்றும் பழக்கமில்லாத பொருள்கள்.

நாவற்குழியூர் நடராசன்தான் முன்னின்று, யாரோ ஒரு சட்டத்தரணியை ஒழுங்குசெய்து, நீதிபதிக்கு நிலமையை விளக்கிக்கூறி, பிரதிகளை மீட்டுக் கொண்டுவர உதவிசெய்தார். பிறக்கும்போதே மறுமலர்ச்சிக்கு இப்படி ஒரு கண்டம்! சில உயிரினங்கள் தாமும் தின்னாது, மற்றவர்களையும் தின்னவிடாது. போகட்டும்! மறுமலர்ச்சி மிக்க உற்சாகமாக வெளிவந்தது. என் கால்கள் நிலத்திலில்லை! ஆகாயத்தில் பறப்பது போன்ற மகிழ்ச்சி!

மறுமலர்ச்சி வேலைகள் பெரும்பாலும் ஸ்ரீபார்வதி அச்சகத்திலேயே நடக்கும். நானும் எந்நேரமும் அங்குதான் இருப்பேன். எனினும் மறுமலர்ச்சிக்கு ஒரு தனியான அலுவலகமும் இருந்தது.யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில், ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலைக்கு எதிராகஉள்ள ஒரு 'ஓடை'யில் வரிசையாகச் சில அறைகள் வாடகைக்கு விடப்பட்டிருந்தன. அந்த அறைகளில் ஒன்றுதான் மறுமலர்ச்சியின் அலுவலகம். அந்த அறைக்கு வாடகை ரூபா மூன்று — நாளாந்தம் அல்ல, ஒருமாத வாடகை ரூபா மூன்று! அந்த அறையில் சிறியமேசை, ஒரு கதிரை, ஒரு வாங்கு இவைதான் அலுவலகத் தளபாடங்கள்.

நான், நாவற்குழியூர் நடராசன், பண்டிதர் ச.பஞ்சாட்சர சர்மா, க.சி.சரவணமுத்து, அ.செ.மு., அ.ந.க., மஹாகவி, சு.வே., சொக்கன், சோ.தியாகராசா (சோதி), சு.இராசநாயகன், கு.பெரியதம்பி, க.சி.குலரத்தினம் முதலிய பலர் அவ்வப்போது மறுமலர்ச்சியின் முக்கிய எழுத்தாளர்களாக இருந்தோம்.

இந்திய எழுத்தாளர்கள் சிலரும் — வல்லிக்கண்ணன், ப.கோதண்டராமன் போன்றோர் — இடையிடையே 'விஷயதானம்' செய்தார்கள். அப்போது எங்களில் பலருக்கு காண்டேகர் பைத்தியம், காண்டேகருடைய அற்புதமான நாவல்களை, கா.ஸ்ரீ.ஸ்ரீ. என்பவர் மொழிபெயர்த்து கலைமகளில் வெளியிட்டு வந்தார். எப்படியோ அவரிடம் தொடர்பு கொண்டு, மறுமலர்ச்சிக்கும் காண்டேகருடைய கதை ஒன்று தரும்படிகேட்டோம். அவரும் சம்மதித்து ஐம்பது ரூபா அனுப்பிவைக்கும்படி அறிவித்தார். கஷ்டத்தின் மத்தியிலே அவர் கேட்ட ஐம்பதுரூபாவை அனுப்பிவைத்தோம். பணத்தைப் பெற்றுக் கொண்ட கா.சிறீ.சிறீ. கதையை விரைவில் அனுப்பி வைப்பதாகவும் கதையின்பெயர் "பொன்வண்டி"என்றும் ஒரு அஞ்சலட்டை எழுதியிருந்தார். நாங்களும் அதில் பெரிய பெரிய எழுத்தாளர் சொல்லை நம்பி, காண்டேகரின்


"பொன்வண்டி" மறுமலர்ச்சியில் விரைவில் வெளிவரும் என்று விளம்பரம் செய்தோம். மோசம் போனோம். பொன்வண்டி இருப்பைவிட்டுக் கிளம்பவேயில்லை. இளம்வயதுமுதலே எழுத்தாளர்கள் என்றால் உயர்ந்த — சிறந்த — மனிதர்கள் என்று நம்பிக்கொண்டிருந்த எனக்கு முதலில் கிடைத்த அடி அந்தப் பொன்வண்டிக் கதை. அதனால் அது மிக ஆழமாக மனதில் பதிந்து இன்னமும் நினைவில் இருக்கிறது. இது போன்ற பல சம்பவங்கள் மறுமலர்ச்சிக் காலத்தில் நடந்திருக்கும். ஆனால் அவையெதுவும் இப்போது நினைவில் இல்லை.


மறுமலர்ச்சிஇதழ்களில் வர்த்தகவிளம்பரங்களும் அவ்வப்போது வெளிவந்தன. சில அபிமானிகள் விளம்பரங்கள்தந்து உதவினார்கள். அவர்களில் மிக முக்கியமாக ஒருவரைக் குறிப்பிட வேண்டும். அப்போது யாழ்ப்பாணத்தில் நகை வியாபாரத்தில் கொடிகட்டிப்பறந்தவர்கள் 'எல்.கே.எஸ்.லெப்பை பிறதேஸ்' என்பவர்கள். அவர்களுடைய நிறுவனத்தின் பெயர் 'தங்கமாளிகை' 'எல்.கே.எஸ்' என்ற பெயரே பிரபல்யம். அந்த நிறுவனத்தில் 'மீரான் சாகிப்' என்ற இளைஞர் ஒருவர் இருந்தார். அவர் மிகுந்த ஆர்வத்தோடும் அபிமானத்தோடும் விளம்பரங்களைத் தந்தார். மறுமலர்ச்சியின் மேலட்டையின் பின் பக்கத்தில் அவர்களுடைய விளம்பரம் இருக்கும். மாதா மாதம் மனம் கோணாமல் இருபத்தைந்துரூபா தருவார்கள்.இன்றைய கடுதாசிவிலையுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது அது இன்று ஆயிரத்திற்கும்மேலாகவே இருக்கும்!

1946 மார்ச்மாதத்திலிருந்து 1948 ஒக்டோபர்வரை இருபத்திநான்கு இதழ்கள் வெளிவந்தன. அந்த இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள், கதைகள், கவிதைகள், இவற்றை எழுதிய எழுத்தாளர்கள் — எல்லாவற்றையும் நன்கு அலசி ஆராய்ந்து எனது மதிப்புக்குரிய நண்பர் சொக்கன் அவர்கள் ஒரு நீண்டகட்டுரை எழுதியிருக்கிறார். அது தினகரன் வாரமஞ்சரியில் 1980 யூலை தொடக்கம் நவம்பர் வரை தொடர்ச்சியாக வெளிவந்திருக்கிறது.

தமிழில் புதிய இலக்கிய முளைகொண்டு வளரத்தொடங்கிய காலத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையை நண்பர்களுடன் சேர்ந்து நடத்தியமைகுறித்து இப்போது நான் நல்ல மனநிறைவு அடைகிறேன் — பெருமைப்படுகிறேன்.

— நன்றி! (மல்லிகை வெள்ளிவிழாமலர் 1990)





## ஒரு கருவி செய்வீரா?

கண்டம்தனைவிட்டுக் கண்டம்
கணநொடியில் போய் அடிக்கும்
ஏவுகனை செய்து மக்களை
ஏவி அடிப்போரே!

அண்டம்தனைப்பிளந்து
அந்த ஆதாஎம்தனைக்கிழித்து
அகிலத்தை ஆடவைக்கும்
அணுக்குண்டு செய்வோரே!

இறந்த மனிதனையும்
இறவா மனிதனைப்போல்
நடக்கவைத்து உலகை
நம்ப வைத்த
உலகப்பெரும் நாடுகளே!

உலகப்பெரும் சபையில்
உட்கார்ந்திருக்கும் பெரியோரே!
மனித உள்ளம்தனை அளந்தறியும்
ஒரு கருவி செய்வீரா?
ஒரு கருவி செய்வீரா?

-வேலணையூர் பொன்னண்ணா

-இராஜன் முருகவேல்.

வெள்ளைத்தோல்கள், பழுப்புத்தோல்கள், கறுப்புத்தோல்கள் என பலதரப்பட்ட பன்னாட்டுமக்கள் கூட்டம்கூட்டமாக தாறுமாறாக — அவசர அவசரமாக வாகனங்களோடுவாகனங்களாக — இயந்திரகதியில்இயங்கிக்கொண்டிருந்தார்கள்.
அது பிறேமன் நகரின் பிரதான புகையிரத நிலையம்.
முன்வாசலில் வலப்புறமாக நிரையாக டக்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக இடத்துக்காக முன்நகர — அதை ஒட்டிய தொலைபேசிக் கூண்டுகளின் பக்கத்தில் நிரம்பிவழியும் சைக்கிள்கள்.
பியர் ரின்களுடன் தள்ளாடிவந்த இரண்டு செம்பட்டைப் பரட்டைத்தலைகள் முரட்டுச் சப்பாத்துக்கால்களால் முன்னால் நின்ற சைக்கிள் ஒன்றை உதைத்து நெளித்து,தமது போதைக்குக் குறியீடு வைத்து நகர, சைக்கிள் உரிமையாளரின் வருகைக்காக அனாதையாய்க்கிடந்தது.
சற்றுத் தள்ளி இருந்த பெட்டிக்கடைகளில் இரண்டுபெண்கள் வியாபாரம் செய்வதில் தம்மை மறந்திருந்தார்கள். அந்த பெட்டிக்கடைகளொத்த சிற்றுண்டிச் சாலைகளின் முன்னால் உள்ள இரும்புப் பாதைகளில் "கிறீங் கிறீங்" என்ற அபாய ஒலியால் மக்களை விலத்தியபடி "ட்ராம்"வண்டிகள் பாம்புகளாக நெளிந்து கொண்டிருந்தன.
தூரத்தே தெரிந்த "மக்டொனால்"டின் விளம்பர எழுத்துக்கள் பசிக்காதவர்களையும் புசிக்கத்தூண்டியது. புகையிரத நிலையத்தின் முன்புறமிருந்த ஒன்றிரண்டு காவியேறிய வாங்கில்களில், சில வெள்ளைத் தோல்கள் அரைகுறையாகச் சிதைக்கப்பட்டுக் கண்டபடி நிறங்களைக் கடுமையாக அள்ளி அப்பிய தலைமுடிகளுடன் ஒருவர்மீது ஒருவர் உரசியவாறு, ஏதோ ஒருவித மயக்கநிலையில் உளறிக் கொண்டிருந்தனர்.

அவர்களுடனிருந்த ஒரு வயதானபெண்மணி, கையில் வைன் போத்தலொன்றை உயர்த்திக்காட்டி ஏதோ பாடலை உரத்த குரலில் சிதைத்தபடி, விகாரமாக உடம்பை நெளித்து ஆடுவதுபோல் பாவனை செய்துகொண்டிருந்தாள்.
வேறு இரு இளம்பெண்கள் ஒருத்தியின் தோளை மற்றவள் தாங்கியபடி தள்ளாடிக் கொண்டிருந்தார்கள். அந்த நீலவிழிக்கண்கள் மயங்கிவிடத் தயாரானவைபோல மேலே செருகிக் கொண்டிருந்தன.
அவர்களில் ஒருத்திக்கு வயது இருபதுக்குள்தான் இருக்கும். செந்நிறக் கூந்தல் ஒழுங்காக வாரிவிடப்படாமல், ஒற்றைக் காலில் பாதணிகூட இல்லாமல், கீழேவிழுந்துவிடத் தயாராகிக் கொண்டிருந்தாள்.
அவளை உற்றுப் பார்க்க வேண்டும்போலிருந்தது.
பளிங்குக்கல்லில் செதுக்கப்பட்ட சிற்பம்போன்ற முகம். மாசுமருவற்ற கண்கள். மேலோட்டமாகப்பார்க்கையில் அப்பழுக்கில்லாத அழகுச்சிலை. திரும்பத்திரும்பப் பார்க்கவைக்கும் தோற்றம். ஆனால் மற்றவளின் பிடியில் தள்ளாடிக் கொண்டிருந்தாள்.
மற்றவள் அவளை எச்சரித்தாள்.

"அன்யா கவனம்... சமாளித்துக் கொள்!"

"என்னால்முடியாது... என்னால் நிற்கமுடியவில்லை... காற்றில் பறப்பது போலிருக்கிறது... வீட்டுக்குக் கூட்டிப்போ! இப்படியே படுக்கவேண்டும் போலிருக்கிறது"

"உளறாதே... பொலீஸ் கவனிக்கிறாங்கள்! கோப்பிகுடிப்போம். உனக்குச் சரிவரும்...!"

"இல்லை வீட்டைபோவோம்...!"

"எப்படிப்போவது...? கையில் அவ்வளவு பணம் இல்லை. கோப்பிக்கு மாத்திரம்தான்போதும்.!"

"இல்லை... நான் வீட்டுக்குப்போய்ப் படுக்கவேண்டும்."

"கொஞ்சம்பொறு... மாக்கூஸ்வருவான். பணம்தருவான்."

"மாக்கூஸா...? அவனிடம் பணம் வாங்காதே! நேற்று என்னைக்கட்டிப்பிடித்து முத்தமிட்டான். சனியன்... இதோபார் காயத்தை.அவன் ஒரு மிருகம்...!

"அப்போ எப்படி வீட்டைபோவது...?" என்றவாறு போதை நிறைந்த விழிகளைப் பெரிதாக்கிச் சுற்றுமுற்றும் நோட்டமிட்டான்.

அவளது விழிகள் என் விழிகளைச் சந்தித்தபோது, நான் தலையைத் திருப்பிக்கொண்டாலும், செவிகள் என்னவோ அவர்களின் உரையாடலையே ஒட்டுக்கேட்க விழைந்தன.

"அந்தக் கறுப்பன் எங்களைத்தான் உற்றுப்பார்க்கிறான்!"

"இதற்குமுன் பெண்களைப் பார்த்திருக்கமாட்டான்!"



"சிலவேளை அவனிடமும் சயப்பொட்டலம் இருக்கும்... கேட்டுப்பார்ப்போம்..!"
"காசில்லை...!"
"காசில்லை என்றால் என்ன?படுக்கக் கேட்பான்..."
"சிலவேளை வெறும் சயச்சுருளைக்காட்டி ஏமாத்திவிடுவான். உள்ளே ஒன்றும் இருக்காது...!"
"அதுவும் சரிதான்...!"
எனக்கு என்னவோபோலிருந்தது. மேலும் அங்கே நின்று என்னைப்பற்றிய விமர்சனங்களைக் கேட்குமனவிற்குத் தன்மானம் இடங்கொடுக்கவில்லை.
போதைக்கு அடிமையாகி, சுத்தத்தைச் சுத்தமாக விரட்டி, அசுத்த ஆடைகளுடன் தள்ளாடுபவர்களுக்கு நான் ஒரு காமுகனாம்.வேடிக்கையாக இருந்தது.
கூடவே என்நிலையை எண்ணிப்பார்க்கையில் வேதனையாகவும் இருந்தது. தாயகத்தில் எப்படியெல்லாம் நெஞ்சைநிமிர்த்தி வாழ்ந்துவிட்டு, இங்கே இப்படி இவர்களின் பார்வையில் காமுகனாக, பெண்களையே பார்த்தறியாதவனாக உருவகமானதை என் விதி என்பதா? அல்லது என் இனத்தின் விதி என்பதா?
என்னைப் போல் இன்னும் எத்தனை ஆயிரம் பேர் இப்படியாக...!!

அங்கிருந்து மெதுவாக "ட்ராம்"பாதைகளைத்தாண்டி, தபால்கந்தோர் பக்கமாக வந்தேன். அங்கே ஒரு தார்பரப்பிய முற்றத்தில் சிலமரங்கள். அவற்றின் அடியில் சில வாங்கில்கள். ஒரு வாங்கிலில் ஒரு மெல்லிய உருவம் என்னையே உற்று நோக்கியவாறு இருந்தது.

கன்னங்கரிய தலைமுடி நீண்டுவளர்ந்து காதுகளைமூடி, நெற்றிவரை கசிந்திருந்தது. ஏதோ பழங்காலமுனிவர்களைக் கண்முன்னால் கொண்டு வருவதுபோல் தாடியும் மீசையும் நீளத்தில் ஒன்றையொன்று போட்டிபோட்டவாறு முகத்தில் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருந்தன.
கறுப்புநிற உடைகள் அழுக்கடைந்திருந்தது. விழிகள் இரண்டிலும் இரத்தச்சிவப்பு. கையிலே பியர் ரின் பச்சைநிறத்தில்.
தாடியைத்தடவுவதும் வானத்தை அண்ணாந்து பார்த்துச்சிரிப்பதும், பின்னர் என்னை உற்று நோக்குவதுமாக...!!
இப்படியே மீண்டும் மீண்டும்...
இலங்கையனாக இருக்கவேண்டும். எனினும் வலிய நெருங்கிச்செல்ல மனம் ஒப்பவில்லை. காரணம் அழுக்கு உடைகளும் தாடியும்மீசையும் காவியேறிய பற்களும் சிவந்தகண்களும் சராசரிஇலங்கையனிலிருந்து வேறுபட்டிருந்தது.
ஆனால் அந்த மனிதன் திடீரென எழுந்து என்னை நோக்கி நெருங்கினான்.
பைத்தியமாக இருப்பானோ? மனதிற்குள் பயமாக இருந்தது.
"நீ...இலங்கையன்....?"
டொச்சில் தெறித்தன வார்த்தைகள்.
"இல்லை!"
— அவசரமாக மறுத்தேன். நம்பாமல் பார்த்தான். சிறிது நேரம் நின்று யோசித்து, தனக்குள் சிரித்து தலையாட்டியவாறு நகர்ந்தான்.
ச்சீ...! எனக்கே என்மேல் வெறுப்பாக இருந்தது.
நான் ஏன் இலங்கையன் இல்லை என்று பொய் கூறினேன்?!

அப்படிப் பொய்சொல்லவேண்டும் என்று நினைக்கவில்லை?!
திடீரென்று வந்துவிழுந்தகேள்விக்கு என்னை அறியாமல் கூறியபதில் அது.
அவன் நிச்சயம் இலங்கையனாகத்தான் இருக்கவேண்டும். என்ன கவலைகளால், எந்தச் சூழ்நிலைகளால் இப்படி மாறினானோ?
நான் என்னை இலங்கையன்என்று அடையாளம் காட்டியிருந்தால், அவனின் வாழ்வின் அனுபவங்களைக் கதையாகக் கேட்டு, அவனுக்காகப் பரிதாபப்பட்டிருக்கலாம் அல்லது பரிகசித்திருக்கலாம்!
ஆனால் நான் ஏன் வலியவந்தவனிடமிருந்து அந்நியன்போல விலகிக் கொண்டேன்?
அவனதுதோற்றம் என்னை அவனதுநாட்டுக்காரன் என்று சொல்ல மறுத்ததா? அல்லது அவனுடன் கதைத்தால் அவனைப் போல்தான் நானும் என்று மற்றவர்களால் விமர்சிக்கப்படுவேன் என்ற பயமா? அல்லது அவனிலும் பார்க்க நான் உயர்ந்தவன் என்ற அகம்பாவமா?
புரியவில்லை!
புகையிரதநிலையத்தில் யாரோ இருஜெர்மன்காரிகள் குடிபோதையில் என்ன பேசுகிறார்கள் என ஆர்வமாகச் செவிசாய்த்த நான் வலியவந்து அறிமுகம் செய்ய விரும்பியவனை விலத்திநின்ற போக்கு எனக்கே விளங்கவில்லை!
எனக்கே என்நாட்டவனின் அறிமுகம் வேண்டாதபோது,வேறு நாட்டவர்கள் என்னைப்பற்றி கண்டபடி விமர்சிப்பதில் என்ன தவறிருக்கமுடியும்?!

–O–



மனைவி. — 94ம் ஆண்டுபோய் 95 வந்திட்டுது.
கணவன். — அதுக்கென்னப்பா இப்ப?!
மனைவி. — 94பவுண் தாலியை மாத்தி 95பவுணிலை செய்ய வேண்டாமே?
கணவன். — .........?!.........?!

— சோழியான்.

அன்னிய நாட்டிலிருந்து
அன்பு மடல்.

என் இனிய காதலியே!
அன்னியநாடு வந்தபோதிலும்
அன்பே அன்புமாறவில்லை!
உன் நினைவில்
காலம் கழிகிறதடி கண்ணே!

காதல்வானில்
ஜோடிப்பறவைகளாக
பறந்துதிரிந்ததை
நினைக்கையில் இனிக்குதடி
என்னருமைக் காதலியே!

அள்ளி அணைத்திட
ஆசை ரொம்ப இருக்கிறது
இடைவெளியை எண்ணிவிட்டால்
கவலைகள் வருகிறதடி.

அத்தனை கவலைகளும்
உன்மடல் கண்டதும் மறைகிறதடி
போட்டோவைக் கையில் வைத்தபடி
கதை கதையாய்ப் பேசுவேனடி

நித்தம் நித்திரையில்
சத்தமின்றி முத்தமிட்டுவிட்டு
மறைவது ஏனடி?
கண்டது கனவு என
நினைக்கையில் நெஞ்சம்
ஏக்கத்தில் தவிக்கிறதடி

காதலியே உன்னை மனதில்கொண்டு
கடமையுணர்வுடன்
கட்டில் தேடியலையாமல்
கடிதத்தோடு குடும்பம் நடக்கிறதடி!



உன்னை அழைப்பதற்காக
செல்வத்தை சேர்க்கிற
எறும்புக் கூட்டம்போல்
ஓடி ஓடி உழைத்து
காசு சேர்க்கிறேனடி
காரியம் கைகூட
கடவுள்துணை வேண்டுகிறேனடி!

நீரைத்தேடியலையும் ஒட்டகம்போல்
மோக தாகத்துடன்
காதலியே உன்வரவை
நாடி நிற்கிறேனடி.

— சி.சிவதுரை

# பூமிக்கு மக்கள் ஒரு "டைம் பாம்"(time bomb)

— *கே.என்.குணராஜன்*

பூமி எவ்வளவு பிரமாண்டமானது!
— இருந்தும் அதற்கும் ஒரு "டைம் பாம்".
இது எப்போது வெடிக்கும்? எவ்வாறு இந்த ஆபத்தில் இருந்து தப்பமுடியும்?

பூமியின் இன்றைய சனத்தொகை 5.7பில்லியன்.இச்சனத்தொகை 2025ம் ஆண்டில் 8.5பில்லியனாக அதிகரிக்கவுள்ளது. இத்தொகையை தாங்கக்கூடிய வலிமை பூமிக்கு போதுமா? இதனால் பூமிக்கு ஒரு பாம் வெடித்து சிதறுவது போன்ற ஒருநிலை ஏற்படவிருக்கிறது. இச்சனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தாவிடில் உலகில் பசிக்கொடுமை, போர்கள் போன்றனவும் ஒரு ஒழுங்கின்மையும் ஏற்படும். இதனால் பூமி நரகமாக மாறலாம்.

ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் சனத்தொகைவளர்ச்சியைக் கணக்கிட்டுப் பார்த்தால் அது ஒரு குறிப்பிட்ட வீதங்களாக அதிகரிக்காது பன்மடங்கு தொகையாக அதிகரித்துள்ளது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம், அசுத்தமடையும் சுற்றாடல், பசிக்கொடுமை, பிறநாட்டவரிடம் வெறுப்பு, மக்கள் இடம்பெயர்ப்பு போன்றன தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. எவ்வளவு முயற்சிகள் எடுத்தபோதிலும் பிறப்பின் வீதத்தை ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியவில்லை என உலக சனத்தொகை ஆலோசகரான அமெரிக்க நாட்டின் "Tim wirth" கூறுகின்றார்.

UNன் கணக்கீட்டின்படி இன்றைய உலகசனத்தொகை 5.7 பில்லியன் ஆகும். இன்று சுற்றாடல், அரசியல், பொருளாதாரம் போன்ற எல்லாவற்றிலும் பல கண்டுபிடிப்புகளினால் அபிவிருத்தி செய்யப்பட்டும் இச்சனத்தொகை வளர்ச்சியை ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியவில்லை.

ஒவ்வொருவருடமும் 93மில்லியன் சனத்தொகை அதிகரிக்கிறது. இது நைஜீரியாவின் சனத்தொகை ஆகும். ஒவ்வொரு மாதமும் 7.75 மில்லியன் சனத்தொகை அதிகரிப்பு, இது பேர்லின் சனத்தொகையின் இருமடங்காகும். முதன்முதலாக 1804ம் ஆண்டில் ஒரு பில்லியன் சனத்தொகையாக வந்தது. இது இதுவரை பலமடங்குகளாகி 2025ல் 8.5பில்லியன் தொகையாக வளர்ச்சியடைய இருக்கிறது.

எவ்வளவு பில்லியன் சனத்தொகையை இன்னும் பூமியால் தாங்க முடியும் என்பதை நிபுணர்கள் கூடி ஆராய்கிறார்கள். முறையான கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர முடியாத நிலையில் எவ்வாறு பூமியைக் காப்பாற்றி மக்களை வாழ வைப்பது என்று பல யுக்திகளைத் திரட்டுகிறார்கள்.

நாடுகளின் சனத்தொகை வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று சமமற்று இருப்பதும் மிகப்பெரும் பிரச்சனையாகும். 2025ல் இந்திய உபகண்டங்களிலும், மத்திய அமெரிக்கா, அரபு நாடுகளிலும் தற்போதுள்ள சனத்தொகை இருமடங்குகளாக பெருகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பூமியில் ஒரு பெரும் மாற்றம் ஏற்படுவதற்கான ஒரு காலம் நெருங்குகிறது. என World- Watch- Institut ல் பணிபுரியும் Brown கூறுகின்றார். இன்று மிகப்பெரும் தொழிற்சாலை நாடுகளில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்திருந்தாலும் அது சரியான அளவிற்கு எல்லா மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுமா? அல்லது அவைதான் போதுமானவையாகுமா?

1971ல் இருந்து ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வதற்கு தேவையான சராசரி பரப்பளவுநிலம் குறைந்து வருகிறது. அத்தோடு ஒவ்வொரு உயிர்களுக்கும் தேவையான காற்று, நீர் போன்றனவும் எதிர்காலத்தில் பற்றாக்குறையை நோக்கி செல்கின்றன. 3ம் உலக நாடுகளில் 64 நாடுகள் இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள தகுதியில்லாதவை, இங்குமட்டும் ஒரு பில்லியன் மக்களை பாதுகாக்கவேண்டியநிலமை ஏற்படலாம். எதிர்காலத்தில் நூற்றுக்கணக்கான மில்லியன் மக்கள் பசிக்கொடுமையால் இறக்கலாம்.

1960ல் இருந்து நவீன மருத்துவமுறைகள் 3ம் உலகநாடுகளில் கையாளப்படுவதால்அங்கு சனத்தொகை 2025ல் இருமடங்காக பெருகுவதை குறைக்க முயற்சிப்பதோடு, அங்கு பலநாடுகளில் நடைபெறும் உள்நாட்டு போர்களினாலும், ஒருசில மில்லியன் சனத்தொகை குறையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. அடுத்த 11வருடங்களில் UNன் கணக்கீட்டின்படி 5,6 மில்லியன் எயிட்ஸ் நோயினால் இறப்புகள் ஏற்படலாம். இருந்தும் உகண்டாவில் மட்டும் 2025ல் 20 மில்லியன் சனத்தொகை 46 மில்லியனாக பெருகலாம். சீனாவின் சனத்தொகையும் இன்னும் 25 ஆண்டுகளில் 700 மில்லியனாக இருமடங்காகலாம்.

இச்சனத்தொகை வளர்ச்சியின் வேகத்தை கட்டுப்படுத்தும் முயற்சிகள் வெற்றியடையுமா என்பது மக்களையே பொறுத்துள்ளது. 3ம் உலக நாடுகளில் வாழும் படிப்பறிவு அற்ற பல மக்களுக்கு இவற்றை இக்குறுகிய காலத்தில் விளக்கிக்கூறி அங்கு சனத்தொகையை குறைக்கமுடியுமா? வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றையநாடுகளுக்கு சமமானமுறையில் உதவி செய்து பசிக்கொடுமையில் இருந்து விடுதலை கொடுப்பார்களா? இதற்கிடையில் உள்நாட்டுப்போர்கள் ஒரு 3ம் உலகமகா யுத்தங்களுக்கு வழிவகுத்து பெரும் அழிவுகள் ஏற்படுமா?

இச்சனத்தொகை வளர்ச்சி நாடகம் தொடர்ந்தால் எதிர்காலத்தில் மக்களையே மக்கள் தாக்கும் பரிதாபநிலை ஏற்படும் என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

சனத்தொகை வளர்ச்சி கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து எடுக்கப்பட்ட கணக்கீடுகள் வருமாறு —

| வருடம் | மக்கள்தொகை |
|---|---|
| 0 | கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து காலக்கணக்கீடு ஆரம்பமாகியது |
| 100 | 180 பில்லியன் |
| 500 | 190 " " |
| 600 | 200 " " |
| 700 | 210 " " |
| 800 | 220 " " |
| 900 | 240 " " |
| 1000 | 265 " " |
| 1100 | 320 " " |
| 1200 | 360 " " |
| 1300 | 360 " " |
| 1350 | 370 " " |
| 1400 | 350 " " |
| 1500 | 425 " " |
| 1600 | 545 " " |
| 1650 | 580 " " |
| 1700 | 680 " " |
| 1750 | 790 " " |
| 1800 | 980 " " (0,98 பில்லியன்) |
| 1804 | முதலாவது பில்லியன் சனத்தொகை |
| 1850 | 1,265 பில்லியன் |
| 1900 | 1,645 " |
| 1927 | இரண்டாவது பில்லியன் சனத்தொகை 123 வருடங்களின் பின் |
| 1960 | மூன்றாவது " " " 33 " " |
| 1974 | நான்காவது " " 14 " " |
| 1987 | ஐந்தாவது " " 13 " " |
| 1994 இன்று | 5.7 " " |
| 1998 ஒரு மதிப்பீடு | ஆறாவது பில்லின் சனத்தொகை 11 " " |
| 2000 " " | 6,228 " " |
| 2008 | ஏழாவது " " 10 " " |
| 2019 | எட்டாவது " " 11 " " |
| 2025 | 8,472 " " |
| 2034 | ஒன்பதாவது " " 15 " " |
| 2050 | பத்தாவது " " 16 " " |
| 2087 | பதினொராவது " " 37 " " |
| 2100 | 11.19 " " |

# குரங்குகள்.

வீட்டுக்கு முன்னால் விறாந்தையிற் போய்
உட்கார்ந்தால்
காட்டுக் குரங்குகளைக் கண்டிடலாம்
பின்னேர
வேளைகளில், முற்றத்து வேலிக்கும்
இப்பாலே
ஆளைப் பொருட்படுத்தா தாடுங்கள்
வந்(து) அவற்றின்
வாலைப் புகழ்வேனோ, மாமரத்தும்
பூமரத்தும்
சாலச் சிறந்தபல சாகசங்கள்
செய்கின்ற
வன்மை புகழ்வேனோ, வாயே
தெனக்கிலைக்கு!

புன்மைக்குரங்கா? பொறுங்கள்
அவைக்குள்ளே
அன்பைப்பா ருங்கள், அலாக்காக
அங்குமிங்கும்
இன்பத்தால் அல்லவோ ஏறுவதும்
பாய்கிறதும்?

பாய், அணைகள் போட்டுப் படுக்க
மறந்தாலும்
ஆயுதங்கள் கையில் அவைக்கில்லை
யல்லவோ?
கோயில் எதற் கிந்தக் குலத்துக்கு
அவற்றிடையே
பாவங்கள் என்னும் பழக்கங்கள்
இல்லையே!

கூடிக் குதிக்குங்கள், குந்தும்
குருவிகளை
வேடிக்கைக்காக விரட்டிக்கொண்
டோடுங்கள்........

ஆமாம், என் கொள்கை அறிஞர்
தமதல்ல,
நாமாய் அவை முதிர்ந்த என்பதனை
நான் ஒப்பேன்,
மக்கள் இனமே வளர்ச்சிபெற்றுக்
காலத்தால்
அக்குலமாய் மேம்பா டடைந்து
மகிழ்கிறது!

– மஹாகவி.



# அவசரம்...அவசரம்

நிர்மலாவின் கைவிரல்கள் தட்டச்சு இயந்திரத்தில் இயந்திரகதியில் இயங்கிக் கொண்டிருந்தன. பார்வைமட்டும் அடிக்கடி சுவரில்தொங்கிய கடிகாரத்திற்கு சென்று திரும்பினமனி மாலை ஐந்தை நெருங்கிக் கொண்டிருந்தது. நேரம் செல்லச்செல்ல நிர்மலாவிடம் பரபரப்பு அதிகமாக தென்பட்டது. மனேஜர் கூறிய கடிதத்தை விரைவாக ரைப் அடித்து முடித்து அவரின் அறைக்கு சென்றாள். கடிதத்தை அவரிடம் நீட்டினாள்.

கடிதத்தைப் பார்த்த மனேஜர் முகம் கடுகடுப்பாக மாறியது.

"மிஸிஸ் நிர்மலாஇராமநாதன்! எத்தனைவருடமாக நீங்கள் இந்த கம்பனியில் வேலைபார்க்கிறீர்கள்...இந்த ஒரு சின்னக்கடிதத்தை பிழைவிடாமல் ரைப் பண்ண தெரியவில்லை."

— கத்தினார் மனேஜர்.

"இல்லை சேர் வந்து.... வீட்டுக்குப் போகும் அவசரத்தில்...." என்று நிர்மலா இழுத்தாள்.

"உங்களுக்கு வீட்டுக்குப் போக அவசரம். இப்படிப்பட்ட சின்னப்பிழைகள் பொறுப்புமிக்க இந்த இம்போட் எக்ஸ்போட் கம்பனியில் எத்தனை லட்சரூபா நஷ்டங்களை ஏற்படுத்தும் என்று தெரியுமா?"

அவர்போட்ட கூச்சலில் நிர்மலாவுக்கு வியர்த்துக் கொட்டிவிட்டது. கத்தி முடித்து நிர்மலாவின்முகத்தைப்பார்த்த மனேஜருக்கு பரிதாபம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

"சரி சரி இப்பொழுது வீட்டுக்குப் போங்கள். நாளைக்காலை வந்து முதல் வேலையாக இந்த கடிதத்தை பிழை இல்லாமல் ரைப் செய்து முடியுங்கள். நாளையே இதைத் தபாலில் சேர்த்துவிட வேண்டும்."

"சரி சேர்." என்று தலையாட்டிவிட்டு வெளியே வந்தவள் அவசரமாக தன் மேஜையிலிருந்த கடிதங்களையெல்லாம் எடுத்து உள்ளேவைத்துப் பூட்டிவிட்டு நிமிர்ந்தபொழுது மணி ஐந்தடித்தது. விரைவாக தனது தோல் பையை எடுத்து கழுத்தில் மாட்டிக்கொண்டு பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஓட்டமும் நடையுமாக பஸ் தரிப்பை நோக்கி சென்றாள்.

- புஷ்பா

பஸ்தரிப்பில் கூட்டம் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. அந்தவழியாக வந்த பெரும்பாலான பஸ்கள் பஸ் தரிப்பில் நிற்கவே இல்லை. அந்த அளவுக்கு பஸ்ஸில் கூட்டம். நிறுத்திய ஓரிரண்டு பஸ்களிலும் ஆண்கள் முண்டியடித்துக்கொண்டு போய் ஏறிவிட்டார்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அவர்களுக்கும் வீட்டுக்குப் போக அவசரம். "என்நிலமை யாருக்குப்புரியும்" என்று மனத்துக்குள் புலம்பிக் கொண்டாள்.

திடீரென்று ஒரு பஸ்வந்து நின்றது. நிர்மலா ஓடிச் சென்று அந்த பஸ்ஸில் ஏறிக்கொண்டாள். பஸ்ஸின் சன நெருக்கத்தில் நெரிபட்டு வீடு செல்கையில் அவளுக்கு உடம்பில் அரை உயிர்தான் இருந்தது. அவளது கணவன் அவளுக்கு முன்பே வேலைமுடிந்து வீட்டுக்கு வந்துவிட்டார். கணவர் வானொலியின் முன் அமர்ந்து வெளிநாட்டுச் செய்தி கேட்டுக்கொண்டிருந்தார். காலையில் அவசரத்தில் சமைத்துவிட்டுச் சென்ற பாத்திரபண்டங்கள் எல்லாம் அங்கொன்று இங்கொன்றாக குசினியே அலங்கோலமாகக் காட்சியளித்தது. அவற்றை பார்த்த நிர்மலாவிற்கு தலையைச்சுற்றியது. அவசரமாக புடவையை மாற்றிக் கொண்டு சமையலறையில் நுழைந்தாள். துரிதகதியில் இரவு உணவு தயாரிக்க ஆரம்பித்தாள். விரைவாக சமையலை முடித்து சற்று ஓய்வெடுக்க நினைத்தவளுக்கு அப்படி முடியவில்லை. உடல் பலமிழந்து சோர்வாக இயங்கிற்று. தனக்கு சற்று சமையலுக்கு உதவி செய்யுமாறு கணவனை அழைத்தாள்.
"நான் செய்தி கேட்கும் பொழுது குழப்பாதே என்று உனக்கு எத்தனை நாள் கூறியிருக்கிறேன்."
— ராம் எரிந்து விழுந்தான்.
"சாந்தி வந்து இந்த தேங்காயை சற்று துருவித் தா" என்று மகளை அழைத்தாள்.
"அம்மா! நாளை எங்கள் பாடசாலையில் கலைவிழா. அதற்கான நடன ஒத்திகை பார்க்கவேண்டும்." என்று அங்கிருந்தவாறே கூறிவிட்டு "தா தை தா தை!" என்று குதித்துக் கொண்டிருந்தாள்.
மகன்மார் இருவரும் தொலைக்காட்சியில் மூழ்கியிருந்தனர். அவர்களை அழைத்தும் பயனில்லை.
எப்படியோ வேலைகளை எல்லாம் முடித்து எல்லோருக்கும் சாப்பாடு கொடுத்துவிட்டு தானும் குளித்து சாப்பிட்டுவிட்டு படுக்கையில் விழுந்த அவளுக்கு நித்திரை அவளையறியாமல் வந்தது.

மீண்டும் அடுத்தநாள் காலை 5மணி அலாரம் அடித்ததும் பதறி எழுந்தாள். ஓட்டமும் நடையுமாக எல்லா வேலைகளையும் முடித்தாள். கணவன், பிள்ளைகளுக்கு காப்பி கொடுப்பதிலிருந்து அவர்களின் எல்லா அன்றாட வேலைகளையும் முடித்துவிட்டு நிமிர்ந்த பொழுது அலுவலகத்திற்கு நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. முதல் நாள் மனேஜரிடம் வாங்கிய திட்டுக்கள் அவளுக்கு நினைவுக்கு வந்தன. பதறியடித்துக் கொண்டு சேலையை வாரிச் சுற்றிக் கொண்டு பஸ்ஸைப்

பிடிப்பதற்கு ஓடினாள்.
பஸ் தரிப்புக்கு செல்வதற்கும் எதிர் திசையில் அவள் செல்ல வேண்டிய பஸ் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. அவசரமாக வீதியை கடப்பதற்கு ஓடினாள். கண்மூடி முடிப்பதற்குள் அது நடந்து முடிந்துவிட்டது.

எதிர்த்திசையில் வந்த மோட்டார்வண்டியுடன் மோதியதால் நிர்மலா தூக்கி வீசப்பட்டாள். தெருவில் ஒரே இரத்த வெள்ளம். அம்புலன்ஸ் வந்து அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்தது.

பத்து நாட்களின் பின்பு நிர்மலா கண்விழித்து பார்த்தபொழுதுதான் ஆஸ்பத்திரியில் இருப்பது தெரிந்தது. நடந்தவைகளை எல்லாம் கணவனும் பிள்ளைகளும் கூற சம்பவங்கள் அவளுக்கு சிறிது சிறிதாக ஞாபகம் வந்தன. இரண்டு மாதங்கள் அவள் ஆஸ்பத்திரியில் இருக்க நேர்ந்தது. அவள் மனதிற்குள் ஒரே பதைப்பு. கணவனும் பிள்ளைகளும் தான் இல்லாமல் என்ன பாடுபடுகிறார்களோ. தொட்டதற்கெல்லாம் "அம்மா! அம்மா!" என்று கூப்பிடும் பிள்ளைகள், சின்னச்சின்ன தேவைகளுக்கு கூட "நிர்மலா! நிர்மலா!" என்று கூச்சல் போடும் கணவன். இரண்டு மாதங்களின் பின்னர் அவள் குணமாகி வீட்டுக்குச் செல்லும் நாளும் வந்தது. மேலும் இரண்டுவாரங்கள் வீட்டில் ஓய்வு எடுக்கவேண்டும் என்று வைத்தியர் கூறிவிட்டார். அம்மாவை மீண்டும் வீட்டில் கண்டதும் பிள்ளைகள் ஆரத்தழுவிக் கொண்டனர்.
அடுத்த நாள் திங்கட்கிழமை. காலையிலேயே எழுந்திருக்க வேண்டும் என்று படுத்தவள் உடம்பு அசதியினால் நித்திரையாகி விட்டாள். விழித்துப்பார்த்தபொழுது மணி ஆறரை காட்டியது. படுக்கையிலிருந்து அசதியுடன் எழுந்தாள். அவள் கண்களையே நம்பமுடியவில்லை.
மகள் சாந்தி காப்பியுடன் எதிரே நின்றாள்.
"அம்மா காப்பி சாப்பிடுங்கள் நானே தயாரித்தது." என்று நீட்டினாள்.
"என்ன நீயா.?" என்று நிர்மலா அதிர்ச்சியடைந்தாள். படுக்கையில் காப்பி கொடுக்காவிட்டால் எழுந்திருக்காத மகள்.
"சாந்தி! வா தலைவாரி விடுகிறேன். பாடசாலைக்கு நேரமாகி விட்டது."
"இல்லையம்மா இப்போதெல்லாம் நானே தலைவாரி பின்னல்போட பழகிக் கொண்டேன். நீங்கள் எழுந்திருக்க வேண்டாம். படுத்திருங்கள்." என்று கூறி மின்னலாகப்பறந்தாள்.
சற்று சிரமத்துடன் எழுந்து அடுக்களைக்குச் சென்றவளுக்கு மீண்டும் அதிர்ச்சி, கணவன் ராம் இயந்திரகதியில் இயங்கிக் கொண்டிருந்தார்.
மூன்றுபிள்ளைகளுக்கும் தனக்கும் மதியஉணவை சாப்பாட்டுப்பெட்டியில் வைத்துக் கொண்டிருந்தார்.
"நிர்மலா! நீ ஏன் எழுந்து வந்தாய்? பேசாமல் போய் படுத்திரு. உன் சாப்பாடு மேசையில் வைத்திருக்கிறேன். நேரத்திற்கு சாப்பிடு." என்றார்.
வீட்டை சுற்றும் முற்றும் பார்த்தாள். எல்லாம் ஒழுங்காக இருந்தன. படுக்கையை சரி செய்வோம் என்று சென்றவளை மகன்மார் கதிரையில் இருக்கும்படி கூறிவிட்டு தாங்களே அவற்றையும் செய்து முடித்தனர்.

"என்ன இது. இதைக்கூட என்னால் செய்ய முடியாதா? எனக்கு இப்போது பூரண குணம். ஏதோ டாக்டர் இரண்டு கிழமை 'ரெஸ்ட்' எடுக்கும்படி கூறியதால் வீட்டில் இருக்கவேண்டியிருக்கிறது" என்று கூறி முடிப்பதற்குள் கணவனும் பிள்ளைகளும் ஒரேநேரத்தில் முந்திக் கொண்டனர் —

"இப்படித்தான் நீங்கள் ஒவ்வொன்றையும் எங்களைச்செய்யவிடாமல் நீங்களே செய்து நீங்களும் கஷ்டப்பட்டு எங்களையும் கஷ்டப்படுத்தி விட்டீர்கள்."

"என்ன உங்களைக் கஷ்டப்படுத்தினேனா?" என்றவளை,

"ஆமாம் நீங்கள் இல்லாத இந்த இரண்டு மாதமும் நாங்கள் பட்ட கஷ்டம். எங்களால் தானே உங்களுக்கு இந்த விபத்து நேர்ந்தது. அவசரப்படாமல் ஆபீசுக்கு நீங்கள் சென்றிருந்தால் உங்களுக்கு இந்த விபத்து நடந்திருக்காது. எப்படியோ இந்த இரண்டு மாதத்தில் நாங்கள் பண்பட்டு விட்டோம். எங்கள் தேவைகளை நாங்களே பூர்த்தி செய்யப் பழகிவிட்டோம். மீண்டும் எங்களைப் பழையமாதிரி பழக்கி விடாதீர்கள்." என்று கூறி அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டு பிள்ளைகள் பாடசாலைக்குப் புறப்பட்டனர்.

"நான் வருகிறேன் நீயிரு!" என்று மனைவியின் தலையை வருடிவிட்டு ராமுவும் அலுவலகத்திற்குப் புறப்பட்டான்.

நிர்மலா மெய்மறந்துநின்றாள். எப்படியோ தனக்குநேர்ந்தவிபத்தினால் கணவன் பிள்ளைகள்திருந்தி தங்கள்பொறுப்பை உணர்ந்தது அவளுக்கு திருப்திதான்.

— O —



## பிரிவின் வரிகள்



பூவிரிவதுபோலப் புன்னகை
முள்ளாகக்குத்துவது ஏனோ என்னை.
நான் தேடிய இடமெல்லாம் நீ
நீ தேடாத இடமெல்லாம் நான்.
வஞ்சி நீ என்னைத் தீண்டாததால்
மலர்கள்கூட என்னைத் தீண்ட மறுக்கின்றன.
குளிர்நிலவே நீ சுடுவதால்
குளிர்ந்த நீர்கூட சுடுகிறது எனக்கு.
அமாவாசைகூட இனித்த எனக்கு
இன்று பால்நிலவுகூட என்னைப் பகைக்கிறதே!
பைங்கிளியே கவிதைக்கு கவிபாட வைத்தவள் நீ
இன்று கலக்கத்துக்குக் கவிபாட வைத்ததேனோ
நேற்றுவரை எனைப்பார்த்துச்சிரித்த ரோஜா
இன்று எனைப்பார்த்து ஏளனம் செய்வதேனோ?
என் கற்பனைக்குக்கரு சேர்த்தவள் நீ
இன்றோ கல்லறைக்கு இட்டுச்செல்வதேனோ
அன்று நெஞ்சமெல்லாம் பசுமையாய் நின்றவள்
இன்று பாலைவனமாக மாறியதேனோ?
அன்று வசந்தத்திற்கு வழிகாட்டியவள்
இன்று மரணத்தின் வாசலுக்கல்லவா வழிகாட்டுகிறாய்
அன்று என் உறக்கம் பஞ்சு மெத்தையிலன்றோ
இன்றைய பொழுதில் முட்புதரிலும் எனக்கிடமில்லை
காலமெல்லாம் நீ என் அருகில் என நினைத்தவன்
இன்று காலனையல்லவா அருகில் இருத்தி வைக்கிறாய்
அன்றெல்லாம் என்வாயில் கல்யாணி ராகம்தான்
இன்றோ முகாரியைத்தவிர வேறேதும் முனகல் இல்லையே!
தினம்தினம் கனவினில் உன்னோடு கைகோர்த்துத் திரிந்தவன்
இன்று தனிமையின் சிறையிலன்றோ தத்தளிக்கின்றேன்
அன்றெல்லாம் பசுமைநினைவுகளைச் சுமந்தவன்
இன்று அதன் எச்சங்களும் இன்றித் தொலைத்துவிட்டுநிற்கிறேன்
உந்தன் சிரிப்புக்கு ஆயிரம் அர்த்தங்கள் கண்டவன்
ஏனோ உன் மௌனத்திற்குத் தடுமாறுகிறேன்
அன்று பேரிடியாய் பொழிந்த மழைமேகம்
இன்று நீர் ஏதுமின்றி வறண்டு கிடக்கிறது
அன்று பார்த்த இடமெல்லாம் அழகின் அணிவகுப்பன்றோ
இன்று அவை சுட்டெரிக்கும் தணலாக அல்லவோ தெரிகிறது
எனினும் காலத்தால் அழியா உன்னுருவம்
என் மரணத்தில்தான் முற்றுப்பெறும்.

-என்.திலீபன்

என்.கே.மகாலிங்கம்.

வெள்ளிக்குச்சிகள் இருள்திரையை மேகத்துடன் சேர்த்துக் குத்தி வைத்திருந்தன. இருள்படிய மரங்கள் பயத்தை உருட்டிச் சேர்த்து வைத்திருந்தன. தொட்டால் பொட்டு வைக்கலாம்போன்ற குழம்பு இருட்டு சில மரங்களில் தேங்கி இருந்தது. வழக்கத்தைவிட வெறுமை,விரக்தி, பயங்கரம், வெறுப்பு, ஆகியவை ஊன்றி மனதைக்குடைந்தன.

சாவைப்பற்றிய பயமோ துன்பமோ இருப்பதாகத் துளிக்கூட நினைவில்லை. மாறாக அப்படி இருந்தால் சந்தோஷமான நினைவுகள்தான் வரும்போல இருந்தன. விடியும்மட்டும் விழித்திருந்து எதையும் ஊன்றி நினைக்காமல் சிந்திககாமல் இருந்தால் சுகமாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டான்.



சிந்தனைகள் வெறுப்பையும் பலவேளை அலுப்பையும் ஊட்டின. அது சிந்தனைக்கு எதிரான, அறிவுக்கு எதிரான கட்சியைச் சார்ந்ததல்ல. சோம்பலுமல்ல. ஆனால் எதிலும் தேவை தேவையற்ற என்ற பாகுபாமட்டற்ற நிலை. அது முக்திநிலையுமல்ல. துறவுமல்ல. வெறுமையின் மையம். விளக்கங்களை வெறுக்கும் நிலை. அந்தநிலையில் காலத்தின் பிரக்ஞை இல்லாமல் காலத்தை ஓட்டிவிடலாம் என்ற நினைவு. இருப்பினும் காலம் என்ற கட்டுப்பாட்டிற்குள் வளர்ந்த காரணத்தால் காலத்தின் நினைவுகள் இடைக்கிடை உதைத்து உலகத்தின் இருப்பை உணர்த்தும். எந்த நினைவுகளுமற்ற வெறுமையில் தியானம் செய்வது அசாத்தியமானதோ?

கட்டுப்பாடுகளற்ற கட்டற்ற நிலை. குறைந்தது மனத்தின் தளத்தில் கூட ஏற்படுவது.எட்டிவிடுவது இயலாத ஒன்றோ? ஞானிகளின் ஞானத்தின் நிலைகள். ஒளிபோட்டுக்காட்டிவிட்டு மறைந்து தோன்றும் மின்மினிகளின் தோற்றங்களா? நிலையான நிழல்படத்தின் தெளிவான இருப்பா? அல்லது அவனின் இயலாமையின் அழுங்குப்பிடியான மனமில்லாமையின் வெளிப்பாடா? அப்படியானால் அந்த நிலை எட்டாத கனியா? அந்தக்கனிக்குத் தான் ஏன் ஏங்க வேண்டும்? அவற்றைக்கூட அவாவும் நிலை வரக்கூடாது என்பதுதான் அதன் அர்த்தமா?

எங்கோ நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கான தாக்கம் அடிமனத்தில் நோவாகக் குடைகிறதே.அதற்கான காரண காரியங்களை நிகழ்ச்சிகளின் படங்கள் விழித்திரையில் விழுகின்றனவே.அவையின் உண்மைகள் பல ஊடகங்கள் வாயிலாக வந்த தாக்குகின்றனவே! நினைவுகளின் ஏற்கனவே உள்ள அனுபவங்களின் தாக்கமும் விளைவும் வெளிப்பாடுமா அவை? வாழ்க்கை இன்றுள்ளதா? அல்லது ஆரம்பம்தொட்டு வந்துள்ள அனுபவங்களினதும் — இன்றுள்ளதும் நாளை நடக்கப் போகும் என்பவற்றின் கற்பனைகளின் கூட்டுக் கலப்பா? எவ்வளவுதான் தூர இருந்தாலும் பலவற்றின் தாக்கம் பல அனுபவங்களுக்கு வழி சமைத்துக்கொடுத்து விழிப்படையச் செய்கின்றனவே.

வெறுமையான இல்லாத ஒன்றை (?) தேடி அலைகின்றது மனம்.அதற்குச்சாந்தியை எது கொடுக்கும்.எதுவுமே அற்ற அலைச்சலா? மனத்தின் அலைச்சலே அதற்குரிய மருந்தையும் இதமாகத்தடவி விடுகிறதா? வெறுமையின் — வெறுமையைத்தேடும் மனத்தின் — இறுதியில் சாந்தியைப்போன்றதொரு சுகமான தென்றல் — இலைகளின் அசைவுகளற்ற தன்மைத்தான வெளிப்பாடான சுகத்தைத்தருகின்றதே.

காலத்தின் இடைவெளிக்குள் இவை கட்டுப்படும்போது சுகத்தின் வசந்தம் குறைந்து விடுகிறது. வீணான கவலைகள் குறுக்கிட்டுவிடுகின்றன. காலம்தான் இவற்றுக்கெல்லாம் இடையூறாக நின்று வெறுமையின் விளக்கத்தை வீணடித்துவிடுகின்றதோ? காலத்தை வென்ற வெறுமையை அடையும் உரித்தாக்கும் நிலையும் எண்ணமும் வீணானதோ?

காற்றின் அசைவோ, உயிரின் பிரிவோ இலை ஒன்று உதிர்த்தது-அது அவன்முன்னே விழுந்து சருகாக அசைந்தது-அது ஏதோ ஒன்றின் இருப்பை — வெறுமையின் எதை? — காட்டியது. உயிரற்ற உடல்களின் இருப்பையா? அல்லது சடத்தின் பரிணாமத்தின் வளர்ச்சியையா? எது எப்படி இருப்பினும் அது வேறொன்றின் அனுபவத்தின் வருகையையும் இருப்பையும் உணர்த்தியது.

(நன்றி — காலம்)

---


# அன்பின் தமிழ் நெஞ்சங்களே!

உங்களுக்குத் தேவையானவகையில்
உங்களுடைய பிறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்கள்,
மற்றும் உறுதியான ஆவணங்கள் யாவும்
(தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ளவை)
எம்மால் ஜேர்மன்மொழியில்(டொச்) மொழிபெயர்த்துத்தரப்படும்.
உங்கள் தேவைகள் காலதாமதமின்றி உடனுக்குடன் பூர்த்தி செய்யப்படும்.
ஆலோசனைகள் வேண்டின் வரவேற்கப்படும்.

**George Dias**
Lortzing Str 10
59063 Hamm.
Telefon: 02381/51126

## *வாழ்க பூவரசு!*

'நான்பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம்!' என்பதற்கிணங்க ஓர் இலக்கியப் படைப்பானது மனிதஉலகத்தை விழிப்படையச்செய்யவேண்டும்.கிரேக்கத்தின் தத்துவஞானி சோக்கிரட்டீஸின் அறிவுப்பேரலைகளினால் அந்த நாட்டினது மக்களின் அறிவியல்வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டது.அவ்வாறே எமது இலக்கியங்களிலும் எழுச்சியை ஏற்படுத்தவேண்டும். எமது இலக்கிய பண்பாடுகளும் காப்பிய கலாச்சார வரலாறுகளும் தமிழ் இனத்தை இந்த இருபத்தோராம் நூற்றாண்டின் காலகட்டத்திலும் சுட்டிக்காட்டுவதற்கு சான்றாக அமைந்துள்ளது என்றால் அதனை யாராலும் மறுக்கமுடியாது.

இலக்கியசேவை என்பது பொறுமையும்,வாசகர்களினதும் அபிமானிகளினதும் மனக்கருத்துக்களைப் புரிந்து கொண்டு நெறிப்படுத்தும்வரை ஆசிரியர் படுகின்ற கஷ்டநஷ்டங்களை உண்மையில் எழுத்துக்களில் எடுத்துக்காட்ட முடியாத பணியாகும். இந்த இனிய இதழானது தன்னகத்தே மழலையிதழ், கலையிதழ், சமய இலக்கிய இதழ், அறிவியலிதழ், கவியிதழ், ஆகிய ஐந்து இதழ்களையும் அகலவிரித்து அறிவுப்பசிக்கு அமுதூட்டி எழுத்தாளப் பெருமக்களையும் இளைஞர்களையும் கவர்ந்து தமிழ் நெஞ்சங்களிலெல்லாம் தனக்கென தனியிடத்தைப் பிடித்துக்கொண்டு விளங்குகிறதென்றால் பாராட்டாமல் இருக்கமுடியாது.

தேமதுரத் தமிழோசை தேசமெல்லாம் பரப்பும்வகையில் தமிழுக்கும் தாயகத்துக்கும் நன்மைபயக்கும் நற்கருத்துக்களுடன் தனது நான்காவது ஆண்டை நிறைவுசெய்வதையிட்டு தமிழ்கூறும் நல்லுலகம் மகிழ்ச்சிப் பெருக்கில்திளைக்கும்போது புதிய இதழானது புதியபரிமாணங்களுடன் புதிய ஆண்டில் சிறப்பம்சங்களுடன் அடியெடுத்துவைத்து பஞ்சவிதழ்களையும் பண்போடுவிரித்துப்பவனிவர ஆண்டவனின் ஆசியைவேண்டிவாழ்த்துகிறேன்.

**-அ.வேணுகோபாலன்.**

# வாழியநீ பூவரசே!

பூவரசைப்பாடி எந்தன்
வாழ்த்துரைப்பேன்
பூப்பூவாய் மெட்டெடுத்து
சேர்த்திசைப்பேன்
ஆவலுடன் ஓடிவந்தேன்
என்பாட்டைக் கேட்பாயோ?
அரவணைத்தே எனை,
அகமகிழ்ந்தாய்!

திக்கெட்டும் தெவிட்டாத
தேமதுரத்தமிழோசை — எங்கள்
எண்ணமெல்லாம் நிறைந்து
இன்பமணம் கமழ்ந்து
சொல்லரிய கவிதைச்
சுவைதனிலே மலர்கின்ற பூவரசே! — நீ
பண்ணோடு தாளமிட்டு
பாவோடு தேன்கலந்து
எல்லையில்லாக்காலம் இந்த
மண்ணிலே தான் உயர்ந்து
எண்ணரிய காவியங்கள் எம்
இதயந்தனில் எழுது!
வண்ணத்தமிழாலே உனை
வாயார வாழ்த்துகிறோம்!

நான்காண்டில் நீபடைத்த
நல்ல தமிழ்க்கலையாவும்
நம்முள்ளம்தனை நிறைக்கும்
நல்லதொரு நாள் இன்று!
இந்நாளில் —
இன்னல்கள் சேராமல்
இடர் வந்து சூழாமல்
நின்சேவைகள் நமது உள்ளங்களிலும்
நாநிலத்திலும் உயர்ந்த செழித்து
வளர்ந்திட மனம்நிறைந்து
வாழ்த்துகிறோம்
வாழி!
வளர்க நம் பூவரசே!

— சக்திபாலா.

## "உழைக்கும் பத்திரிகையாளர்களின் உணர்வுகள்!"

*பத்திரிகையாளனின் அனுபவங்கள் என்பது மெய்சிலிர்க்கவைக்கும் சம்பவங்களைக் கொண்டன. செய்திகளாக, கட்டுரைகளாக வெளிவரும் தகவல்களைவிட பலமடங்கு தகவல்கள்அவனிடம் மறைந்துகொண்டிருக்கும். பூவரசு நான்காவது ஆண்டுநிறைவு மலரில் பத்திரிகையாளனாக ஒருசில அனுபவங்களை —உள்ளத்து உணர்வுகளை— பூவரசு வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். புத்தகமாக வெளியிடும் அளவுக்குஅனுபவங்கள் எனக்கு ஏற்பட்டுள்ளன. அவற்றில் சில துளிகளை இங்கே சிந்துகிறேன். என்அனுபவங்கள் உங்களை எப்படிப் பாதித்தன என்பதை அறியவிரும்புகிறேன். வாசித்துவிட்டு உங்கள் அபிப்பிராயங்களை பூவரசுக்கு எழுதுங்கள்.*

**-வி. ஆர். வரதராஜா.**

குளிர்ந்த நீரோடை போன்றது தெளிந்தசிந்தனை என்று சொல்வார்கள். ஆன்மீகத்தை நாடினால் தெளிந்தசிந்தனை பெறலாம் என்பார்கள் ஆன்மீக வாதிகள்.

ஆனால் இந்தஇயந்திர உலகில் நடைபெறும் வாழ்க்கைப் போராட்டத்தில்....! குற்றாலம் குளிர்ந்த அருவியில் குளித்தபோது என்னுள் ஒரு தெளிவு ஏற்பட்டது. ஆனாலும் அந்தத் தெளிவும் சில நிமிடங்களே நீடித்தது.

மனிதன் தெளிந்தசிந்தனை பெற்றால் உலகம் பொற்கால கோளத்தினுள் பிரவேசித்துவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

தெளிந்தசிந்தனை பெறவிடாது மனிதனைத் தடுப்பதற்கான காரணிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனாலும் அவனே அவனுக்குத் தடை என்று கூறும்போது....!

தெளிந்த சிந்தனை என்பது வேறு! திருப்தி என்பது வேறு.

முன்னையது உயர்ந்தமலை என்றால் பின்னையது தாழ்ந்த மடு என்றுதான் சொல்லவேண்டும்.

உலகில் திருப்தியடையாத மனிதனே இல்லை எனலாம். ஒருமுறையல்ல, ஓராயிரம்முறை! திருப்தியடைந்தமனிதர்களும் இருக்கின்றார்கள்.

சிலஎழுத்தாளர்கள் எழுதுவதில் திருப்தியடைகிறார்கள். சிலர் பொழுது போக்காக எழுதுகிறார்கள். மேலும் சிலர் உழைப்புக்காகவே எழுதுகிறார்கள். எழுத்துத்துறைக்கு தெளிந்த சிந்தனை அவசியம்தான். ஆனால் கிடைத்தால்தானே!

திருப்திக்காக எழுதலாம். அதற்குச் சந்தர்ப்பங்கள் உண்டு.

பத்திரிகைத்துறையில் பதினேழு ஆண்டுகாலம் என்திருப்திக்காக எழுதினேன் என்று கூறிவிடமுடியுமா? ஆனால் உழைப்புக்காகவும் என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அது என் தொழில்!

பெற்றோர்,சகோதரர்கள்..பின்பு திருமணம்...மனைவி, பிள்ளைகள்...!

எழுதுவதனால் வந்த உழைப்பு... அல்லது வருமானம்....!

உழைக்கும் வர்க்கத்தைப்பற்றி மேடைமுழக்கம் செய்பவர்கள் பத்திரிகையாளர்களை உழைக்கும் வர்க்கமாக நினைப்பதில்லை.

பத்திரிகையாளர்கள் நடுநிலை வகிக்கவேண்டும். கட்சியில் தீவிரம் காட்டக் கூடாது.தொழிற்சங்கத்தில் சேரக்கூடாது.மன்றங்களில் முக்கியபதவி வகிக்கக் கூடாது. இப்படிப் பல கட்டுப்பாடுகள்.

'உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் தொழிற்சங்க உரிமைகள் கிடைக்க வேண்டும்!'

— இப்படி நாம் முதலில் குரல் எழுப்பினோம்.

'ஓடிக்கொண்டிருந்தவர்கள்' எல்லோரும் திரும்பி எங்களை 'முறைத்துப்' பார்த்தார்கள்.

'பிறர் புகழ்பாடும் — புகழ்பரப்பும் — உங்களுக்கும் தொழிற்சங்க உரிமைகள் அவசியமா?

ஆமாம்!ஆனால் இதனை நிரூபிக்க நாம் தொழிற்சங்கப் பிரச்சாரம் நடாத்த முடியுமா என்ன?

எல்லாப்பிரச்சினைகளுக்கும் களம்அமைத்துக்கொடுத்து அவற்றை நிவர்த்தி செய்கின்றோம்.அப்படியானால் உழைக்கும்பத்திரிகையாளர்களைக் கவனிப்பது யார்?உலகில் பெரும்பாலான நாடுகளில் பத்திரிகையாளர்களுக்கென சங்கங்கள் இருக்கின்றன.

ஆனால் அரசின் தொழிற்சட்டத்திற்குட்பட்ட சம்பள நிர்ணயசபையொன்றின் மூலம் உழைக்கும் பத்திரிகையாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட நாடுகள் குறைவு என்றே சொல்லவேண்டும். இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கமொன்றை இலங்கைப் பாராளுமன்றத்தின் மூலம் அங்கீகரிக்க பத்திரிகையாளர்கள் 'போராட்டம்' நடாத்தினார்கள்.

சாத்வீகப் போராட்டம் அது.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்படி நாட்டின் நிர்வாகத்தை நடாத்தும் சகலருடனும் பத்திரிகையாளர்கள் நெருங்கிப் பழகுகிறார்கள்.

ஆனாலும் தங்கள் உரிமைக்காக ஒரு சங்கம் அமைக்க அவர்கள்பட்ட கஷ்டம் இருக்கின்றதே...

ஏதோ ஒரு வழியில் சாதித்துவிட்டோம்.
அரசாங்கங்களையே ஆட்டம்காணவைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் ஒரு சட்டப்பூர்வமான உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது.
சம்பளம், விடுமுறை, மற்றும் ஏனைய தொழிலாளர்களுக்குள்ள உரிமைகள் அந்தத் தொழிலாளர் சட்டங்களுடன் சேர்ந்து கொண்டன.
இலங்கை உழைக்கும்பத்திரிகையாளர் சங்கத்தில் உபபொருளாளர் பதவிக்கு தெரிவாகும் அளவுக்கு எனது பங்களிப்பும் அதில் அமைந்தது.
பத்திரிகையாளரின் தெளிந்த சிந்தனைக்குவரும் இடையூறுகளைப் பார்த்தீர்களா?
பத்திரிகையாளர்களுக் கென்று உலகில் ஏதாவது விசேட சட்டம் உண்டா?
பலராலும் கேட்கப்படும் கேள்வி இது!
பயங்கர ஆயுதங்கள்பாவிக்கும் யுத்தபூமிகளில்கூட துணிந்துசென்று செய்தி சேகரிக்கும்பத்திரிகையாளர்கள் சிலசமயம் மரணத்தைத் தழுவிக்கொள்வதும் உண்டு.
ஆனால் — ஒரு போர்வீரன் இறந்தால் கிடைக்கும் கௌரவம் விசேட சலுகைகள் பத்திரிகையாளர்களுக்குக் கிடைப்பதில்லை.
ஏனெனில் அவர்களுக்கென்று விசேடசட்டங்கள் எதுவும்இல்லை. ஆனாலும் மனித உரிமை தொடர்பான அமைப்புக்கள், சிலநாடுகள் அவர்களை சாதாரணப்பிரஜைகள் என்றநிலையிலிருந்து சற்று வேறுபடுத்திப்பார்க்கின்றன.
ஒருமுறை எனது நண்பர் ஒருவர் என்னைச் சதா நச்சரித்துக்கொண்டே இருந்தார்.
'எனக்கு அகில இலங்கைச்சமாதான நீதிவான் (ஜேபி)பட்டம் வேண்டும்!' என்பதுதான் அந்த நச்சரிப்பு.
அவரையும் அழைத்துக்கொண்டு நீதி அமைச்சரைக்காணச் சென்றேன். அவரிடம் விடயத்தைத் தெளிவுபடுத்தினேன்.
"இந்த நண்பர் சமாதான நீதிவானுக்குத் தகுதி உடையவர்" என்றும் சொன்னேன்.
உடனடியாகவே அந்தநண்பரின் சமாதானநீதிவான் விண்ணப்பத்தை வாங்கி, அதில் கையெழுத்திட்டு, செயலாளரை அழைத்து மேல்நடவடிக்கைக்குக் கொடுத்துவிட்டார் அமைச்சர்!
"வேறு எதுவும் விபரங்கள் வேண்டுமா?" என்று அமைச்சரைக் கேட்டேன்.
"உமது சிபாரிசுக்குப்பிறகு வேறு விபரங்கள் தேவையில்லை!" என்றார் அவர்.
இதுவும் ஒருவகை 'ஐஸ்!'
"ஏன் நீரும் ஒரு சமாதான நீதிவான்பதவி பெறலாம்தானே?" என்று திடீர் கேள்வியொன்றை அமைச்சர் போட்டார்.
அவர் என் மடியில் கைவைத்தார்! நாங்கள் இந்தப் பதவிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட 'முனிவர்கள்' என்பது அவருக்குத் தெரியாது.ஆனால் அதை நேரடியாக அவரிடம் சொல்லவும் கூடாது.
"பிறகு பார்க்கலாம்!" என்று சொல்லிச் சமாளித்தேன்.
மற்றொரு சந்தர்ப்பத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் என்னைத் தொலைபேசியில் அழைத்தார். அவர் என் நெருங்கிய நண்பர்.
"உடனடியாகப் பொலிஸ்நிலையம் வரமுடியுமா?" என்றார்.
எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"நான் என்ன குற்றம்செய்தேன்?" என்று கேட்டேன்.
"அறுக்காமல் உடனடியாக வா!" என்றார்.
உடன் புறப்பட்டுச் சென்றேன்.
அங்குசென்றதும் அவர் ஒரு ஜேம்ஸ்பொன்ட் சூட்கேசை எடுத்துப்போட்டார்.
"அதைத்திறந்து பார்!" என்றார்.
நானும் அப்படியே செய்தேன்.
உள்ளே கத்தை கத்தையாகப் பணநோட்டுக்கள்.
நான் திருதிருவென்று முழித்தேன்.வார்த்தைகள் வெளியே வரவில்லை.
"இதை நான் கண்டுபிடித்தேன். சந்தேகப்படும்படியான இடத்தில் இருந்தது. இது யாருடையது என்றே தெரியவில்லை. இப்போது என்ன செய்யலாம்?" என்று கேட்டார்.
நேர்மையான பொலிஸ்அதிகாரி.
இந்தப்பணத்தை அவர் அப்படியே சுருட்டியிருக்கலாம்.
மக்கள் சேவைக்குத் தேவைப்படும் அதிகாரி அவர்!
பணத்திற்குரியவரை கண்டுபிடிக்கும்பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன்.
மொத்தம் 20 ஆயிரம் ரூபாய்.
அந்தச்சந்தர்ப்பத்தில் இது பெரிய தொகை!
'இந்தப்பணம் யாருடையது?' என்றதலைப்பில் பத்திரிகையில் செய்தியொன்றை வெளியிட்டேன். பத்திரிகையில் செய்தி வெளிவந்ததும் உரியவர் வந்து பணத்தைப் பெற்றுக்கொண்டார்.அவர் ஒரு வர்த்தகர். மோட்டார்சைக்கிளில் போகும்போது அந்தப் பெட்டி விழுந்துள்ளது.
பணம் கிடைத்ததும் அவர் நேரடியாக பத்திரிகை அலுவலகத்திற்கு வந்து என்னைச்சந்தித்து நன்றி கூறினார்.
ஆனால்,
நான் சந்தித்த அரசாங்கஅதிபர் ஒருவர் சற்று வித்தியாசமானவர்.
இனவாதத்தைத் தன்னுடமையாகக்கொண்டவர்.
இவரை நான் தமிழரின் புண்ணியபூமியாம் திருகோணமலையில் சந்தித்தேன்.
திருகோணமலை எங்களின் சொந்த மண். எந்தக் காரணம் கொண்டும் இந்த மண்ணை நாம் விட்டுக் கொடுக்க முடியாது.
1970களில் இவரை நான் சந்தித்தேன்.
இனவாதம் தலைவிரித்தாடாத காலம்!
திருகோணமலை ஒரு தமிழ்ப்பேசும் மாவட்டம். அங்கு பெரும்பாலான அரசாங்க ஊழியர்களும் தமிழர்களாகவே இருந்தனர்.
ஆனால் சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் கூறிய விபரமொன்று என்னை வியப்பினுள் ஆழ்த்தியது.
"திருகோணமலையில்சிங்களவர்வாழும்பகுதிகளில் அபிவிருத்தி மேற்கொள்ளப் படுவதில்லை. இதற்கு முக்கியகாரணம் அரசாங்க உத்தியோகத்தர்களில் சிங்களவர் மிகக்குறைவாக இருப்பதுதான். எனவே அரசாங்க உத்தியோகத்தர்களில் நூற்றுக்கு அறுபதுவீதமானோர் சிங்களவர்களாக இருக்கவேண்டும்.!" இவ்வாறு திருகோணமலை அரசாங்க அதிபர் அந்தச் சிங்களப் பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார்.
அரசாங்க அதிபரே இனவாத அறிக்கைகளைவிடலாமா?
நான் அந்த அறிக்கையை வீரகேசரியிலும் பிரசுரிக்கச் செய்தேன்.


அடுத்தநாள் தமிழ் பாராளுமன்றஉறுப்பினர்முதல் பலஅதிகாரிகள், அரசாங்க அதிபரை கேள்விமேல் கேள்விகேட்டு துளைத்துவிட்டார்கள்.
என்னை அவசரமாக வருமாறு அரசாங்க அதிபர் செய்தியனுப்பினார். ஏன் அழைக்கிறார் என்பது எனக்குத் தெரியும்.
செய்ததோ நாரதர் வேலை. கலகம் ஏற்படத்தானே செய்யும்!
ஆனால் நன்மை விளையாவிட்டாலும் பரவாயில்லை. தீமை விளையக் கூடாதல்லவா?
"ஏன் இந்தச் செய்தியைப் பத்திரிகையில் போட்டீர்?"
"ஏன் செய்தியில் ஏதும் பிழையா?"
"இல்லை.ஆனால்இதனைநான் சிங்களப்பத்திரிகைக்குமாத்திரமே கொடுத்தேன். தமிழ்ப்பத்திரிகைக்கு இது அவசியமில்லை!"
"அவசியமா அவசியமில்லையா என்பதைத் தீர்மானிப்பவர்கள் நாங்கள். நீங்களல்ல!சிங்களவருக்கு ஒருமாதிரியும் தமிழருக்கு ஒருமாதிரியும் வேலை செய்யுமாறு உங்களை இங்கே அனுப்பவில்லை! செய்தியில் தவறு என்றால் கூறுங்கள் திருத்தம் போடுகிறோம்!"
"இந்தச்செய்தி உமது பத்திரிகையில் வெளிவந்ததினால் பெரிய பிரச்சினையே ஏற்பட்டுவிட்டது.உள்நாட்டலுவல்கள்அமைச்சிடமிருந்தே என்னைக் கேள்வி கேட்டார்கள்.இதனைப்பிரசுரிக்குமுன் என்னைநீர் ஒருவார்த்தை கேட்டிருக்க வேண்டும்.!"
ஆத்திரத்துடன் அவரிடமிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.
நான் அப்போதும் பொறுமையுடன் பதிலளித்தேன்.
"நீங்கள் ஒருபொறுப்பான அரசாங்கஅதிபர். பொறுப்புடன் நடந்துகொண்டால் நல்லது. எங்கள் கடமையில் குறுக்கீடு செய்யும் அதிகாரம் உங்களுக்குக் கிடையாது. நான் இப்போது என்னசெய்யவேண்டும்? அதைக் கூறுங்கள்!"
"உமதுபத்திரிகைக்கு செய்திகொடுத்தால்மாத்திரமே நீர் பிரசுரிக்கலாம். இங்கு பல வருடங்களாக சிங்களமக்கள் எவ்வித உதவியுமின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் கவனிக்கவேண்டும்!"
"பத்திரிகை என்றால் எல்லாம் பொதுவானதுதான். நீங்களும் பொதுவானவர். சிங்களம் தமிழ் என்று பாகுபாடுபார்ப்பது சரியல்ல. அதிலும் அரசாங்க அதிபராக இருந்து கொண்டு நீங்கள் இப்படிக்கதைப்பது சரியல்ல!"
"ஏன் அப்படிச் சொல்கிறீர்? நான் இனத்தால் ஒரு சிங்களவன். எனது இனத்தவர்கள் துன்பப்படும்போது அவர்களுக்கு உதவிசெய்யவேண்டியது எனது கடமை.!"
ஆத்திரத்துடன் மேசையில் அடித்துக் கதைத்தார்.
"அப்படி நீங்கள் உதவிசெய்யவிரும்பினால் நீங்கள் உழைத்தபணத்திலிருந்து கொடுக்கலாமே! ஏன் தமிழர்களுக்காகவும் செலவிடவேண்டிய அரசாங்க அதிபர்பணத்திலிருந்து அவர்களுக்கு உதவவேண்டுமென நினைக்கிறீர்கள்? ஏற்கனவே அவர்களின் அபிவிருத்திக்காகக் கூடுதல்பணம் ஒதுக்கப்பட்டு உள்ளதே!"
"இது சிங்களவர்களின் நாடு.இங்கு முதல்மரியாதை சிங்களவர்க்கே! முதலில் அவர்கள் இருக்கும் பகுதிகளே அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.!"
அவர் ஆவேசத்துடன் இப்படிக்கூறினால் யாருக்குத்தான் ஆத்திரம் வராது?
"அப்படியானால் தமிழர்கள் தமது சொந்தநாட்டிலேயே இரண்டாந்தரப்

பிரஜைகளா?அவர்களுக்கு இந்த நாட்டில் எவ்வித உரிமையும் கிடையாதா? ஏன் இப்படி நீங்கள் உங்கள் கடமையை மறந்து பேசுகிறீர்கள்!"
ஆத்திரத்துடன் நானும் அவரின் மேசையிலேயே அடித்துக் கூறினேன்.
என் இளம்வயதின் வேகம் அதில் தெரிந்தது.
கச்சேரியிலிருந்த பல உத்தியோகத்தர்கள் அங்கே கூடிவிட்டனர்.
"நீ அதிகம் பேசுகிறாய்! உன்னை இந்தப்பக்கம் வராமல் செய்திடுவேன்.!" என்றார் அவர்.
"அதையும் பார்க்கலாம்!நீங்களா நானா இங்கிருந்து போகப் போகிறோம் என்பதைப்பார்ப்போம்!"
இந்தச்சந்தர்ப்பத்தில் அங்கு வந்த உதவி அரசாங்கஅதிபர் என்னை வந்து வெளியே அழைத்துச்சென்றார்.
அல்லது நிலைமை மிகவும் மோசமாகி இருக்கும்.
உடனடியாக எல்லா அரசாங்க செயலகங்களுக்கும் என்னைப்பற்றிய எச்சரிக்கையை அனுப்பினார்.
நான் வந்தால் அலுவலகத்தினுள் எடுக்கக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தார். 'வீரகேசரி' பிரதம ஆசிரியருடன் தொடர்பு கொண்டார்.
திருக்கோணமலைப் பக்கமே என்னை அனுப்பக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்.
அதைச் சொல்வதற்கு உமக்கு அதிகாரமில்லை என்று பிரதம ஆசிரியர் கூறிவிட்டார்.
நானும் விடவில்லை.
அவருக்கும்எனக்குமிடையே அடிக்கடி வார்த்தைமோதல்கள் இடம்பெற்றன.
அரசாங்க உத்தியோகத்தர்கள் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பதனால் அவர்கள் எனக்குப் பெரும் உதவியாக இருந்தார்கள். தகவல்கள் வந்து கொண்டிருந்தன.
அவர் சிங்களமக்களுக்கு மாத்திரம் சார்பாக நடக்கிறார் என்பதை நான் செய்திகள்மூலமும் செய்திக்கட்டுரைகள்மூலமும் பத்திரிகையில்வெளியிட்டேன்.
இதனால் உள்ளூராட்சி அமைச்சுக்கு புகார்கள் அடிக்கடி போய்க் கொண்டிருந்தன.
ஒருநாள் —
திடீரென அவருக்கு இடமாற்றம் வந்துவிட்டது. நம்பிக்கை வாய்ந்த உத்தியோகத்தர்கள் உடனடியாகவே எனக்கு அறிவித்தனர். நான் அவரை தொலைபேசியில் அழைத்தேன்.
"எப்போது புறப்படுகிறீர்கள்?" என்று கேட்டதும் பதில்சொல்லாமலேயே தொலைபேசியை வைத்துவிட்டார்.
திருகோணமலை புகையிரதநிலையத்திற்கு அவரைவழியனுப்ப சில அரசாங்க அதிகாரிகள் வந்திருந்தனர். அவர்களுடன் நானும் சென்றிருந்தேன்.
அதிகாரிகள் ஒவ்வொருவராக அவருடன் கைகுலுக்கிப் பிரியாவிடை பெற்றனர்.எல்லோரும் விடைபெற்றதின்பின்னர் நான் அவரை நெருங்கினேன்.
கைகுலுக்குவதற்காக கைநீட்டினேன். ஆனால் அவர் கைகொடுக்காமல் மறுபக்கம் திரும்பிக் கொண்டார்.
ஏனையோரும் இதைக் கண்டும் காணாமல் இருந்தனர்.
"இனியாவது உங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டும்!" என்று

அவருக்கு மாத்திரம் கேட்கமளவிற்குக் கூறினேன்.
அவர் திரும்பி என்னை முறைத்துப் பார்த்துவிட்டு புகையிரதத்தினுள் சென்றுவிட்டார்.
இனப்பிரச்சினை வளர்வதற்கு இவரைப்போன்ற அரசாங்க அதிகாரிகளும் முக்கியகாரணமாக இருந்துள்ளனர்.
திருகோணமலை தமிழ்மன்னர்கள் ஆண்ட இயற்கைத் துறைமுகத்தைக் கொண்ட மாவட்டம்.
சிங்களக்குடியேற்றத்தை ஏற்படுத்தி இதைக் கைப்பற்றப்பார்க்கின்றது சிங்கள அரசு!
இப்படியானபிரச்சினைகளுக்கு மத்தியில் தெளிந்தசிந்தனை எப்படி ஏற்படும்?
மற்றொரு சம்பவம்...
திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் என்றொரு அழகிய தமிழ்க் கிராமம்.
எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேலென விளங்கும் வயல்வெளி. பசுமையைப் பார்த்துக் கொண்டிருந்தாலே பசிதீரும். உள்ளத்தில் காதல் உணர்வுகள் போதை ஏற்படுத்தும். கவிதைகள் பீறிட்டுக்கொண்டு வரும்.
சில்லென்ற காற்று மெல்லென்று வீச நெல்மணிகள் முற்றிய நெற்கதிர்கள் நடனமாட, அங்கே சுதந்திரமாய்ப் பறந்துதிரியும் சிட்டுக்குருவிகள் ராகம்பாட, உண்ட களைப்பிலும் உறங்கிக் கொண்டே பசுக்கள் அசைபோட.....
இப்படி வர்ணித்துக் கொண்டே போகலாம்.
அந்தக் கிராமத்தில் உள்ள இளசுகளை காதல் எளிதில் பற்றிக் கொள்ளக் கேட்கவும் வேண்டுமோ!
காதல்கதைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.
நெற்கதிர்களுக்கு மத்தியில் இரு இளசுகள் மனம்விட்டுக் காதலித்தன. ஆனால் உள்ளத்தின் காதல் உடல்களையும் பற்றிக் கொண்டன.
ஜேர்மனியைப் பொறுத்தவரை அது சர்வசாதாரணம்.
உலகிலேயே கருச்சிதைவு நடைபெறும் நாடுகளில் ஜெர்மனியும் முக்கிய இடத்தை வகிக்கிறது.
ஆனால்,
எமதுகலாச்சாரம் திருமணத்துக்குமுன்புகருத்தரிப்பதை அனுமதிப்பதில்லை.
காதலி கர்ப்பிணியானதினால் தம்பலகாமம் கிராமம் அல்லோல கல்லோலப்பட்டது. இருபகுதி பெற்றோரும் கைகலப்பில் ஈடுபடுமளவிற்கு பிரச்சினை பூதாகாரம் எடுத்தது.
இதனால்,
இருதரப்பினரும் பொலிஸ்நிலையம் சென்றனர். பொலிஸாருக்கு விடயம் கிடைத்துவிட்டால் பத்திரிகைக்கும் செய்தி எட்டிவிடும்.
இந்தச் செய்தியைப் பொலிஸாரிடம்பெற்று பத்திரிகையில் வெளியிட்டேன்.
ஆனால் விளைவு விபரீதமாகிவிட்டது.
கர்ப்பிணியான காதலி பெரிதும் பாதிக்கப்பட்டாள்.அதனால் பூச்சிமருந்து அருந்தி அவள் தற்கொலை செய்துகொண்டாள்.
சோகமான முடிவு!
இதனால் அழகிய அந்தக் கிராமமே சிலநாட்கள் சோகத்தில்மூழ்கிக்கிடந்தது.
பத்திரிகைச் செய்திகளால் எதிர்விளைவுகளும் ஏற்படுவதுண்டு.
என்னைப் பாதித்த சோகமான சம்பவம் இது.

ஆனாலும்,செய்தி வெளிவருவதை நான் தவிர்த்திருக்கலாம்.
ஆனால்,மரணத்தை தவிர்த்திருக்க முடியுமா என்பது கேள்விக்குறியே!
பொழுதுகள் புலர்வதும்,புதினங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்ல நாங்கள் சுழன்றுதிரிவதும் பழகிப்போன விடயம்!
இருப்பினும் இந்தச்சுழற்சியில் நின்றுநிதானிக்கும் தெளிந்தசிந்தனை ஏற்படும் என நினைக்கிறீர்களா?
உழைக்கும் பத்திரிகையாளர்களின் உணர்வுகள் சற்று வித்தியாசமானவை என்றுதான் சொல்ல வேண்டும்.


*



அடுத்த இதழில்
ஆரம்பமாகிறது –
குப்பிளான்வை. யோகேஸ்
எழுதும்

**"இந்தப் பூவுக்கொரு வாசம்"**
(தொடர்நாடகம்)

# மண்ணுக்கு வா நிலவே!



நிலவு ஏன் வானத்திலே?
நீள்தரையை அலங்கரித்தால் என்ன?
செயற்கை மின்குமிழ்களுக்கு
ஓய்வளித்து
இயற்கைநிலவின்
குளிர்மைபெறும் நம்பூமி

வானத்தைக்காட்டி நம்முன்னோர்கள்
"நிலா நிலா வா வா நில்லாமல் வா வா!
என்றழைக்கையிலே
ஏமாற்றிய நிலாவே!
காலங்கள் கடந்துவிட்டால்
உன் பெருமையும் குறைந்துவிடும்.

நிலாவைச்சந்திக்க நீள்தரையில் உள்ளோர்
விண்வெளிக்குப் பயணம் வருகையிலே
நீயோ இங்கு வந்தால் என்ன?
அண்ணார்ந்து நாம் பார்ப்பதாலே
கையாலாகாதவர் என்ற நினைவுவேண்டாம்!

துடுப்பிலாப்படகுபோல்
நீலவான் கடலிலே
நீ துடிப்பது பரிதாபம் விரைவில் வா
விடிவைப்பெறு!

விஞ்ஞானிகள் எல்லாம் விண்வெளி வருகையிலே
அஞ்ஞானம் முடங்கியது உண்மைதான்
பால் நிலாவே பட்டுப் பசும்புல்விரித்த
பூமித்தாயிடம் பஞ்சணைகொள்ள வாராயோ?



பழமைப்பூமியை மெருகூட்ட
பழமை நிலாவே
பாலில் குளித்த பால் நிலாவே
புதியவர்கள் எழுதுகின்றோம் புதுக்கவிதை
புத்துயிர்காணும் புதுமைப்பூமியை
பருவநிலாவே பைந்தமிழிலே காதலிக்கவா!

-விக்கினேஸ்வரன்.

# இரவு என்பது

"அந்தக்கிழவனுக்கு எத்தினை வயசிருக்கும்?"
"ஆருக்கு?"
"அந்தா... அந்தச் சிவப்புக் காருக்குப்பின்னாலை, அந்தக் குட்டி மதிலுக்குமேலை சாய்ஞ்சுகொண்டிருக்குதே... ஒருகிழவன்!... அதுக்குத்தான்!"
"கொஞ்சம்பொறு... கிட்டப் போய்ப்பாப்பம்!"
"ஏன் இங்கையிருந்து பார்த்தால் தெரியேல்லையே?"
"இல்லை... கண்ணாடியை விட்டிட்டு வந்திட்டன்!"
"வெளிக்கிடுகிறபோது எடுத்துக் கையிலை வைச்சிருந்தனீங்கள்தானை?"
"மறந்திட்டன்!"
"நல்ல மறதிதான்!"
"வயசுபோட்டுதெல்லே?"
"என்ன வயசுபோட்டுது?... வாறமாதம் முடியத்தானை நாப்பத்தொன்பதும் முடியுது!"
"நாப்பத்தொன்பதெண்டால்... கொகுஞ்சமே?"
"நாப்பத்தொன்பது ஒருவயசேப்பா...? இங்கை எழுபதுவயசிலையும் எத்தினையேர் இளந்தாரியளாட்டம் திரியுதுகள்!"
"ஆர்?"
"இந்த ஜெர்மன்காரர்!"
"அவங்களைவிடு...!"
"ம்...கிட்டவந்திட்டம்...இப்ப பார்த்துச்சொல்லுங்கோ... இந்தா... இந்தாள்தான்...எட...இஞ்சை பாருங்கப்பா!"
"ஓ...இவரா?...இந்தாளுக்கென்ன...ஒரு எண்பது!"
"உங்களுக்கு விசர்...அங்கை ஊரிலை எங்கடை ஐயாவுக்கும் இப்ப எண்பதுவயசுதானை... எவ்வளவு இளந்தாரிமாதிரி இருக்கிறேர்... போனகிழமை போட்டோகூட வந்துதே...! இந்தாளுக்கு இன்னும் கொஞ்சம் கூட இருக்குமப்பா!"
"சரி... ஒரு தொண்ணூறு!"

# இருட்டல்ல!

"இல்லையப்பா...வடிவாய்ப்பாருங்கோ.... இந்தாளுக்கு இப்ப நூறு தாண்டியிருக்கும்.!"
"சரி இருக்கட்டும்!"
"உங்களுக்கு ஒரு இளவும் தெரியாது!...ஒரு ஆளைப்பார்த்து வயசைக்கூட மதிக்கத்தெரியேல்லை... நீங்களெல்லாம் என்னெண்டுதான் இன்னும் நாப்பது அம்பது வருஷம் சீவிக்கப் போறியளோ?"
"என்னது...? நாப்பது அம்பது வருஷமா...? இன்னுமா?"
"ஏன்...வாழ ஏலாதா?"
"இல்லை...வாழக்கூடாது!"
"வாழ்ந்தால் என்ன?"
"இப்பிடித்தான்...! இந்தக்கிழவன்மாதிரித்தான்... எங்கையாவது ஒரு மதில்லைபோய்க் குந்திருந்துகொண்டு... முளுசிக்கொண்டிருக்க வேணும்!...மனிசன் கனகாலத்துக்கு இருக்கப்படாது...அதுகும் கிழடு தட்டிட்டால் போயிரவேணும்...! இருக்கிறது சுமை!... மற்றவைக்கில்லை... தனக்குத்தானே சுமை!"
"சரி விடுங்கோ...பஸ்வந்திட்டுது...போவம்!"



இந்துமகேஷ்.

1.

முதுமை பயமுறுத்துகிறது...

நாளுக்குநாள் தன்னைத்தளர்த்தி தன்னிலிருந்து தன்னை முற்றுமுழுதாய் அந்நியப்படுத்திக் கொண்டிருக்கிற உருவம்.

'நானா இது?' என்று தன்னைத்தான் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளும் போதெல்லாம் தன்னைத்தானே கேட்டுக்கொள்கிற மனோநிலையில் —

வாழ்க்கைப்பயணம்!

ஏனென்று தெரியாமல் ஆரம்பித்து, இதற்குத்தான் என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள் பலவருடங்களை விழுங்கித்தொலைத்தபடி, ஓட்டமாய்ஓடி இன்னதுதான் கிட்டும் என்பதில் ஏமாற்றமே முடிவாய் —

களைத்துச்சோர்ந்தவனாய்....!

'இன்னும் எத்தனை காலத்துக்கு?'

எத்தனை காலமென்றாலும் அது நொடிப்பொழுதாயினும் அல்லது இன்னும் ஒரு நூறு நாட்களாயினும் நூறு மாதங்களாயினும்..... உயிரோடு இருந்து எதைச்சாதிக்கப்போகிறேன்?

தன்னைத்தானே கேட்டுக்கேட்டு —

கேள்விக்குப் பதில்தெரியாமல் கேள்வியே விடையாய்...!

'ஐயா' தெருவில் நடந்துபோய்க்கொண்டிருந்தார்.

ஐயா என்பது இவரைஅழைப்பதற்கு இவரைத்தெரிந்தவர்கள் பயன்படுத்தும் பெயர்.

வயதின் எண்ணிக்கை இவருக்கு 'ஐயா'மூலம் ஒருமரியாதையைச் சேர்த்து விட்டிருந்தது.ஆனால் அந்தமரியாதையில் உண்மை இருக்கிறதா என்பதில் இவருக்கு இன்னும் சந்தேகம் இருக்கிறது.

'ஐயா'என்று இவரை ஒருதரம் அழைத்தால் இவர் கவனிக்க மாட்டார். இரண்டுதரம் அழைத்தாகவேண்டும்.

"கிழட்டுச்சவம்...காது கேட்காதமாதிரிப்போகுது பார்!" என்று சிலர் திட்டுவது ஒரு போதும் இவர்காதில் விழுந்ததில்லை.

முதுமை பொல்லாதது!

ஆனால் சில வேளைகளில் பாதுகாப்பானது.

மனிதன்பேசத்தெரிந்தவனாய்இருப்பதிலும், பார்க்கக்கூடியவனாய் இருப்பதிலும், கேட்கக்கூடியவனாய் இருப்பதிலும் பலசந்தர்ப்பங்களில் ஆபத்துத்தான்.

"என்னையா சவம் என்கிறாய்?உன்னைவிட்டேனா பார் !"என்றுஎதிராளியை மூர்க்கத்தனமாய் முட்டிமோதி வம்பை விலைக்கு வாங்கி...!

என்னத்துக்கு இதெல்லாம்?

காது கேட்காதிருப்பதும் ஒரு வகையில் பாதுகாப்புத்தானே!

'ஐயா' என்று மற்றவர்கள் இவரை அழைப்பதற்குக் காரணமானவைகளில் ஒன்று —

இவரது பெயர் சுப்பையா.

இன்னொன்று — இவர் யாரைப்பார்த்தாலும் ஐயா! என்றுதான் அழைப்பார்.

அந்தக்குரலில் வழியும்பாசத்தை இவரைப்புரிந்தவர்களால்மட்டுமே உணர்ந்து அனுபவிக்க முடியும்.
மற்றவர்கள் இவர் சொல்வதையே திருப்பிச்சொல்வதுபோல் சொல்வார்கள்.
"ஐயா!"
"என்னய்யா?"
இது கிண்டலா? பணிவா? மரியாதையா?
ஏதோ ஒன்று. ஆனால் எல்லோரும் இவரை ஐயா என்பதும், அவர்களை இவர் ஐயா என்பதும் தொடர்கிறது.

இப்போதிருப்பவர்களில் பலருக்கு இவரது பூர்வீகம் தெரியாது.
பத்து வருடங்களுக்கு முன்பு ஜெர்மனிக்கு வந்து இந்த நகரத்தில் அடைக்கலமானவர்களுக்கு இவரைத்தெரியும்.
அவர்களில் பலர் சுவிசுக்கும், டென்மார்க்குக்கும், கொலண்டுக்கும், கனடாவுக்கும் போய்க்குடியேறிவிட்டதால் இப்போது இவரைத்தெரிந்தவர்கள் மிகச் சொற்பம். அந்த மிகச் சொற்பத்திலும் இவரைக்கண்டால் ஒளிந்து கொள்பவர்கள் மிக அதிகம்!

மனிதர் நல்லவர்தான்.
யாருக்கும் சுமையாக வாழவிரும்பாதவர்தான்.
என்றாலும் இப்போதைய சூழ்நிலையில் யாரும் யாருடனும் ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்க விரும்பவில்லை.
கதைப்பதற்கு என்ன வேண்டிக்கிடக்கிறது?
கதைக்கிற நேரத்தில் ஏதாவது செய்து நாலுகாசு தேடிக்கொண்டால் நாளைக்கு 'இவன்' அடித்துத் துரத்தினாலும்சரி, அடிக்காமல் மெதுவாய் வந்து கையைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய் விமானத்தில் ஏற்றி வைத்தாலும் சரி 'நாலு காசு' பிரயோசனப்படும்.
மனிதன் பிரயோசனப்படுவானா?
அதிலும் நாளைக்கு படுக்கையில்விழுந்து விறகாகப்போகிற 'கிழடு'!

கதைக்கிறதோடு சரி.
ஏதாவது காரியம் ஆகிவிட்டால் கணக்காக நழுவிக்கொள்ளலாம்.
உலகம் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும்போது ஓரிடத்தில் நின்றுஒருவரோடு ஒருவர் கதைபேசிக்கொண்டிருக்க முடியுமா என்ன?
— அதிலும் கிழவர்களோடு!

'ஐயா' நடந்துகொண்டிருந்தார்.
குளிர் வாட்டத்தொடங்கியிருந்தது.
மார்கழிப்பனி இன்னும் கொட்டத்தொடங்கவில்லை. ஆனால் அதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.
பனிக்குளிரைக்கூடத் தாங்கிக்கொள்ளலாம். ஆனால், பனிகாலக் காற்றைத்தான் சகித்துக்கொள்ள முடியவில்லை.

விரல்நகக்கண்களில் ஊசிமுனைகளாய்த் துளைக்கிற காற்று.
பதினைந்து வருடங்களுக்குமுன்பு அறுபதுவயதில் வெளிநாட்டில் தஞ்சமடைந்தவர் ஐயா. அப்போது கடுங்குளிரையும் தாக்குப்பிடிக்கிறமாதிரி தைரியமாயிருந்த மனிதர்.மனத்திலும் உடம்பிலும் நிறையவே தெம்பிருந்தது.
இளமையில் 'ஆமிக்காரனாய்' கொஞ்சக்காலம் இருந்தவர் என்பதால் உடல்நலத்தில் அதிக அக்கறை.
'எம்.ஜி.ஆர்' என்று உடற்கட்டைப்பார்த்து நண்பர்களால் வர்ணிக்கப்பட்டவர்.
எல்லாம் ஒரு காலம்!
காலம்தான்.
இவர்காலத்தில் இருந்த எத்தனையோ 'ஆலமரங்கள்' விழுதுகளோடு மண்ணில் சரிந்துவிட்டன.
இவர் மட்டும், — இவருக்குத்தெரியக்கூடியதாய் இவர்மட்டும் — இன்னும் வாழ்கிறார்.
வாழ்கிறாரா?
ம்....வாழ்கிறார்!

சட்டென்று மழைத்துளிகள் சலசலத்து விழுந்தன.
மேலங்கியின் முக்காட்டை இழுத்துத் தலையைப் போர்த்திக் கொண்டார் 'ஐயா'.
நடையை விரைவுபடுத்த முயன்றார். கால்கள் தயங்கின.
பக்கத்துத் தெருவைக் கடப்பதற்காய் ஒருகாலை சற்று அகல, முன் வைத்தார்.
அதே வேகத்தில் கால் முன்னிழுத்துக்கொண்டது.
பிடரி அடிபட நடுத்தெருவில் சறுக்கி விழுந்தார்.
ஏதோ ஒரு வாகனம் பலத்த இரைச்சலோடு அருகில் தரித்ததைமட்டுமே அவர் விளங்கிக்கொள்ளக் கூடியதாய் இருந்தது.
அவ்வளவுதான்...!
அவ்வளவுதான்...!

யார் யாரோவெல்லாம் வருகிறார்கள்... போகிறார்கள்...
எல்லோரும் ஒன்றாய்க்கூடி அவரைச் சூழ்ந்துநின்று இவரது முகத்தை உற்றுப் பார்க்கிறார்கள்...
யார்... யாரெல்லாம்?
எல்லோர்முகங்களையும் முந்திக்கொண்டு அந்தமுகம்மட்டும்...அவள்மட்டும்...
அவள்மட்டும்...
"விடுங்கடா...விடுங்கடா...!"
பழக்கப்பட்ட குரல்...
நெருக்கமாய்... மிகநெருக்கமாய்... காதுகளுக்குள் ஒலித்துக்கொண்டிருக்கிற குரல்...
மனத்துக்குள்சங்கீதமாய்... இன்னும் இன்னும் மறக்கப்படாமல் ஒலித்துக் கொண்டிருக்கிற குரல்....
குரல் மாறாமல் இருக்கும்தான்.

ஆனால் முகம்...?
இத்தனை ஆண்டுகளுக்கும் மாறாமல், இன்னும் அதே இளமையுடன்...!
இது எப்படிச் சாத்தியமாயிற்று?
இந்த நாற்பதுவருட இடைவெளியிலும் இன்னும் அதே இருபதில்...!
சொர்ணம்!
இது உனக்கு யார் தந்த வரம்?

வெற்றிலை வாய்ச்சிரிப்பில் உள்ளத்தை அள்ளி எடுத்துக் கொண்டு
"எண்ணி எண்ணி எந்தன் மனம் இன்பம் கொண்டாடுதே...
என்னையறியாமல் உள்ளம் துள்ளிவிளையாடுதே
என்னையறியாமல் உள்ளம் துள்ளிவிளையாடுதே!"
பக்கத்தில்நின்று மெட்டெடுத்துப் பாடிச்சிரித்துப் பாவனைகாட்டும் சொர்ணம்...
சினிமாக்காரி கெட்டாள்போ!

"என்ன? என்ன? என்னாச்சுது உங்களுக்கு?...ஏன் இப்பிடித்தனிய அலைஞ்சு திரிஞ்சு கஷ்டப்படுறியள்?...ஒழுங்காய் வீட்டிலையே இருக்கலாம்தானை?"
"ஏலாதே சொர்ணம்.. ஆர் இருக்கினம் எனக்கு?...நீயும் என்னைவிட்டுப் போனபிறகு!"
"விட்டிட்டுப்போயிற்றனா? நானா? உங்களையா?... அப்ப இப்ப உங்களுக்குப் பக்கத்திலை நிற்கிறது ஆரெண்டு நினைக்கிறியள்? ...நான்தான்... உங்கடை சொர்ணம்தான்!"

மெதுவாய்க் கண்களைத்திறந்துபார்க்கிறார் ஐயா.
அருகில் யாரையும் காணோம்!
தனியாய் ஒரு அறைக்குள் அவர்மட்டும்தான்!
தெருவில் கால் தடுக்கிவிழுந்தது நினைவுக்கு வருகிறது...
யாரோ ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்த்திருக்க வேண்டும்!
யாரென்று தெரியவில்லை.
கதவைத்திறப்பதற்கு முன்பதாக யாரோ மெள்ளத்தட்டும் சத்தம் கேட்கிறது

(தொடரும்)

## ஆக்கத் தேர்வுப் போட்டி

(பரிசுபெறும் படைப்புக்களும் தேர்ந்த வாசகர்களில் பரிசுக்குரியவர்களும்)

அதிக வாசகர்களைக் கவர்ந்த சிறுகதை

*"கறை"*

எழுதியவர் **அமுதநதி சுதர்சன்**

(Germany)

தேர்ந்த வாசகர்களில் பரிசுபெறும் வாசகர்

**செ.யோகநாதன்**

(Bremen, Germany)

---

அதிக வாசகர்களைக் கவர்ந்த கட்டுரை

*"சைவ சமயமும் சர்வமத சமரசமும்"*

எழுதியவர் **சி.கமலநாதன்**

(Germany)

தேர்ந்த வாசகர்களில் பரிசுபெறும் வாசகர்

**இராஜன் முருகவேல்**

(Bremen, Germany)

---

அதிக வாசகர்களைக் கவர்ந்த கவிதை

*"தாயகத்திலிருந்து ஓர் மடல்"*

எழுதியவர் **க.ஸ்ரீதாஸ்**

(Netherland)

தேர்ந்த வாசகர்களில் பரிசுபெறும்வாசகர்

**ப.இராஜகாந்தன்**

(France)

*இனிய தமிழ் ஏடு.*

Stadt-
Bibliothek
Bremen

இப்பொழுது-
பிரேமன் பொதுநூலகத் தமிழ்ப்பிரிவில்
அதிகளவிலான தமிழ்நூல்கள்-
உங்களுக்கெனக் காத்திருக்கின்றன!

மேலும் சில தொகுப்புக்கள் விரைவில்
வரவிருக்கின்றன!

வாசிப்பதால் நாங்கள்
அதிகமாய் அறிகிறோம்
அதிகளவு நூல்கள்
நம் மொழிவாழ உதவும்!

**வாசிப்பதால் மனிதன்
முழுமனிதனாகிறான்.**

பிரேமன் பொதுநூலகத்திலுள்ள
ஏனைய தமிழ் நூல்கள் பற்றிய
விபரங்களுக்கு:-

Kultur Büro-Tenever
(Tamilische Sektion)
Neuwieder Str 44A
28325 Bremen
Germany.



பண்பாடி வளர்கின்ற பரதக் கலை-இந்தப்
பார்மீது இதற்கொன்றும் ஈடு இல்லை!
பல்லாண்டு வாழ்ந்தாலும் பழமை இல்லை-இதைப்
பயில்வோர்க்கு உண்டாகும் தெய்வநிலை!



மேலான ஹரனப்பிரிய நர்த்தனாலயம் -மங்கை
மேனகாவின் கலைத்திறனைச் சொல்லும் ஆலயம்!
சீரான மாணவிகள் *தீபனா, கிறிஸ்டில்* -என்றும்
சிறந்தோங்கி வாழ்கவென வாழ்த்துச் சொல்லுவோம்!